விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 24 வெள்ளிக்கிழமை (10.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 326

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# பட்ஜெட் - 2018



(கொழும்பு) நாட்டின் பொருளாதாரத்தினை மீளவும் சரியான தடத்தில் முன்னெடுத்துச் செல்வதனை இலக்காக கொண்டு "நீலப்பசுமை" எனும் தொனிப் பொருளில் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- வடக்கு - கிழக்கில் ஐம்பது ஆயிரம் கல் வீடுகள்
- அத்தியாவசியப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்
- வட - கிழக்கு மக்களின் மீள்குடியமர்வுக்கு மூன்று ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு
- முச்சக்கரவண்டிக்கு மீற்றர் கட்டாயம்
- வடக்கில் முஸ்லிம்களை மீள் குடியமர்த்துவதற்கு நிதி
- மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு
- சொகுசு வாகனங்கள் மீது இறக்குமதி வரி விதிப்பு
- மின்சார ஓட்டோக்கு 90 சதவீத வரிக் குறைப்பு
- மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள் ரூபா 10 இலட்சத்தால் குறைப்பு
- காணாமல் போனோர் அலுவலகத்துக்கு 1.4 பில்லியன் ஒதுக்கீடு
- சுயதொழில் புரிவோருக்கு கடன்திட்டத்துக்கு 500 மில்லியன் ஒதுக்கீடு

24-ம் பக்கம்

## துண்டுவிழும் தொகையை குறைத்து சலுகை வழங்கும் யோசனை

### வரவு - செலவு திட்டத்தில் முன்மொழிவு

(கொழும்பு)

2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகையை குறைத்து சமூகத்தில் சகல துறைகளுக்கும் சலுகைகளை வழங்குவதோடு பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான யோசனைகள் அடங்கிய வரவு - செலவு திட்டம் 23

## பட்ஜெட்டின் போது மின்சாரம் தடை

(கொழும்பு)

2018ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் நேற்று சமர்ப்பிக்கும் நேரத்தில் நாடாளுமன்றத்தில் திடீரென மின்சாரத் தடை ஏற்பட்டது.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களின் வருகைக்காக அனைவரும் காத்திருந்த சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றில் திடீரென இருள் சூழ்ந்தமை 23

## இறுதி யுத்தத்துக்கு பின்னர்
## தமிழரின் மனதை வென்றெடுத்து பிரச்சினையை தீர்த்திருக்கலாம்!
### வரவு - செலவு திட்ட உரையில் மங்கள

(கொழும்பு)

2009 போருக்கு பின்னர் தமிழர்களின் மனதை வென்றெடுத்து, பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்கலாம். எனினும், அந்த ஆட்சியாளர் தாங்களுடைய குடும்பத்தை கட்டியெழுப்புவதில் அக்கறை கொண்டிருந்தனர்.

இவ்வாறு வரவு செலவுத்திட்ட உரையில் மங்கள சமரவீர தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை தொழில்துறையை ஊக்குவிக்கும் (எண்டர்பிரைஸ் பட்ஜெட்) வரவு-செலவுத்திட்டம் என்று, மங்கள பெயரிட்டார். (ம)

## மின்சார வாகனங்களுக்கு முன்னுரிமை எரிபொருள் பாவனையை நீக்க உத்தேசம்

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது, 2025 ஆம் ஆண்டளவில் அனைத்து அரச வாகனங்களும் ஹைபிரிட் அல்லது மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களாக மாற்றப்படும் என நிதியமைச்சர் அறிவித்தார்.

டீசலில் இயங்கும் முச்சக்கர வண்டிகளுக்கு 50 ஆயிரம் ரூபா மேலதிக வரி விதிக்கப்படவுள்ளதாகவும் மின்சாரத்தில் இயங்கும் காருக்கு 10 இலட்சம் ரூபா வரி குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

முச்சக்கரவண்டி சாரதிகளை சுற்றுலா வழிகாட்டிகளாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதற்கான பயிற்சிகளை 23

## புனர்வாழ்வளிக்கப்பட்ட வடக்கு இளைஞர்களுக்கு நிதியுதவி

(கொழும்பு)


புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் அடிப்படை கல்வித்தகைமை அற்றவர்களாக காணப்படுகின்றனர்.

இவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக தொழிற்பயிற்சி வழங்குவதற்காக நிதி அமைச்சர் முன்மொழிவுகளை நேற்று பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட உரையின்போது முன்வைத்துள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட 12 ஆயிரத்து 600 இளைஞர்களுக்கு என்.வி.கியூ தொழிற்பயிற்சியினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் நலன்கருதி 23

## இராணுவத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐ.நா கவனம் செலுத்தும்



### பொதுச் செயலாளர் ஸ்டீபன் டுஜாரிக்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐ.நா. கவனம் செலுத்தும் என ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்கள் மீது இராணுவத்தினர் சித்திரவதைகளை மேற்கொண்டனர் என ஐரோப்பாவில் உள்ள பாதிக்கப்பட்ட சிலர் சர்வதேச ஊடகமான அசோசியேட்டட் பிரஸிடம் தெரிவித்திருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் கேள்வி எழுப்பிய 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பெயர் மாற்றம்

ஈவினை தெற்கு புன்னாலைக்கட்டு வனை வசிப்பிடமாகக் கொண்ட காந்தி விஜயகுமார் ஆகிய எனது பெயரை இன்று முதல் சாந்தி விஜயகுமார் என மாற்றம் செய்து அப் பெயரினையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
சாந்தி விஜயகுமார்

(1281)

## ஏல விற்பனை

யா/நாவாந்துறை றோ.க.த.க பாடசாலையில் 24.11.2017 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் வருடாந்த பொருட் கணக்கெடுப்பின் பின்னரான பாவனைக்கு உதவாத மாணவர்களின் கதிரை, மேசை போன்ற மரதளபாடங்களின் ஏல விற்பனை நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

(1276) -அதிபர்

# ஒரு நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும்

## நாமலுக்கு சம்பந்தன் தக்க பதில்

(கொழும்பு)

ஒரு நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும், பிரச்சினைகள் உருவாகுவதற்கு அடிப்படைக் காரணம் ஓர் அரசியல் தீர்வு ஏற்படாமையே ஆகும். எனவேதான் அரசியல் தீர்வு விடயத்தில் கூடிய அக்கறை செலுத்தவேண்டியது எமது கடமை என எதிர்க் கட்சித்தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவரிடம் தமிழில் ஒரு கேள்வியை எழுப்பியிருநதார்.

அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்பதைக் காரணங் காட்டி தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக் கோராது மௌனமாக இருக்க முடியாது என்பதை மூத்த அரசியல்வாதி சம் பந்தன் ஐயா ஏன் உணரவில்லை? என்று நாமல் தனது டுவிட்டர் தளத்தில் தமிழில் கேள்வி கேட்டிருந்தார்.

இதற்கு இரா.சம்பந்தன் தமிழில் தக்க பதில் வழங்கியுள்ளார்.

அதில், ஒரு நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும். கடந்த 70 வருடாங்களாக அவ்வாறான ஒரு தீர்வைப் பெறுவதற்கு தமிழ் மக்களும், தமிழ் அரசியல் கட்சிகளும் கடுமையாக உழைத்து வந்திருக்கின்றார்கள்.

ஏனைய பிரச்சினைகள் உருவாகுவதற்கு அடிப்படைக் காரணம், ஓர் அரசியல் தீர்வு ஏற்படாமையேயாகும். எனவேதான் அரசியல் தீர்வு விடயத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டியது எமது பிரதானமான கடமை என்று நாங்கள் கருதுகின்றோம். அதன் மூலமாகத்தான் எமது மக்கள் பூரணமான சமாதானத்தையும் சமத்துவத்தையும் பெறமுடியும்.

ஏனைய விடயங்கள் தொடர்பில் நாங்கள் கவனம் எடுக்காமல் இருக்கின்றோம் என்று கூறுவது ஒரு பொறுப்பற்ற பேச்சாகும். உள்நாட்டில் அரசுடனும், நாடாளுமன்றத்திலும், வெளிநாடுகளில் சர்வதேசத்துடனும் ஒவ்வொரு விடயங்கள் சம்பந்தமாகவும், அரசியல் கைதிகள் விவகாரம், காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கடும் முயற்சியெடுத்து வந்திருக்கின்றோம். இந்தக் கருமங்கள் முறையான பாதையில் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவை முழுமை பெறாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் என்னவெனில், துவேசவாதிகள், பெரும்பான்மை மக்கள் மத்தியிலும், இராணுவத்தினர் மத்தியிலும் இனத்துவேசத்தைக் கிளறுகின்றதன் விளைவாக ஏற்படுகின்ற தடைகளேயாகும்.

எம்மை விமர்சிப்பவர்கள் நியாயபூர்வமாக அரசியல் தீர்வு சம்பந்தமாகவும், ஏனைய விடயங்கள் சம்பந்தமாகவும் தங்களுடைய நிதானமான ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்குவார்களாகவும் இருந்தால் சகல பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு.

பொறுப்பற்ற பேச்சில் ஈடுபடாமல் அவ்விதமான ஆதரவை நல்கும்படியாக நாம் கேட்டுக் கொள்கிறோம் என்று இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். (ம)

## நல்லை மங்கையர்க்கரசியின்

# மனம் நெகிழஞ்சலி



திரு.தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி சுதர்சினி சிவஸ்ரீ அவர்களின் அன்பு மாமனாரும் வட மாகாண கல்வி அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.ஸ்ரீ.சிவஸ்ரீ அவர்களின் அன்புத் தந்தையாருமான திரு.தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் பிரிவுத்துயரில் நாமும் பங்கேற்பதுடன் அவரின் ஆத்மா இறைவன் தாள் சேர பிரார்த்திக்கின்றோம்.

(C-343)

2017.11.10

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

## எழிலன் மீதான ஆட்கொணர்வு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

(மல்லாவி)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்து காணாமல் போக செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் திருகோணமலை அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட 12 பேரின் ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை வழக்கு நேற்று வியாழக்கிழமை காலை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது, இறுதிப்போரின் போது. வெள்ளைக் கொடியுடன் இராணுவத்திடம் சரணடைந்த நிலையில் காணாமல் போயிருந்த எழிலன் உட்பட 05 பேர் தொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்று வரும் நிலையில் அதன் எழுத்து மூலமான அறிக்கை நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் பதில் நீதவான் ப.சுதர்சன் முன்னிலையில் நடைபெற்றபோது, சட்டவாளர் கே.எஸ்.ரட்ணவேல் அதன் பிரதியை கையளித்துள்ளார்.

இதேவேளை, எழிலன் உட்பட 05 பேரினதும் வழக்கு தொடர்பான அறிக்கை வவுனியா மேல் நீதிமன்றுக்கு அனுப்பப்படவுள்ளது.

அடுத்த கட்டமாக ஏனைய 07 பேரினதும் ஆட் கொணர்வு மீதான வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ம-15)


# யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை

# புலமைப்பரிசில் பரீட்சை-2017



சித்தியடைந்த மாணவர்கள் அதிபர், வகுப்பாசிரியர்களுடன்

வருடாந்த
பரிசளிப்பு விழா
இன்று (10.11.2017)
வெள்ளிக்கிழமை
பி.ப 1.30 மணி



70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் அதிபர், ஆசிரியர்களுடன்

தலைவர்
திருமதி ம.குணபாலன் (அதிபர்)

சிறப்பு விருந்தினர்
திரு.சூ.நோபேட் உதயகுமார்
(கோட்டக் கல்வி அதிகாரி சங்கானை)

பிரதம விருந்தினர்
உயர்திரு.பா.கஜதீபன்
(மாகாண சபை உறுப்பினர் வட மாகாணம்)

கௌரவ விருந்தினர்கள்
Dr.திருமதி சு.அகிலன்
(வைத்திய அதிகாரி-யாழ்.போதனா வைத்தியசாலை பழைய மாணவர்)

திரு.ந.சிவரூபன்
(பழைய மாணவர், கிராம அலுவலர்-அராலி)

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவச் செல்வங்கள்



தி.ஓவியா (170) த.தியான் (170) வ.ஆர்த்திகா (168) பி.டிறுஷனா (168) நீ.புவியரசன் (165) கோ.கஸ்தூரி (165) வீ.புகழினி (162) றெ.பரணிகா (161)

(1283)

வாழ்த்துவோர்:-பெற்றோர்

# தமிழர்கள் மீதான சித்திரவதை குறித்து இலங்கை அரசு விசாரணை நடத்தும்

## வெளிவிவகார அமைச்சின் செயலர் காரியவசம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தமிழர்கள் மீது தற்போதும் சித்திரவதைகள் இடம்பெறுவதாக, வெளியாகியுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சின் செயலர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

மைத்திரி - ரணில் ஆட்சியில் சித்திரவதை செய்யப்பட்ட 52 தமிழர்களின் சாட்சியங்களுடன் அசோசியேட்டட் பிரஸ் ஆய்வு அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பிரசாத் காரியவசம்,

"எந்தவொரு சித்திரவதைகளையும் இலங்கை அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

நாட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சித்திரவதைகள் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்யப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

இந்த முயற்சிக்கு நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புக்களின் ஒத்துழைப்பும் உதவிகளும் அவசியம். விசாரணைகளுக்கு ஆதாரங்கள் முக்கியம்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் நல்லிணக்கம், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள் ஊக்குவிப்பு போன்றவற்றுக்கும், சித்திரவதைகளைத் தடுப்பதற்கும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கம் எந்தவிதத்திலும் சித்திரவதைகளை ஏற்றுக்கொள்ளவோ அல்லது சகித்துக் கொள்ளவோ மாட்டாது.

சித்திரவதைகளை முற்றாக ஒழிப்பதற்கும், இத்தகைய குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கவும் இருதரப்பு பங்காளர்கள், அனைத்துலக அமைப்புகள் தமது அனுபவங்களையும் ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் இலங்கைக்கு வழங்கி உதவ வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

---

## புதிய அரசியலமைப்புக்கு எதிராக

# மைத்திரி அணியும் போர்க்கொடி தூக்கும்

## விஜயதாஸ ராஜபக்ஷ தகவல்



(கொழும்பு)

புதிய அரசமைப்புக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காது என்றும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பக்கமுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் எதிராகவே வாக்களிப்பார்கள் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் நீதி அமைச்சருமான விஜயதாஸ ராஜபக்ஷ எம்.பி.தெரிவித்தார்.

சமஷ்டிக்குச் சார்பாகவும், வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் ஆலோசனையின் பிரகாரமும் செயற்படும் இரண்டு அரசியல்வாதிகளாலேயே இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பு இலத்திரனியல் ஊடகமொன்றில் நடைபெற்ற அரசியல் விவாத நிகழ்வில் பங்கேற்று, புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சமஷ்டி என்ற சொற்பதம் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாவிட்டாலும், நாடாளுமன்றத்தில் குழுநிலையின்போது, ஒத்திவைப்புப் பட்டியல் நீக்கப்படும்.

ஆளுநருக்குரிய அதிகாரங்கள் மீளப்பெறப்படும். திருத்தமொன்றை முன்வைத்தால் புதிய அரசமைப்பு சமஷ்டியாக மாறிவிடும். எனவே, இதுவிடயம் தொடர்பில் விழிப்பாகவே இருக்க வேண்டும் இலங்கையிலுள்ள மொத்த தமிழ் மக்களினின் எண்ணிக்கையில், அரைப் பங்குக்கும் குறைவான மக்களே வடக்கில் வாழ்கின்றனர்.

எதற்காக அவர்களுக்குத் தனி அலகொன்று தேவைப்படுகின்றது. நிர்வாக மட்டத்திலான அதிகாரங்களைப் பகிரலாம். அதற்கான சிறந்த தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டம் இருக்கின்றது. அதை எப்படிப் பாதகமில்லாத முறையில் அமுல்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆராய வேண்டும்.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் இன்று என்ன நடைபெறுகின்றது என்பது கூட சிலருக்குத் தெரியாமல் இருக்கின்றது. சமஷ்டிக்குச் சார்பான இருவராலேயே இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒருபோதும் மக்கள் ஆணை வழங்கமாட்டார்கள். ஏன், நாடாளுமன்றத்தில்கூட மூன்றிலிரண்டு ஆதரவைப் பெற முடியாமல் போகும்.

ஜனாதிபதி பக்கமுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் எதிராகவே வாக்களிப்பார்கள். அப்படி நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவைத் திரட்டினாலும் சர்வஜன வாக்கெடுப்பின்போது மக்கள் ஆணை கிடைக்காது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# பட்ஜெட் விவாதத்தின் பின்னரும் அரசியலமைப்பு குறித்து விவாதம்

## சபாநாயகர் கரு தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலமைப்பு பேரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு நடவடிக்கை குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கருத்து தெரிவிக்க வரவு-செலவுத்திட்ட விவாதத்தின் பின்னரும் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே ஒதுக்கப்பட்ட மூன்று நாட்களுக்கு மேலதிகமாக மேலும் இரண்டு நாட்களை ஒதுக்க அண்மையில் சபாநாயகர் கரு ஜெயசூரிய நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.

எனினும், நேற்று முன்தினமும் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் நேரத்திலும் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாராக இருந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்ட சபாநாயகர் கரு ஜெயசூரிய, பிரதமர் மற்றும் சபை முதல்வருடன் கலந்துரையாடி, வரவு-செலவு த்திட்ட விவாதத்தின் பின்னரும் அரசியலமைப்பு நடவடிக்கை குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பில் கருத்துக்களை முன்வைக்க மேலும் ஒரு நாளை ஒதுக்க நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-7)

---

# நல்லாட்சி அரசாங்கத்தின் நீதி சரிசமமாக பகிரப்படவில்லை

(கொழும்பு)

வட கிழக்கு பிரதேசங்களில் நல்லாட்சி அரசாங்கத்தின் நீதி சரிசமமாக பகிரப்படவில்லை என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் புனர்வாழ்வளிக்கப்பட்ட சமூகமயமாக்கப்பட்ட நபர்களின் ஒன்றியத் தலைவருமான கந்தசாமி இன்பராசா தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் அமைந்துள்ள கட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் நிருபர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

---

# காமினி செனரத் நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காரியாலய சிரேஷ்ட உத்தியோகத்தரான காமினி செனரத் நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடி தொடர்பில் காமினி செனரத் உட்பட சந்தேகநபர்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் நிதி மோசடி விசாரணைப் பிரிவு அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் நிறுவனங்களிலிருந்து பாரிய அளவிலான நிதி மோசடியை மேற்கொண்டு தனிப்பட்ட ரீதியிலான நிறுவனமொன்றை நடத்திச் சென்றதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்தின் பங்குதாரர்களான பியாச குடாபாலகே மற்றும் நீல் பண்டார ஆகியோர் குறித்த வழக்கின் ஏனைய சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (இ-7)

---

# வீதியில் தவிக்கும் தமிழ்த் தாய்மாரின் பிரச்சினையைத் தீருங்கள்-றிசாத்

(கொழும்பு)

கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தில் பெரும் இன்னல்களை அனுபவித்த வடக்கு மக்கள் இன்னும் பல பிரச்சினைகளுடன் வாழ்கின்றனர்.

தமது பிள்ளைகளை தேடித்தருமாறு 200 நாட்களுக்கு மேல் வீதியில் போராடுகின்றார்கள். முதலில் அதற்கு தீர்வைப் பெற்றுக் கொடுங்கள் என அரசாங்கத்திடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார். புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை தொடர்பான ஐந்தாம் நாள் விவாதத்தில், நேற்று முன்தினம் புதன்கிழமை பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

---

# நாடு பாதகமான நிலைக்குச் செல்கிறது

## ஜி.எல்.பீரிஸ் கவலை



(கொழும்பு)

நாடு பாதகமான ஓர்நிலைக்குச் செல்வதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் திறனற்ற முகாமைத்துவத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பெட்டிக் கடைகள் இதனை விடவும் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்யப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரச்சினை ஒன்று தலைதூக்கியவுடன் ஒவ்வொருவரும் மற்றையவரை குற்றம் சுமத்துவதில் காலத்தை கடத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் மீதான மனு

## 14ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 1996ஆம் ஆண்டு இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீள விடுவிக்குமாறு கோரி யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பன்னிரண்டு ஆட்கொணர்வு மனுக்களில் ஒன்பது மனுக்கள் அநுராதபுரம் நீதிமன்றில் விசாரணையில் உள்ள நிலையில் அவ் ஒன்பது மனுக்களையும் நிராகரித்து ஏனைய மூன்று வழக்குகள் மீதான விசாரணையும் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு ஒத்திவைத்து யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளை பிறப்பித்துள்ளார்.

நேற்றைய தினம் மன்றில் சட்டத்தரணி சுபாஜினி கிஷோர் ஊடாக தாக்கல் செய்யப்பட்ட இவ் ஆட்கொணர்வு மனுவில் சட்டத்தரணி குருபரன் மனுத் தொடர்பாக விவாதம் செய்திருந்தார்.

இதன்படி அவ் ஆட்கொணர்வு மனுவில், யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டில் இருந்தபோது ஒப்ரேசன் ரிவிரெஸ ஊடாக யாழ்ப்பாணம் முழுவதும் இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்ட போது யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளவும் 1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் குடியமர்ந்தார்கள்.

இதன்போது சாவகச்சேரி, நாவற்குழி, அரியாலை பகுதிகளில் இராணுவத்தால் கடத்தப்பட்டு இராணுவத்தாலேயே இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்கள் என மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த ஆட்கொணர்வு மனுக்களை பரிசீலித்த நீதிமன்றமானது இவற்றில் ஒன்பது மனுக்கள் ஏற்கெனவே அநுராதபுரம் நீதிமன்றில் விசாரணையில் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அவ் மனுக்களை தள்ளுபடி செய்திருந்தது.

1996ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட காரணத்தினால் காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீள விடுவிக்குமாறு கோரி கடந்த 2003ஆம் ஆண்டு யாழ்.மேல் நீதிமன்றில் 45 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அவ் வழக்குகளில் எதிரிகளாக பலாலி இராணுவ கட்டளை தளபதி, அக்கால இராணுவ தளபதி லயனல் பலகல மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் போது அக் காலப்பகுதியில் இராணுவ தளபதியாக இருந்தவர் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் யாழ்.மேல் நீதிமன்றில் பாதுகாப்பு காரணங்களுக்காக அங்கு செல்ல முடியாது எனவும் தமது சட்டத்தரணிகளை பாதுகாப்பு காரணத்தால் முன்னிலையாக்க முடியாது எனவும் கூறி இவ் வழக்குகளை அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றுமாறு வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இவ் வழக்குகளை பரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அவ் 45 வழக்குகளையும் அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றுமாறு 26.09.2008 தீர்ப்பளித்தது. எனினும் அநுராதபுரம் நீதிமன்றுக்கு காணாமல்போனவர்களின் உறவினர்கள் செல்லாத காரணத்தினால் அவ் வழக்கிற்கு என்ன நடந்தது என்பது தெரியாத நிலையில் உள்ளது எனவும் நீதிபதி குறிப்பிட்டார்.


மேலும் குறித்த வழக்கானது அநுராதபுரம் நீதிமன்றில் என்ன நிலையில் உள்ளது என்பது தெரியாத நிலையிலும் அது முடிவுறுத்தப்படாத நிலையிலும் அதே வழக்குகளை மீளவும் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்ய முடியாது என கூறி அவ் ஒன்பது மனுக்களையும் தள்ளுபடி செய்ததுடன் அவ் வழக்குகளை அநுராதபுரம் நீதிமன்றில் என்ன நிலையில் உள்ளது என்பது தொடர்பாக பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியிருந்தார்.

இதனை தொடர்ந்து நேற்றைய தினம் மேலும் மூன்று புதிய ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அம் மனுக்களினை மேற்குறித்த அதே காலப் பகுதியில் அதே இடத்தில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களான கணேசலிங்கம் கிருபாகரன், பொன்னம்பலம் கண்ணதாசன், ஜேசுதாஸ் ஸ்ராலின் ஜீவா ஆகியோரது பெற்றோர் மற்றும் சகோதரன் ஆகியோர் தாக்கல் செய்திருந்தனர்.

அக் காலப்பகுதியில் நாவற்குழி இராணுவ தளபதியாக கடமையாற்றிய துமிந்த கெப்புவலான இம் மூவரையும் கைது செய்து அழைத்து சென்றதாகவும் அதன் பின்னர் அவர்கள் திரும்பி வரவில்லை எனவும் அம் மனுவில் குறிப்பிட்டுள்ளதுடன் அதில் எதிரிகளாக அக் காலப் பகுதியில் யாழ். இராணுவ கட்டளை தளபதியாக, கொழும்பு இராணுவ தளபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டும் உள்ளனர்.

இதனை தொடர்ந்து குறித்த இம் மூன்று மனு மீதான விசாரணைகளையும் இம் மாதம் 14ஆம் திகதிக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் அதுவரை இவ் வழக்கை ஒத்திவைக்கவும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டார். (ம-4,9)


அகவை 60 இல் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



கௌரவ டக்ளஸ் தேவானந்தா

இன்று 10.11.2017இல் தனது 60ஆவது அகவையில் காலடி பதிக்கும் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

- நண்பர்கள்

(C-346)



31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 17 . 04 . 1940



விண்ணில் 11 . 10 . 2017

அமரர் மத்தியாஸ் கனகம்மா


பிறப்பிடம்: வந்தாறுமூலை, மட்டக்களப்பு
வசிப்பிடம் : வெளிச்சவீட்டு ஒழுங்கை, பருத்தித்துறை

எங்கள் பாசமிகு அம்மாவே!
உங்கள் மறைவைத் தாங்கும் சக்தி எமக்கில்லை
கண்ணுக்குத் தெரியாத உருவாக நீங்கள்
இருந்து எம்மைத் தாங்கிக் கொள்ளுவீர்கள்
என்று காத்திருக்கின்றோம்

தகவல்: ஆபேல் அந்தோனிமுத்து (முத்துராசா - நோர்வே) பருத்தித்துறை, யாழ்ப்பாணம். தொ.பே : 0766084421

இவரின் பிரிவால் துயருறும் முத்துராசா (மருமகன்) இராசமணி (மகள்), பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(C-345)

கிரிக்கெட் அவுஸ்திரேலிய லெவின் அணிக்கு எதிராக அடிலெய்ட் ஓவலில் நடைபெற்றுவரும் ஆஷஸ் தொடருக்கான பயிற்சிப் போட்டியில் இங்கிலாந்தின் முன்னணி வேகப் பந்துவீச்சாளர் ஜேக் போல் காயமடைந்தபோது...

# பாராளுமன்ற இடப்பகுதியின் உரிமையை மாற்றத்திட்டம்



(கொழும்பு)

பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்காக பயன்படுத் தப்படுகின்ற இதுவரை பாராளுமன்றத்திற்கு உரித்தற்று காணப்படுகின்ற இடப்பகுதியின் உரிமையைமுறையானமுறையில் இலங்கைப் பாராளுமன்றத்திற்கே பெற்றுக் கொடுப்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கே அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இடப்பகுதி இதுவரை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வேலைவாய்ப்பு இல்லை

# மீண்டும் போராட்டம் நடத்த வடக்கு பட்டதாரிகள் முடிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கிலுள்ள பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவதாக கூறி தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருவதால், தாம் மீண்டும் போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளதாகவட மாகாணவேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

வட மாகாண வேலையற்ற பட்டதாரிகளின் நிர்வாக உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் பட்டதாரிகளுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டு பல மாதங்கள் கடந்தும் இதுவரை நியமனம் தொடர்பான சரியானதொரு தகவல்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. எனவே தற்போது தேர்தலுக்கான அறிவித்தல் வெளியாகியுள்ளது. தேர்தலுக்கு முன் எமக்கான நியமனங்களை வழங்குதல் வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.

மேலும் இந்த விடயத்தை வலியுறுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலகம் முன் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தத் தீர்மானமெடுக்கப்பட்டுள்ளது. இப் போராட்டத்தில் வட மாகாணத்தில் உள்ள அனைத்து பட்டதாரிகளும் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை கடந்த ஜூலை மாதம் இடம்பெற்றது. இதில் வடக்கில் இருந்து 3000 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் தோற்றியிருந்தனர். அதில் 1680 பேர் சித்தியடைந்த நிலையில் அவர்களுக்கான பெறுபெறுகள் கடந்த ஓகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டிருந்தது. 177 பேருக்குரிய வெற்றிடம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை அதற்காக நேர்முகப்பரீட்சை இடம்பெறவில்லை. அது தொடர்பில் உரிய பதிலும் எவராலும் தரப்படவில்லை. எமது கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் இவ்வாறான பரீட்சைகளை நடத்திவிட்டு தற்போது திறைசேரியின் அனுமதி கிடைக்கவில்லை, ஆளணிகள் நிரப்பப்பட்டுள்ளது என மாறி மாறி எம்மை வைத்து பந்தாடுகிறார்கள் எனவும் பட்டதாரிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். (இ-9)

## வீணாகான குருபீடம் நடத்தும்

# ஆன்மீக-அறநெறி எழுச்சிக்கான ஆன்மீக விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் வழிகாட்டலில் நியூ மைதிலி ஜுவலறி ஆதரவில் ஆன்மீக-அறநெறி எழுச்சிக்காக யாழ்.மாவட்ட முன்பள்ளிக் குழந்தைகளுக்கு இலங்கையில் முதன்முதலாக மாபெரும் விளையாட்டுப் போட்டி விழா நாளை மறுதினம் (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வீணாகான குருபீடத்தினரால் நடத்தப்படும்.

ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் ஜெயா தம்பையா தலைமையில் போட்டிகளும் வீணாகான குருபீடம் பிரம்மஸ்ரீ.சபா.உமாபதி சர்மா தலைமையில் விழாவும் நடைபெறும். குழந்தைகளுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன், யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆர்.நடராஜன், வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், வடக்கு ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ். மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் மற்றும் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், குருமார்கள், கலைஞர்கள், மகளிர் அமைப்பினர், இந்து அமைப்பினர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# பாராளுமன்றத்துக்குள் நுழைய கீதாவுக்கு தடை விதிக்கவில்லை

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவுக்கு பாராளுமன்றத்துக்கு செல்ல முடியாத வகையில் சபாநாயகர் கரு ஜயசூரிய தடை விதித்திருப்பதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என சபாநாயகர் ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீதா குமாரசிங்கவுக்கு சாதாரண பிரஜையாக பாராளுமன்றத்துக்கு செல்ல எந்தவித தடையும் இல்லை என அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், பாராளுமன்ற உறுப்பினர்களின் வரப்பிரசாதங்களுடன் அவர் பாராளுமன்றத்துக்கு வருவதற்கே தடை விதிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இரட்டை பிரஜாவுரிமை காரணமாக கீதா குமாரசிங்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்-சுஜீவ



(கொழும்பு)

வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வர வேண்டுமாயின் அவர்களுக்கு ஏதாவது நிவாரணங்களை வழங்க வேண்டும் என சர்வதேச வர்த்தக விவகார இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார். கைத்தொழில் வர்த்தக வலயங்களை ஏற்படுத்த தேவையான வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கு அமைய அடுத்த 5 ஆண்டுகளில் 8 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளை இலங்கை எதிர்பார்த்துள்ளது.

கடந்த காலத்தில் சுங்க வரி நிவாரணங்கள் நீக்கப்பட்டதால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை வருவது பாதிக்கப்பட்டது.

அதேபோல், நாட்டின் புவியியல் ரீதியான அமைவிடம் மற்றும் மனித வளத்தை அடிப்படையாக கொண்டு நாட்டில் உற்பத்திகளை ஆரம்பிக்க வேண்டும்.

அப்படி இல்லை என்றால் கடந்த 20 வருடங்கள் போன்று நாடு என்ற வகையில் இலங்கை முன்னேறாது என சுஜீவ சேனசிங்க தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

10.11.2017
ஐப்பசி 24, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சப்தமி முன்னிரவு 8.29 மணிவரை
பூசம் மாலை 6.09 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
ஐப்பசி வெள்ளி .

வளவன்

**மேடம்:** வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.

**இடபம்:** நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.

**மிதுனம்:** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்:** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலன் கிடைக்கும், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், திடீர் செய்திகளால் திகைப்படையலாம்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசம் தரும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**துலாம்:** பொதுவாழ்வில் புகழ் கூடும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பாராத காரியமொன்று இன்று கைகூடலாம், பயணங்களால் பலனுண்டு, வருமானம் வரும் வழியில் நாட்டம் கொள்வீர்கள்.

**தனுசு:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், திட்டமிட்ட பணிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கும்பம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்:** வியாபார விருத்தியுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>[illegible]ந்திராஷ்டமம்<br>மூலம், பூராடம் | | சந்<br>ராகு |
| கேது | | | |
| | சனி,<br>புத | சூரி, சுக்,<br>குரு | செவ் |



வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா அண்மையில் கல்லூரி அதிபர் திருமதி.தேவராணி நவரத்தினம் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இவ் விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சிறப்பு விருந்தினராக சிவன் அறக்கட்டளை உரிமையாளர் க.வேலாயுதம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் பெயர் நீக்கம் கவலை தரும் விடயம்

## டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

ஹற்றன். தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திலிருந்து தொண்டமான் அவர்களது பெயர் நீக்கம் செய்யப்பட்டமையானது வேதனை தருகின்ற விடயமாகவுள்ளதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த டக்ளஸ், மலையக மக்களின் வாழ்வுரிமை போராட்டம் முதற்கொண்டு அம் மக்களின் பல்வேறு உரிமைகள் சார்ந்த போராட்டங்களை முன்னெடுத்தவர்களில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் முக்கியமானவர். அத்தகையப் போராட்டங்களில் வெற்றியும் கண்டவர். தாம் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களுக்காக இறுதி வரை அயராது உழைத்த பெருமை அவரைச் சாரும்.

அரசியல் மற்றும் தொழிற்சங்க செயற்பாடுகளுக்கு அப்பாலும் அவர் இன்றும் அனைத்து சமூக மக்களாலும் மதிக்கப்படுகின்றார்.

எனவே, அவரது பெயர் நீக்க விடயமானது பெரிதும் கவலையளிப்பதாக உள்ளது. இது குறித்து பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் மீள் பரிசீலனை செய்து, அவரது பெயரை மீளச் சூட்டுவதே மிகவும் பொருத்தமாகும்.

அந்தவகையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் தான் கலந்துரையாட விரும்புவதாக டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கால்நடைகளை கட்டி வளர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

08.11.2017ஆம் திகதி நடைபெற்ற பிரதேச விவசாயக்குழுக் கூட்டத் தீர்மானத்தின் படி வேலணை பிரதேச பிரிவிற்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் 09.11.2017 இல் இருந்து விவசாய செய்கைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் கட்டாக்காலி கால்நடைகள் பிரதேச கமக்கார அமைப்பினால் கட்டுப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே பொதுமக்கள் தங்களுக்கு உரித்தான கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என பிரதேச செயலர் ஏ.சோதிநாதன் அறிவித்துள்ளார். (இ

# பனங்கைப்பணியாளர்களுக்கு உபகரணப்பொதி வழங்கல்



(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையால் வாழ்வாதார நிதித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பனம் கைப்பணி பயிற்சியினை நிறைவு செய்த பருத்தித்துறை வல்லிபுரம் கிராமத்தை சேர்ந்த 11 பயனாளிகளுக்கு 8000 ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் அடங்கிய பொதிகள் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

வல்லிபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க ஏற்பாட்டில் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க முகாமையாளர் கா.கோபால கிருஷ்ணன், விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி திணைக்கள அதிகாரி, வல்லிபுரம் கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

# இடைக்கால அறிக்கை குறித்து தெளிவூட்டும் கருத்தாடல் அரங்கு

(யாழ்ப்பாணம்)

கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் "இடைக்கால அறிக்கையும் தமிழ் மக்களும்" எனும் தொனிப்பொருளில் தெளிவூட்டும் கருத்தாடல் அரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் கலாசார மண்டபத்தில் என்.இன்பம் தலைமையில் இடம்பெறும்.

இதில் கருத்துக்களை யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி ரி.கணேசலிங்கம், சமூக அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் மற்றும் சட்டத்தரணியும் அரசியல் ஆய்வாளருமான அ.சோதிலிங்கம் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (இ-10)

# கால சம்ஹார பெருவிழா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் ஸ்ரீ சாந்த நாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தில் காலசம்ஹார பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறும். (இ-10)




# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தாய் மன்றத்தின் ஏற்பாட்டில் அமரர்களான சின்னையா சௌபாக்கியவதி நினைவாக இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணிவரை யாழ்ப்பாணம் புதிய செங்குந்தா வீதியில் அமைந்துள்ள பொற்கமலதேவி வாசா மண்டபத்தில் இடம்பெறும். (இ-10)

# இளைஞனின் சடலம் கரையொதுங்கியது

(குரணவாய்)

கடலுக்கு குளிக்கச் சென்றபோது காணாமற்போனதாக தெரிவிக்கப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் காலை கரையொதுங்கியுள்ளது.

கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய பிரேஞ்சன் என்ற இளைஞர் கிளிநொச்சியில் இருந்து செம்பியன்பற்றிற்கு வருகை தந்து செம்பியன்பற்று வடக்கு பகுதியில் தங்கி நின்றதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் கடந்த 7 ஆம் திகதி மாலை இளைஞர்கள் சிலருடன் சேர்ந்து செம்பியன்பற்று கடலில் குளிக்கச் சென்ற சமயம் கடலில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமற் போயிருந்தார்.

இவரின் சடலம் நேற்று முன்தினம் காலையில் தாளையடி கடற்கரையில் கரையொதுங்கியது.

இதனையடுத்து அப்பகுதி கிராம அலுவலருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (இ-60)

# வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோ.சைக்கிள் வீதிச்சமிக்ஞை கம்பத்துடன் மோதி விபத்து

## இளைஞன் படுகாயம்

(குரணவாய்)

வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் வீதி சமிக்ஞை அறிவிப்பு கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயங்களிற்கு உள்ளானார்.

கடந்த 7 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் மந்திகைச் சந்தியில் இடம்பெற்ற இவ்விபத்தில் கற்கோவளத்தைச் சேர்ந்த வே.சிவதாசன் (வயது-34) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மந்திகை சந்தி வளைவில் திரும்ப முற்பட்ட போது வேகக்கட்டுப்பாட்டையிழந்து வீதியின் எதிரே இருந்த கம்பத்துடன் மோதி தூக்கி எறியப்பட்டார். மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து வந்தவர் சிறுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (இ-60)



காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்திய பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் அண்மையில் நடைபெற்றன.

# அரசியல் தீர்வுகாணும் முயற்சியை எதிர்த்து நாட்டை மீண்டும் குட்டிச்சுவராக்கக் கூடாது

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதிகாரப் பகிர்வின் ஊடாக அரசியல் தீர்வைக் காண வேண்டும். இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டியது இன்றியமையாததாகும் என்று சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அவற்றை தவறவிட்டமை வரலாறாக உள்ளது. புதிய அரசியல் யாப்புக்கான முயற்சியினை பொது எதிரணியினர் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். நாடு பிளவுபடும் என்று அவர்கள் பொய் உரைக்கின்றனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்து அன்றைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தபோது 13 பிளஸ் தீர்வை வழங்கத் தயார் என்று தெரிவித்திருந்தார். அன்று அவ்வாறு கூறியவர்கள் இன்று தீர்வு முயற்சியினை குழப்ப முனைவது கவலைக்குரிய விடயமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய அரசியல் யாப்புக்கான இடைக்கால அறிக்கை மீதான ஐந்தாம் நாள் விவாதம் நேற்று முன்தினம் அரசியல் யாப்பு சபையில் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இராஜாங்க அமைச்சர் விஜயகலா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது நல்லாட்சி அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுத்துள்ளது. அரசியல் தீர்வுக்கு முன்னொருபோதும் இல்லாத சந்தர்ப்பம் தற்போது



ஏற்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர். 62 இலட்சம் மக்கள் இதற்கான ஆணையை வழங்கியுள்ளனர்.

புதிய அரசியல் யாப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பில் பொது எதிரணியினர் பொய்யுரைகளை கூறி வருகின்றனர். புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் முயற்சியை குழப்புவதற்கு தென்னிலங்கையில் உள்ள இனவாத சக்திகள் முயன்று வருகின்றன. இத்தகையவர்கள் பௌத்த மகா சங்கத்தினரையும் குழப்பி வருகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முன்னர் முயற்சிக்கப்பட்ட போதும் அந்த முயற்சிகள் கைகூடவில்லை. இவ்வாறு எத்தனையோ சந்தர்ப்பத்தை நாம் தவறவிட்டுள்ளோம். ஒப்பந்தங்கள் பல செய்யப்பட்டுள்ள போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் தான் கொடூர யுத்தம் ஏற்பட்டது.

தற்போதைய அரசியல் தீர்வு முயற்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டு அரசாங்கத்திற்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றார். வடக்கு, கிழக்கில் சுயாட்சி அடிப்படையிலான சமஷ்டி தீர்வையே தமிழ் மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது விட்டுக்கொடுப்புடன் தீர்வைக் காண வேண்டும் என்ற அக்கறையில் செயற்படுவது பாராட்டத்தக்கதாகும். வழங்கப்படுகின்ற அரசியல் தீர்வானது தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடியதாக அமைய வேண்டும். இல்லையேல் பெரும் அழிவுகளை சந்தித்த தமிழ் மக்கள் அரைகுறை தீர்வு வழங்கப்படுமானால் அரசாங்கத்தின்மீது அதிருப்தி கொள்ளும் நிலை ஏற்படும்.

பொது எதிரணியினர் அதிகாரப் பகிர்வின் ஊடான அரசியல் தீர்வு முயற்சியை கடுமையாக எதிர்த்து வருகின்றனர். 13 பிளஸ் தீர்வைத் தருவேன் என்று இந்தியா சென்று கூறிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் தற்போது தீர்வு முயற்சியை எதிர்ப்பது கவலைக்குரிய விடயமாகும்.

தற்போதைய நிலையில் கிடைத்துள்ள நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

அரசியல் சுயநலன்களுக்காக தற்போதைய சந்தர்ப்பத்தை எதிர்ப்பதன் மூலம் நாட்டை மீண்டும் குட்டிச்சுவராக்க எவரும் முயலக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 126 ரவைகள் மீட்பு

(கொழும்பு)

பொலநறுவை, பராக்கிரம நீரேந்துப் பகுதியில் பயன்படுத்தப்படாத நிலையில் இருந்த 126 துப்



பாக்கிரவைகளை நேற்று பொலிஸார் கைப்பற்றினர்.

டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் இந்தக் குளக்கட்டுப் பகுதியைச் சுத்தம் செய்த தோப்பாவெவ வித்தியாலய மாணவர்களே இந்த ரவைகளைக் கண்டுபிடித்தனர்.

இதுபற்றி மாணவர்கள் தெரிவித்ததையடுத்து ஆசிரியர்கள் பொலிஸுக்கு தகவல் தெரிவித்துள்ளனர். அதன்பேரில் அங்கு வந்த பொலிஸார் மேற்படி ரவைகளை மீட்டெடுத்தனர். ரி-56 ரக துப்பாக்கியில் பயன்படுத்தக்கூடிய இந்த ரவைகள் துருப்பிடித்த நிலையில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)


## பெயர் மாற்றம்

நாச்சிமார் கோவிலடி திக்கம் அல்வாய் வடமேற்கை வசிப்பிடமாகக் கொண்ட ஜயசேனா டில்ருக்சி நிரஞ்ஜலா ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் ஜயசேனா நிரஞ்ஜலா என மாற்றம் செய்து இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள,
ஜயசேனா நிரஞ்ஜலா

## பகிரங்க ஏலவிற்பனை

எமது கோட்டக்கல்வி அலுவலகத்தில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன. றோனியோ இயந்திரம்-02, CPU-01, Gestnator-01, UPS(SQ6602)-01, Anti Virus-02

இடம்: கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலகம், புத்தூர், முன்றல்.
காலம்: 24.11.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி.
பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
பொருட்களை ஏலத்தில் எடுப்பவர்கள் உடன்பணம் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும்.

திரு.நா.சிவநேசன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்.

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986இல் பிறந்த கேட்டை 2ஆம் பாதம், கிரகபாவம் 21 3/4 கொண்ட செவிப்புலனற்ற புகைப்படக் கலைத் துறையில் தேர்ச்சி பெற்ற (இந்தியாவில் பயின்றார்) மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 077 973 8802



## பெயர் மாற்றம்

நாச்சிமார் கோவிலடி திக்கம் அல்வாய் வடமேற்கை வசிப்பிடமாகக் கொண்ட ஜயசேனா டில்ருக்சி நிரஞ்ஜலா ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் ஜயசேனா நிரஞ்ஜலா என மாற்றம் செய்து இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள,
ஜயசேனா நிரஞ்ஜலா



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா:23 செவ் 2 இல்
உயரம்: 6'2"
தகைமை/தொழில்:கணக்காளர் கனடா
தொ.இ: B/7916

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில் A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7917

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L/சுவிஸ்
தொ.இ: B/7918

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 16
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:A/L/சுவிஸ் PR
தொ.இ: B/7919

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ரோகிணி
கி.பா: 24 சூரி செவ் 10 இல்
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/7946

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 32 சூரி செவ் 6இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L/ஆசிரிய பயிற்சியாளர்
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7950

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 23
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/7960

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 52 செவ் 12 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc, QS/ பொறியியலாளர்
தொ.இ: G/7966

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி

## நூலகங்களினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கல்

(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட நூலகங்களினால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாதப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குட்பட்ட ஒட்டுசுட்டான் பொது நூலகம், புதுக்குடியிருப்பு பொதுநூலகம், ஒலுமடு பொது நூலகம் ஆகியவற்றால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பெறுமதிமிக்கப் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு புதுக்குடியிருப்பு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையினுடைய செயலாளர் ந.ஜெயராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அதிகாரி சுப்பிரமணி ஈஸ்வரன் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வாசகர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில்

## ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் செயற்குழு கூட்டத்தில் ஆராய்வு

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் வவுனியா கோயில்குளத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமாகி பிற்பகல் 2.00 மணிவரையில் நடைபெற்றது. இதில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல், அரசியலமைப்பு சம்பந்தமான விவகாரங்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் தற்போது இருக்கக் கூடிய பிரச்சினைகள் என்பன தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், அரசியலமைப்பு தொடர்பிலான தற்போதைய நிலைமைகள், இடைக்கால அறிக்கையும் அதற்கு இருக்கின்ற எதிர்ப்புக்களையும் பற்றியும் விளக்கிக் கூறினார். அத்துடன் வரக்கூடிய அரசியலமைப்பு வரைபு, தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்குமென்று நம்பவில்லை. இருந்தாலும் இறுதி அறிக்கை வரும் வரை பொறுமை காக்க வேண்டும். இந்த விடயத்தில் நாங்களாகவே உடைத்துக் கொண்டு செல்வதாக இருந்துவிடக் கூடாது என்றும் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் நிலைப்பாடுகள் பற்றி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட போது பதிலளித்த தலைவர் சித்தார்த்தன், அது ஒரு சுயாதீனமான கட்சி. அந்தக் கட்சி சம்பந்தமாக விரும்பிய முடிவினை எடுப்பது அவர்களுடைய விருப்பம். இருந்தாலும் கூட்டமைப்பில் இருந்து ஒரு கட்சி விலகுவதென்பது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கோ தமிழ் மக்களுக்கோ நல்லதல்ல. ஆகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பேசி ஒரு நல்ல முடிவை எடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார்.

அத்துடன் உள்ளூராட்சி தேர்தலிலே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டதோடு, தொகுதி பங்கீடுகள், ஆசனப்பங்கீடுகள், தவிசாளர் நியமனங்கள் என்பன தொடர்பில் மூன்று கட்சிகளும் கூடி ஆராய்ந்து ஒரு முடிவினை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (2)

## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நான்கு சந்தேகநபர்கள் கைது

(பூநகரி)

பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு சந்தேக நபர்கள் கிளிநொச்சி நீதிமன்ற விசாரணைகளுக்கு சமுகமளிக்காது தலைமறைவாகியதைத் தொடர்ந்து கிளிநொச்சி நீதிமன்ற நீதவானினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து சந்தேக நபர்களைப் பிடிப்பதற்காக பூநகரிப் பொலிஸார் புலன் விசாரணையில் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் பூநகரி பொலிஸ் நிலைய உப பரிசோதகர் விஜயதுங்கா தலைமையில் விரைந்த பூநகரி பொலிஸ் நிலைய பொலிஸ் குழுவினர், வெவ்வேறு இடங்களில் இருந்த நான்கு சந்தேக நபர்களையும் கைது செய்து பூநகரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

இவர்கள் இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-84)



## பதிவுகளுக்குட்படுத்தப்படாமல் இயங்கும் விடுதிகளில் குற்றல் செயல்கள் அதிகரிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி நகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் காணப்படுகின்ற விடுதிகள் பதிவுகளுக்கு உட்படுத்தப்படாத நிலையில் விடுதிகளில் தொடர்ந்தும் பல்வேறு குற்றச்செயல்கள் நடைபெற்று வருவதாக சமூக அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

கிளிநொச்சி நகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் பல்வேறு தனியார் விடுதிகள் பதிவுகளுக்கு உட்படுத்தப்படாமல் இயங்கி வருகின்றன.

இவ்வாறு இயங்கி வருகின்ற சட்டவிரோத விடுதிகளில் . பல்வேறு குற்றச் செயல்கள் நடைபெற்று வருவதாகவும்இதனைக்கட்டுப்படுத்த உரிய தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண் டும் எனவும்பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பதிவு செய்யப்படாத விடுதிகள் சிலவற்றில் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுத்தருவதாக மிகவும் பின்தங்கிய கிராமங்களில் இருந்து பெண்கள் யுவதிகளை அழைத்து வந்து பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.பதிவு செய்யப்படாத விடு திகள் தொடர்பில் அரச உயர் அதிகாரிகள் கவனம் எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

## கால்நடை வளர்ப்போர்-விவசாயிகள் அரச அதிகாரிகளுடன் சந்திப்பு

### தீர்மானத்திற்கு அமைவாக நடக்குமாறு முல்லை. அரச அதிபர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளின் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போருக்கும் அரச அதிகாரிகளுக்குமிடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வேலியில்லாத விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் கால்நடைகளால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விவசாயிகள் அரச அதிகாரிகளிடம் முறையிட்டிருந்தனர். இது தொடர்பாக கால்நடை உரிமையாளர்களை வினவிய போது கால்நடைகளை வளர்ப்பதற்கான மேய்ச்சல் தரவை இல்லை என்று அவர்கள் தெரிவித்துள்ள நிலையில் இரண்டு பிரதிநிதிகளையும் அழைத்து முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலில் முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், புதுக்குடியிருப்பு கமநலசேவை அதிகாரி, வன வள பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த அதிகாரிகள் இரண்டு தரப்பினருடனும் கலந்துரையாடி இறுதியில் கால்நடை வளர்ப்போர் பகல் வேளைகளில் ஆட்கள் வைத்து கால்நடைகளை மேய்க்கவேண்டும். இரவு வேளைகளில் பட்டியில் அடைக்கவேண்டும்.அதே வேளை விவசாயிகள் வயல் நிலங்களில் பகல் வேளைகளில் காவல் செய்ய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

இருப்பினும் இந்த நிலை தமக்கு திருப்தி தரவில்லையெனவும் இது முரண்பாட்டை தோற்றுவிக்கும் என்றும் தெரிவிப்பதோடு விவசாயிகளைப் பொறுத்த வரையில் தமது வயல் நிலங்களுக்கு வேலி அடைப்பதற்கு கட்டைகளை பெறுவதற்கு வனஜாகா அனுமதி அளிக்காத நிலை காணப்படுவதாகவும், தங்களால் இந்த நிலையில் வேலிகளை அடைத்து பயிர்களை பாதுகாக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை கால்நடை வளர்ப்போர் தங்களுடைய கால்நடைகளை வளர்ப்பதற்கு உரிய மேய்ச்சல் தரவைகள் இல்லை என்றும் இது தொடர்பில் கடந்த 5ஆண்டுகளாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி வருவதாகவும் அவர்கள் இதனை தீர்க்காத நிலையில் எமது கால்நடைகளை மேய்ப்பதற்கு உரிய இடம் இல்லை எனவும் அவ்வாறாயின் நாங்கள் வீதிகளில் மாட்டை மேய்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்கள்.

கால்நடைவளர்ப்போருக்கு தேவையான மேய்ச்சல் தரவையினை பெற்றுக் கொடுக்கின்ற சந்தர்ப்பத்தில் இரண்டு தரப்பினருடைய பிரச்சினையும் தீரக்கூடிய நிலை இருக்கின்ற போது இது தொடர்பில் மாவட்ட அரச அதிபரிடம் வினவியபோது தொடர்ச்சியாக இதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வனஜாகாவிடம் இருந்து மேய்ச்சல் தரவைக்கு தேவையான காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் அந்த நடவடிக் கைக்கு தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அதுவரை விவசாயிகள் இன்று எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக நடக்குமாறும் தெரிவித்துள்ளார். (2-281)

## கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கல்

கிளிநொச்சி கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் வைத்திய கலாநிதி ப.சத்தியநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ் கலந்து கொள்ள உள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை உளநல மருத்துவர் வைத்திய கலாநிதி வி.ஜெகரூபன், துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.ஜெயபாலன். கௌரவ விருந்தினராக கரைச்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் திருமதி.ஆரணி தினேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (2)




"போதையற்ற நாடு" தேசிய வேலைத்திட்டம் வடமாகாணம் தழுவிய ரீதியில் இடம்பெற்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சு ஆகியன இணைந்து கிளிநொச்சியில் போதைப்பொருள் பாவனைக்கான எதிர்ப்புப் பேரணியை நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்தனர். கரடிப்போக்கு சந்தியில் இருந்து ஆரம்பமான போதைப்பொருள் எதிர்ப்புப் பேரணி கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தைச் சென்றடைந்து தொடர்ந்து அங்கு அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்கள், வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்கள் தழுவிய ரீதியில் இளைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)

# தொழிலாளர்களை ஏற்றிப்பயணித்த பேருந்து மரத்துடன் மோதுண்டு விபத்து

## 20 பேர் காயம்



(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு பெண் தொழிலாளர்களை ஏற்றிப் பயணித்த பேருந்து மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் 12 பேர் பல் மற்றும் மண்டை உடைந்த நிலையிலும் 8 பேர் சிறு காயங்களுடனும் புதுக்குடியிருப்பு ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 6.45 மணியளவில் புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரப் பகுதியில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

முள்ளியவளையில் இருந்து புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு பெண் தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு வற்றாப்பளை கேப்பாப்பிலவு ஊடாக புதுக்குடியிருப்பு நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து எதிராக வந்த இராணுவ வாகனத்தை விலகிப் பயணிக்க முற்பட்ட போது, வீதியின் அருகே நின்ற மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதன்போது 12 பேர் பல் மற்றும் மண்டை உடைந்த நிலையிலும் 8 பேர் சிறுகாயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். இதன் போது, படுகாயமடைந்த 12 பேர் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை நோயாளர் விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஏனையோர் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர். விபத்து தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் விபத்துக்குள்ளான பேருந்தை மீட்டெடுத்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (2-281-15)




# ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் வீரமறவர்களுக்கு விளக்கேற்றி அஞ்சலிப்போம்

## வவுனியா நகரசபை முன்னாள் உப தலைவர் அழைப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்திலுள்ள ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் எதிர்வரும் நவம்பர் 27 தேசிய மாவீரர் தினத்தன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவோம் என வவுனியா நகரசபை முன்னாள் உபதலைவர் எம்.எம்.ரதன் அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய மாவீரர் தினத்தை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு வடகிழக்கிணைந்த எமது தாயக மாவட்டங்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களும் தயாராகி வரும் நிலையில் வவுனியா மக்களாகிய நாமும் தயாராக வேண்டும். எமது மண்ணின் விடுதலைக்காக போராடி வீரச்சாவைத் தழுவிய புனிதமான மாவீரர்களை நினைவுகூறுவது ஒவ்வொரு தமிழர்களின் கடமையாகும்.

வடகிழக்கில் காணப்படும் துயிலுமில்லங்கள் துப்புரவு செய்யப்பட்டு துரிதமாக பல பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் இராணுவம் நிலைகொண்டுள்ளது.

இந்த நல்லாட்சி அரசாங்கம் எமது உணர்வுகளை புரிந்து கொண்டு இராணுவ முகாமை அகற்றி மாவீரர்களுக்கு எமது கடமைகளை செய்வதற்கு வழியமைத்து கொடுப்பதற்கு முன்வர வேண்டும்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒவ்வொருவரும் தமது சுக இலாபங்களை மறந்து இந்நிகழ்வை மேற்கொள்ள முன்வரவேண்டும். சென்ற ஆண்டு வவுனியாவில் பல இடங்களில் இந்நிகழ்வு நடைபெற்றது போன்று அல்லாமல் இம்முறை அனைவரும் ஒன்றிணைந்து இதை மேற்கொள்வோம்.

இராணுவ முகாம் இருந்தாலும் அதற்கு முன்னாள் அல்லது பொருத்தமான ஓர் இடத்தில் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க நாம் அனைவரும் தயாராகுவோம் என அவர் அழைப்பு விடுத்துள்ளார். (2-250)

# சிவசிதம்பரத்தின் நினைவுதினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு





முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தாமோதரம்பிள்ளை சிவசிதம்பரத்தின் நினைவு தினம் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் வவுனியா வைரப் புளியங்குளத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத்தூபியில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணியும், வவுனியா மாவட்ட மூத்த சட்டத்தரணியும், அமரர் சிவசிதம்பரத்தின் திருவுருவச்சிலையை நிறுவியவருமான முருகேசு சிற்றம்பலம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம், முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், முன்னாள் உப நகரபிதா சந்திரகுலசிங்கம் மோகன், தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள், புளொட் அமைப்பின் உறுப்பினர்கள், ரெலோ அமைப்பின் உறுப்பினர்கள், சமூக சேவையாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவச்சிலைக்கு மாலையிட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். வவுனியா வின் மூத்த சட்டத்தரணி முருகேசு சிற்ற ப்பலத்தினால் கடந்த 2015 ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி இச் சிலை திறந்து வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## 50 மிதிவெடிகள் அழிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி 50 மிதிவெடிகள் மீட்கப்பட்டன. இந்த மிதிவெடிகள் விசேட அதிரடிப்படையினரால் நேற்று வெடிக்க செய்து அழிக்கப்பட்டன.

முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் கொட்டில் ஒன்றை அமைப்பதற்காக நிலத்தை தோண்டும் போது மிதிவெடிகள் இருப்பதை அவதானித்ததைத் தொடர்ந்து தகவல் இராணுவத்துக்கு தெரியப்படுத்தப்பட்டது.

விரைந்த விசேட அதிரடிப்படையினர் குறித்த பகுதியில் இருந்து 50 மிதிவெடிகளை மீட்டிருந்தனர் அதனடிப்படையில் மீட்கப்பட்ட வெடி பொருட்கள் வெடிக்கச் செய்து அழிக்கப்பட்டன. (2-281)

# தேறாங்கண்டல்- புத்துவெட்டுவான் வீதியூடாக சட்டவிரோத செயல்கள்

## வீதியின் நிலையோ படுமோசம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தேறாங்கண்டல்-புத்துவெட்டுவான் வீதியின் 10 கிலோமீற்றர் நீளமான பகுதி பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட போதும் இப்பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத செயல்களால் குறித்த வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

முல்லைத்தீவு, புத்துவெட்டுவான், மருதன்குளம், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், தேறாங்கண்டல் உள்ளிட்ட மிகவும் பழைமை வாய்ந்த விவசாயக் கிராமங்களை இணைக்கும் பிரதான வீதியாகவும் ஏ-9 வீதியின் கொக்காவில் சந்தியிலிருந்து மாங்குளம் வெள்ளாங்குளம் வீதியை இணைக்கும் சுமார் 23 கிலோமீற்றர் நீளமான குறித்த வீதியின் 10 கிலோ மீற்றர் வீதி கடந்த 2013 ஆம், 2014 ஆம் ஆண்டுகளில் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது.

குறித்த வீதி உரிய முறையில் புனரமைக்காமலும் இந்தப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத மணல் அகழ்வுகள், கிரவல் அகழ்வுகள், மரக்கடத்தல்கள் யாவும் இவ்வீதியூடாகவே வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதனால் இவ்வீதி மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால் எந்தவித போக்குவரத்து வசதிகள் கூட இல்லாத இந்தப்பகுதி மக்கள் பயணிக்கும் குறித்த வீதியானது 13 கிலோ மீற்றர் நீளமான ஒரு பகுதி புனரமைக்கப்படாமலும் ஏற்கனவே புனரமைக்கப்பட்ட 10 கிலோ மீற்றர் தூரம் சேதமடைந்த நிலையிலும் காணப்படுவதனால் இந்தப்பகுதி மக்கள் போக்குவரத்தில் சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஆதலால் சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்தி வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோருகின்றனர். (2-315)

# கோட்டமட்ட நாவன்மைப்போட்டி

## 12 ஆம் திகதி நடைபெறும்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடம் தோறும் திருவள்ளுவர் விழா நடத்தப்பட்டு வருகின்றது.

இதனையொட்டி கரைச்சிக் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட நாவன்மைப் போட்டி முடிவுகள் அண்மையில் வெளியாகியிருந்தன.

இப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள கோட்டமட்ட போட்டியில் பங்குபற்ற முடியுமென கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (2-84)

# தேசியமட்ட சாதனையாளர் கௌரவிப்பு விழா

(முல்லைத்தீவு)

மு/வள்ளிபுனம் மகா வித்தியாலய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் தேசிய மட்ட சாதனையாளர் கௌரவிப்பு விழா-2017 நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் சி.சின்ராசா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தட்சாயினி வசீகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சுப்பிரமணியேஸ்வரன், பி.எஸ்.ஐ. உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சத்தியசீலன், சிறுவர் நிதிய திட்ட முகாமையாளர் திருமதி.ஊ.செந்தில்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

# வேளாங்கன்னி சிலை புனர்நிர்மாணிக்கப்பட்டு திறப்பு



(குருமன்காடு)

வவுனியா விசமிகளால் தீவைத்து சேதமாக்கப்பட்ட வேளாங்கன்னி சிலை புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஸ்ரீவவுனியா உக்குளாங்குளம் பகுதியில் அமைந்திருந்த வேளாங்கன்னி சிலையானது ஒக்டோபர் 23 ஆம் திகதி இரவு விசமிகளால் தீயிடப்பட்டு சேதமாக்கப்பட்ட நிலையில் அச் சிலையானது உக்குளாங்குளம் கிராம மக்களின் பங்களிப்புடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வேளாங்கன்னி சிலை யானது அருட்பணி அடிகளார் லக்ஸ்ரன் டி சில்வாவினால் திறந்து வைக்கப்பட்டு விசேட திருப்பலி பூஜை வழிபாடும் நடத்தப்பட்டது. (2-250)

# மரத்துடன் மோதுண்ட வாகனம் தடம்புரள்வு



(பூநகரி)

கிளிநொச்சி-பூநகரி வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மகிந்தா ரக எல்ப் வாகனம் செல்விபுரம் பகுதி யில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதி வளைவில் மரத்துடன் மோதுண்டு தடம்புரண்டது.

இச் சம்பவம் கடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. வாகனத்தில் பிரயாணம் செய்த இருவர் சிறிய காயங்களுடன் பூநகரி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத் தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு அனுமதிக்கப் பட்டனர். சேதமடைந்த வாகனம் பூநகரி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. பூநகரி பொலிஸார் இது தொடர்பில் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (2-84)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# வளிமண்டல மாசாக்கம் தொடர்பான பிரச்சினைகள்: அமிலமழை, ஒளி இரசாயனப் புகார்

கொழும்பு இரசாயனவியல் நிறுவகத்தில் (Insitiute of Chemistry) பேராசிரியர் K.R.மகாநாமவினால் நடத்தப்பட்ட கருத்தரங்கில் வழங்கப்பட்ட குறிப்புக்கள் உள்ளடங்கிய வளிமண்டல மாசாக்கம் பற்றிய பகுதி மாணவர்களின் நலன் கருதிப் பரீட்சை நோக்கில் இங்கு தொகுத்து வழங்கப் படுகின்றது. பேராசிரியர் K.R. மகாநாம க.பொ.த (உ/த) இரசாயனவியல் பாட வினாத்தாள் தயாரிக்கும் குழுவில் கைத்தொழில் மற்றும் சூழலியல் இரசாயனம் தொடர்பான வினாக் களுக்குப் பொறுப்பான பேராசிரியர் ஆவார்.

(கடந்த 27.10.2017 தொடர்ச்சி...)

3. தகனச்செயன்முறைகளின் போது வெப்பநிலையை $900^0C$ இனைவிட குறைவாகப் பேணுதல்

வெப்பநிலை $900^0C$ இனைவிட அதிகரிக்கும் போது தான் வளிமண்ட $N_2(g)$ ஒட்சியேற்றப்படும்

4. எரிபொருட்களைச் சுத்தப்படுத்தும் கருவிகளைப் பயன்படுத்தல்

டீசலில் கந்தகம் (s) காணப்படும். ஆனால் பெற்றோலில் இல்லை.

ஒளி இரசாயனப் புகார்
**( Photo Chemical Smog )**

வாகனப் புகை NOx ஐயும், தகனமடையாத ஐதரோகாபன்களையும் (CxHy) கொண்டிருக்கும். இவை சூரிய ஒளியின் முன்னிலையில் $15^0C$ இற்கு மேற்பட்ட வெப்பநிலையில் ஓசோன் ($O_3$), அல்டிகைட்டுக்கள் (RCHO), Peroxy Acetyl Nitrate (PAN), Peroxy Benzoyl Nitrate (PBN) போன்றவையாக மாற்றப்படும்.

| | London smog (UK) | Los Angeles smog (USA) |
|---|---|---|
| 1. நிகழும் காலம் | Winter காலப்பகுதியின் அதிகாலை வேளையில் ஏற்படும் | Summer காலத்தின் மதிய வேளையில் ஏற்படும் |
| 2. வெப்பநிலை | -1 - $4^0C$ | 24 - $32^0C$ |
| 3. பிரதான எரிபொருள் | நிலக்கரி | பெற்றோலியம் |
| 4. தாக்குதிறன் | தாழ்த்தும் திறன் | ஒட்சியேற்றும் திறன் |
| 5. வளியை மாசுபடுத்தும் பதார்த்தங்கள் | $CO_x$, $SO_x$ துணிக்கைகள் | $O_3$, PAN, $NO_x$ சேதனப் பதார்த்தங்கள் |
| 6. சுகாதாரப் பிரச்சினைகள் | சுவாசப்பை அழற்சி | கண்ணில் அழற்சி |
| 7. பொருட்களின் பாதிப்பு | இரும்பு, கொங்கிறீற் | இறப்பரைச் சிதைக்கும் |

மேற்படி மாற்றம் ஒளி முன்னிலையில் நடைபெறுவதாலும் இரசாயனப் பதார்த்தங்கள் உருவாவதாலும், மஞ்சள் நிற மந்தாரமான புகை போன்று தோற்றமளிப்பதாலும் ஒளி இரசாயனப் புகார் என அழைக்கப்படுகின்றது.

(ஒளி + இரசாயனம் + புகார்) புகையையும், பனியையும் ஒன்றாக இணைத்து விபரிக்க புகார் என்னும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. இதன் ஆரம்பத் தாக்கம் பின்வருமாறு அமையும்.

$$NO_2 \xrightarrow{hv} NO + 'O'$$

ஒளி இரசாயனப் புகார் உருவாகும் படிமுறைகள்

i. NOx சூரிய ஒளியை அகத்துறிஞ்சி ஒளிப்பகுப்பிற்கு உள்ளாகும்.

$$NO_2 \xrightarrow{hv} NO + 'O'$$

ii.உருவாகும் அணுநிலை ஒட்சிசன் $O_2$ மூலக்கூறுகளுடன் இணைந்து

(a)ஓசோனை உருவாக்கும்

$$O + O_2 + M \rightarrow O_3 + M$$

இங்கு M என்பது வாயு நிலையில் சக்தியை அகத்துறிஞ்சும் ஓர் உடலாகும். இது வளியிலிருந்து உருவாகிய ஒரு துணிக்கையாக அல்லது வாயு ஒன்றாக இருக்கலாம்.

(b) $\dot{O}H$ மூலிகத்தை உருவாக்கும்

$$'O' + H_2O \rightarrow 2\dot{O}H$$

iii.உருவாகும் $\dot{O}H$ மூலிகம் வளியிலிருந்து உருவாகிய ஏனைய துணிக்கைகளை மூலிகங்க ளாக மாற்றும் இம் மூலிகங்கள் தொடர்ந்து தாக்கங்களிற்கு உட்பட்டு அல்டிகைட்டுக்கள், PAN, PBN போன்றவற்றை உருவாக்கும்.

* $\dot{O}H$ மூலிகமானது மிகக்கூடிய தாக்கு திறனுடையது. இது இருவிதமான தாக்கங்களைக் காண்பிக்கும்.

1. H நீக்கம்

$$\dot{O}H(g) + CH_4(g) \rightarrow \dot{C}H_3(g) + H_2O(g)$$

2.நிரம்பாத இடங்களில் கூட்டலடைதல்

$$\dot{O}H(g) + NO_2(g) \rightarrow HNO_3(aq)$$

ஒளி இரசாயனப் புகாரின் முக்கிய பங்காளிகள்

1. நைதரசனின் ஒட்சைட்டுக்கள்
2. ஆவிப்பறப்புடைய சேதனச் சேர்வைகள்
3. சூரிய ஒளி
4. $18^0C$ இற்கு மேற்பட்ட வெப்பநிலை

**Colombo Smog?**

60% ஆன பதிவு செய்யப் பட்ட வாகனங்கள் வலம் வருகின் றன. 30km சுற்றுவட்டாரத்திற்கு 90% ஆன சூழலைமாசுபடுத்தும் கைத்தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. பெரும்பாலான வெப்பவலு ஆலைகள் கொழும்பிலும் புற நகர்ப்பகுதியிலும் காணப்படுகின்றன.

மேற்படி அதிர்ச்சியூட்டும் தகவல்களின்படி கொழும்பிலும் அதனை அண்டியுள்ள புறநகர்ப்ப குதிகளிலும் ஒளி இரசாயனப் புகார் அதிகளவில் தோற்றுவிக்கப்படும் சாத்தியக்கூறுகள் கூடுதலாக உள்ளன. இதனால் கொழும்பு நகரில் மக்களின் சுகாதாரமான வாழ்க்கை கேள்விக்குறியாகவே உள்ளது.

வாகனங்களிலிருந்து புகை வெளியேறு வதைக் குறைத்தல்

1. சுத்திகரிக்கப்பட்ட எரிபொருட்களைப் பயன்படுத்தல்

i. ஈயம் சேராத பெற்றோலைப் பயன்படுத்தல்

ii. கந்தகம் (S) குறைவான டீசலைப் பயன்படுத்தல்

2.வாகனங்களை நல்லமுறையில் பராமரித்தல்

ஒழுங்கான கால அட்டவணைப்படி செம் மைப்படுத்தல் மேற்கொள்ளல் (Tuning up)

3. சீரான வாகன வீதிப்போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பித்தல்.

1. நெரிசல் நிலைகளை தவிர்த்தல்

2. நல்ல நிலையில் வீதிகளை வைத்திருத்தல்.

4. ஊக்கி மாற்றிகளைப் பயன்படுத்தல் (Catalytic conveter)

இது கட்டாயமானது. ஆனால் எல்லா வகை வாகனங்களுக்கும் பயன்படுத்த முடியாது.

எரிபொருட் தகனவகைகளும் அவற்றின் பிரதான அம்சங்களும்.

1. இலாபகரமில்லாத தகனம் (Lean Combustion)

தேவையான அளவிலும் பார்க்க கூடுதலான அளவு வளி இருத்தல்

இந்நிலையில் கூடுதலான அளவு NOx உருவாகும்.

2. வளமான தகனம் (Rich Combustion)

அதிகளவான ஐதரோக்காபன் எரிபொருளும் குறைவான ஒட்சிசனும் இருத்தல்

இந்நிலையில் கூடுதலான அளவு குறைந கனம் அடைந்த பதார்த்தங்களும் (CO (g)) தகனத்திற்கு உட்படாத எரிபொருட்களும் வெளியேறும். இதனால் கூடுதலான அளவு சேதனப் பொருட்கள் வளிமண்டலத்திற்குள் விடுவிக்கப் படும்.

வெளியேற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கு சிறந்தவழி செம்மைப்படுத்தல் மூலம் (Tuning up) வளி, எரிபொருள் விகிதத்தை சிறப்பு நிலையில் சரிசெய்தலாகும்.

ஊக்கி மாற்றிகளைப் பயன்படுத்தல்

புகைபோக்கிகளில் ஊக்கி மாற்றிகளைப் பொருத்தி விடுதல்

புகையில் தீங்கான பதார்த்தங்கள் வெளியேறுவதை பின்வரும் இரண்டு படிமுறைகளில் குறைக்கலாம்.$NO_x$ ஆனது $N_2$ ஆகத் தாழ்த்தப் படுதல்.

2.ஊக்கி மாற்றியின் மேற்பரப்பில் குறை தகனமடைந்த சேதனப் பதார்த்தங்கள்(CO உள்ளடங்கலாக) $CO_2$ ஆகவும், $H_2O$ ஆகவும் ஒட்சியேற்றப்படுதல்.

தகனச் செயன்முறைகளின்போது மிகை வளியைப் பயன்படுத்துத லும், தகன வெப்ப நிலையை $900^0C$ இற்குக் கீழ் நிலை நிறுத்தலும் CO(s), $NO_x$ போன்ற சூழலுக்குத் தீங் கான வாயுக்களின் வெளி யேற்றத்தை இழிவாக்கும்.

கே.வாணிமுகுந்தன்
பிரதி அதிபர், யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.


வாரத்திற்கு ஒரு புதிர்! 197

விஸ்வபாரதி (Visva-Barati) எனும் பன்னாட்டுப்பல்கலைக்கழகத்தை உருப்படுத்தியவர் யார்?

புதிர் 197 இற்கான விடைகளை 20.11.2017 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவநாசினி இராசலிங்கம்
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்-பிரிவு A,
84,கல்லூரி வீதி,
திராவியடி,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

புதிர் 196க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

பரிசுபெறுபவர்
கே. இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்
கந்தசுவாமி கோயிலடி
வட்டுக்கோட்டை.

புதிர் 196க்கான கேள்வியும் விடையும்:

ஐக்கிய அமெரிக்காவில் (USA) பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை முதன் முதலில் (1869 இல்) வழங்கிய மாகாணம் எது?

Wyoming Territory

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 197

சரியான விடை:-..............................

முழுப்பெயர்:-..............................

முகவரி:-..............................

தொ.பே. இல:..............................

கையொப்பம்:..............................

# வரவு-செலவு திட்டத்தில் இம்முறையும் கல்விக்கே அதிக நிதி ஒதுக்கீடு

## ஜனாதிபதி மைத்திரி தகவல்



(கொழும்பு)

**தற்போதைய அரசாங்கமானது தனது அரச கொள்கையில் பிள்ளைகளின் கல்விக்கே அதிக முன்னுரிமை அளித்துள்ளதுடன் கடந்த வருடங்களைப் போன்றே இம்முறையும் வரவு-செலவு திட்டத்தில் கல்விக்கு அதிக நிதியை ஒதுக்கியுள்ளதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

மொரட்டுவ பிரின்சஸ் ஒஃப் வேல்ஸ் வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் அதிகளவிலான கல்விமான்களையும் புத்திஜீவிகளையும் உருவாக்குவதே நாட்டின் எதிர்காலத்திற்கு முக்கியமானதாகும் எனத் தெரிவித்த ஜனாதிபதி கல்வி நடவடிக்கைகளில் எவ்வித குறைபாடுகளும் ஏற்படாதவாறு அனைத்து வளங்களையும் பெற்றுக் கொடுத்தல் அவசியமாகும் என்றும் வலியுறுத்தினார்.

சிறப்பான திறமைகளை வெளிக்காட்டிய மாணவிகளுக்கு ஜனாதிபதி இதன் போது பரிசில்களை வழங்கி வைத்ததுடன், ஆசிரியர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன ஆகியோரும் பாடசாலையின் அதிபர் மாலனி சமரக்கோன், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி பிள்ளைகளுக்கான சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்காக அரசாங்கம் சகல பொறுப்புக்களையும் நிறைவேற்றி வருவதுடன் இலட்சியமும் தன்னம்பிக்கையும் மிக்கவர்களாக பரீட்சைகளையும் வாழ்க்கையையும் வெற்றிகொள்ள பிள்ளைகள் முயற்சிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

தற்போது சமூகத்தில் பாரிய சிக்கலை தோற்றுவித்துள்ள போதைப் பொருட்களின் பிடியிலிருந்து பிள்ளைகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றதென வலியுறுத்திய ஜனாதிபதி சமூகத்தில் அனைவரும் இதற்கான தமது பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன, மேல் மாகாண கல்வி அமைச்சர் ரஞ்சித் சோமவங்ச, பாடசாலையின் அதிபர் நிலந்தி பெரேரா, ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் இந்த நிகழ்வில் பங்குபற்றினர். (இ-7)

## போதை மாத்திரைகள் விற்பனை

## பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையில் வைத்தியரின் மகன் உட்பட மூவர் கைது





(கொழும்பு)

வாழைச்சேனையில்வைத்தியரொருவரின் மகன் உட்பட மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதை மாத்திரை விநியோகம் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் போன்ற இரு வேறு சம்பங்களுடன் தொடர்புடைய மூவரே நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட போது ஓட்டமாவடியில் மிக நீண்ட நாட்களாக குளிசை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த வைத்தியரொருவரின் மகனிடம் இருந்து 120 போதை மாத்திரைகள் மற்றும் எட்டு கிராம் கஞ்சா கைப்பற்றப் பட்டுள்ளன.

இதேவேளை, வாழைச்சேனை பகுதியில் மீன்பிடி உபகரண விற்பனை நிலையத்தை உடைத்து திருடப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் மற்றும் பொருட்களுடன் வாழைச்சேனையைச் சேர்ந்த இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஊடகங்களுக்கு அஞ்சும் ஆறுமுகன் தொண்டமான்



(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகத்தில் நடத்தப்படும், ஊடகவியலாளர் சந்திப்பில், அதன் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் பங்கேற்பார் என்று அறிவிக்கப்படுகின்ற போதிலும், அவர் பங்கேற்றதே இல்லை.

இ.தொ.கா. ஏற்பாடு செய்யும் ஊடகவியலாளர் சந்திப்புக்கு வருகைதருமாறும், அதில், காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் எம்.பி, காங்கிரஸின் தலைவர் முத்துசிவலிங்கம் எம்.பி. ஆகியோர் பங்கேற்பர் என்று, காங்கிரஸின் ஊடகப் பிரிவால் அழைப்பிதழ்கள் அனுப்பிவைக்கப்படும்.

எனினும், ஊடகவியலாளர் சந்திப்புக்குச் சென்றால், மேற்குறிப்பிட்ட இருவரில் ஒருவரேனும் சமுகமளித்திருக்கமாட்டார்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் பெயரை நீக்கியமை தொடர்பில்; இலங்கையில் பல்வேறான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழகத்தைச் சேர்ந்த தலைவர்கள் கடும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

இதேவேளை, நுவரெலியா மற்றும் அம்பேகமுவையில் உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை தொடர்பில், பரஸ்பர கருத்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், இந்த விவகாரங்கள் தொடர்பில், இவ்விருவரில் ஒருவர் பதிலளிப்பார் என்ற நோக்கத்தில், காங்கிரஸின் தலைமையகமான சௌமிய பவானுக்குச் செல்கின்ற ஊடகவியலாளர்கள் ஏமாற்றத்துடனேயே திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டிருந்து. ஒரு தடவையல்ல, இரண்டு தடவைகள் இவ்வாறான நிலைமையே ஏற்பட்டிருந்தது.

காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 18ஆவது சிரார்த்த தினம், கொழும்பிலும் மலையகத்திலிலும் ஒக்டோபர் 30ஆம் திகதியன்று நடத்தப்பட்டது.

கொழும்பில், பழைய நாடாளுமன்ற கட்டடத்தொகுக்கு முன்பாக உள்ள அவரது உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்ததன் பின்னர், சௌமிய பவானில் உள்ள விநாயகர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளும் அதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பும் இடம்பெறுமென்றும் அதில், மேற்குறிப்பிட்ட இவ்விருவரும் பங்கேற்பர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அன்றையதினம், ஊடகவியலாளர் சந்திப்பே இடம் பெறவில்லை. இதேவேளை, நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில், இவ்விருவரும் பங்கேற்பர் என்று ஊடகப்பிரிவால் அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டது. எனினும், அவ்விருவரில் ஒருவரேனும் பங்கேற்கவில்லை. (இ-7)

## போலி செய்திகளை வெளியிடும் இணையத்தளங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

### ஜனாதிபதியிடம் ராஜித நேரில் வலியுறுத்தல்



(கொழும்பு)

போலியான செய்திகளையும் அவதூறு பிரசாரங்களையும் மேற்கொள்ளும் இணையத்தளங்கள் மற்றும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியை சந்தித்த ஓர் சந்தர்ப்பத்தில் இது குறித்து ஜனாதிபதியிடம் கோரியதாக சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அவதூறு பிரசாரம் மற்றும் போலி செய்திகளை வெளியிடும் ஒரு சிலரை தண்டித்தால், சீரிய ஒழுக்கமுடைய ஊடக கலாசாரத்தை உருவாக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

இணையத் தளங்களில் வெளியாகும் ஆபாச வார்த்தைகளை பார்த்துவிட்டு சிறுவர்கள் அது குறித்து பெரியவர்களிடம் கேட்கும் போது, பெரியவர்கள் தர்மசங்கடமான நிலைக்கு தள்ளப்படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)




# பாகிஸ்தானில் பேருந்து கவிழ்ந்து விபத்து

# 27 பேர் உயிரிழப்பு! 69 பேர் படுகாயம்!



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள கல்லார் காகர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

ராய்விண்டில் நடைபெற இருந்த மத பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் இரவு 100 இற்கும் மேற்பட்டோர் பேருந்தில் சென்றுள்ளனர். பேருந்து இஸ்லாமாபாத்-லாகூர் வீதி வழியாக செல்வதாக இருந்தது. பனி மூட்டம் அதிகமாக இருந்ததால் இரவு 10 மணிக்கு மேல் அந்த வீதி மூடப்பட்டது.

எனவே, சாரதி வேறு வழியாகச் சென்றுள்ளார். அவருக்கு அந்தப் பாதை பழக்கம் இல்லாததால் அங்கு பள்ளம் இருப்பதை கவனிக்கவில்லை. பேருந்தானது அந்தப் பகுதியில் இருந்த சரிவில் மிக வேகமாக செல்லும் போது சாரதியின் கட்டுப்பாட்டை மீறி பள்ளத்தில் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 27 பேர் பரிதரபமாக பலியாகினர். படுகாயமடைந்த 69 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர்களுக்கு உடனடியாக வைத்திய சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு பஞ்சாப் முதலமைச்சர் சேபாஸ் ஷெரிப் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தார். (இ-7)

## சீனாவிற்கு ட்ரம்ப் விஜயம்

## 9 பில்லியன் டொலர் பெறுமதியான இருபது ஒப்பந்தங்கள் கைச்சாத்து



(பீஜிங்)

ஆசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மூன்று நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் சீனாவுக்கு சென்றடைந்த நிலையில் இருபது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆசிய நாடுகளுக்கு 21 நாட்கள் அரசுமுறை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதில் முதல் நாடாக ஜப்பான் சென்ற அவர் அங்கு பிரதமர் அபே உடன் வடகொரியா விவகாரம் தொடர்பாக 'முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதனையடுத்து, தென் கொரியா சென்ற அவர் அந்நாட்டு ஜனாதிபதியை சந்தித்துப் பேசினார். இந்நிலையில், மூன்று நாட்கள் பயணமான சீனாவுக்கு நேற்று முன்தினம் சென்றடைந்தார். அவருடன் மனைவி மெலினா ட்ரம்ப் உட்பட முக்கிய அதிகாரிகள் விஜயம் செய்தனர்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உடன் சந்திப்பு நடத்திய பின்னர், சுமார் 9 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 20 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாக சீன துணை பிரதமர் வாங் யங் தெரிவித்துள்ளார். வர்த்தகம், பொருளாதாரத் துறைகளில் இரு நாடுகளுக்கு இடையே உள்ள உறவுகளை வலுப்படுத்தும் வகையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சீனப்பயணத்தை முடித்துக்கொண்டு ட்ரம்ப் வியட்நாம் செல்லவுள்ளார். அங்கு நடைபெறும் ஆசிய பொருளாதார உச்சிமாநாட்டில் பங்கேற்கவுள்ளார். இம்மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி புடின் கலந்து கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வடகொரியாவின் அணுத்திட்டம் ஆட்சிக்கு ஆபத்து

### கிம் ஜாங் உன்னிற்கு ட்ரம்ப் எச்சரிக்கை

(பீஜிங்)

அணுவாயுதத்திறன்களை வளர்த்துக்கொள்ளும் நடவடிக்கையானது, வடகொரியத் தலைவரின் ஆட்சிக்கு ஆபத்தாக அமையுமென அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார். சீனாவுக்கு நேற்று முன் தினம் புதன்கிழமை அமெ ரிகக ஜனாதிபதி ட்ரம்ப் விஜயம் செய்துள்ள நிலையிலேயே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தபோது, 'அணுவாயுதத்திறன்களை வளர்த்துக்கொள்ளும் நடவடிக்கையில் வடகொரியத் ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஈடுபட்டு வருகின்றார். இதன் மூலம் அவருக்கு பாதுகாப்பு ஏற்படாதென்பதுடன், அவ ரது ஆட்சியை ஆபத்தில் தள்ளிவிடும் நிலைமையை உருவாக்கும்' எனத் தெரிவித்தார்.

முதற்தடவையாக ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணத்தை ஆரம்பித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ஜப்பான் மற்றும் தென்கொரியாவுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டுள்ள நிலையில் சீனாவுக்குச்சென்றுள்ளார். இந்நிலையில், வட கொரிய நெருக்கடியைக்கையாள சீனாவின் ஒத்துழைப்பையும் அவர் எதிர்பார்த்துள்ளார். (இ-7)

# எந்தத் தாக்குதலையும் சந்திக்கத் தயார்! சவுதி அரேபியாவுக்கு ஈரான் எச்சரிக்கை



(டெக்ரான்)

சவுதி அரேபியாவின் மிரட்டலுக்கு நாங்கள் அஞ்சப்போவதில்லை. அவர்கள் தாக்குதல் நடத்தினால் அதை சந்திக்க தயாராகவே இருக்கிறோம் என ஈரான் ஜனாதிபதி ஹசன்ரவுகானி தெரிவித்தார்.

அரபு நாடுகளில் சவுதி அரேபியாவில் சன்னி முஸ்லிம்களும், ஈரானில் ஷியா முஸ்லிம்களும் உள்ளனர். சன்னி, ஷியா முஸ்லிம்களுக்கு இடையே ஏற்கனவே மோதல் போக்கு உள்ளது. இது அரபு நாடுகள் பலவற்றிலும் எதிரொலிக்கிறது.

சவுதி அரேபியாவும், ஈரானும் இந்த விடயத்தில் பகை நாடுகளாக இருந்து வருகின்றன. இந்த நிலையில் சவுதி அரேபியாவுக்கு அருகே உள்ள ஏமன் நாட்டில் உள்நாட்டு கலவரம் நடந்து வருகிறது.

ஏமன் நாட்டின் அரசுக்கு உதவும் வகையில் ஹவுதி படையினர் மீது சவுதி அரேபியா தாக்குதல் நடத்தி வருகிறது. விமானம் மூலம் குண்டு வீச்சு, ஏவுகணை வீச்சு போன்றவற்றை நடத்துகிறது.

இதற்கு பதிலடியாக ஹவுதி படையினர் சவுதி அரேபியா மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகிறது. அண்மையில் அவர்கள் வீசிய ஏவுகணை தலைநகர் றியாத்தில் விழுந்தது. இது சவுதி அரேபியாவுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஹவுதி அமைப்பினருக்கு ஈரான் ஆயுத உதவி செய்வதாகவும், இதனால் தான் அவர்கள் இந்த தாக்குதலை நடத்துகிறார்கள் என்று சவுதி அரேபியா கருதியது. எனவே 3 நாட்களுக்கு முன்பு சவுதி அரேபிய இளவரசர் முகமதுபின் சல்மான் ஈரானுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார். ஹவுதி அமைப்பினருக்கு ஆயுத உதவி செய்வதை நிறுத்தாவிட்டால் ஈரான் மீது போர் தொடுப்போம் என்று எச்சரித்தார்.

இது ஈரானுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. சவுதி அரேபியாவின் மிரட்டலுக்கு நாங்கள் அஞ்சமாட்டோம் என்று ஈரான் கூறியிருக்கிறது. இது குறித்து ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி தெரிவிக்கையில்,

ஏமனில் உள்ள ஹவுதி அமைப்பினருக்கு நாங்கள் எந்த ஆயுத உதவியும் செய்யவில்லை. ஏமனின் வளர்ச்சிகளுக்கு தேவையான உதவிகளைச் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் எங்கள் மீது அபாண்ட குற்றச்சாட்டுக்களைக் கூறி எங்கள் மீது போர் தொடுப்போம் என்று சவுதி அரேபியா கூறியுள்ளது.

ஆனால் சவுதி அரேபியா மிரட்டலுக்கு நாங்கள் அஞ்சப்போவதில்லை. அவர்கள் தாக்குதல் நடத்தினால் அதை சந்திக்க தயாராகவே இருக்கிறோம். ஈரானிய மக்கள் சவுதி அரேபியா மக்களை விட வலுவானவர்கள்என்பதை அவர்கள் உணர வேண்டும். சவுதி அரேபியாவால் எங்களை ஒன்றும் செய்ய முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொலம்பி… கடும் நில…


(போகோட்டா)

கொலம்பியா நாட்டில் நேற்று முன்தி…
நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். பே…
காணாமல் போயுள்ளதாக தகவல்கள் வெ…

தென்னமெரிக்க நாடான கொலம்பியா…
சில நாட்களாக பெய்து வரும் கனம…
நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி…

இதனால், கொர்னிடோ நகரில் பெ…
முன்தினம் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. இ…
மக்கள் உயிரிழந்துள்ளதாக முதல்…
கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நிலச்சரிவில் 18 இற்கு…
தாக கூறப்படுகிறது. இதையடுத்து அவ…
மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்ற…
வசித்து வந்த 3000 இற்கும் மேற்பட்ட ம…





வைக்கப்பட்டுள்ளனர் என அரசு தரப்பில்…

வெள்ளம் பாதித்த இடங்களை பார்வை…
மனுவல் சாண்டாஸ், இந்த சம்பவத்தில்…
தரப்பில் அனைத்து உதவிகளும் செய்யப்…
மாதம் புட்டுமயோ மாகாணத்தில் ஏற்பட்ட…
பொதுமக்கள் சிக்கி உயிரிழந்தனர் என்ப…

# எதிர்ப்ப… பெல்ஜி…

## கார்லெஸ் விளக்…




(பிரேசில்)

காட்டலோனியா சுதந்திரப் பிரகடன…
விப்பைத் தொடர்ந்து, ஸ்பெய்ன் அரசாங்க…
எதிர்ப்பு நடவடிக்கைகளை தவிர்த்துக்கொ…
நோக்கிலேயே, தான் பெல்ஜியத்துக்கு…
ள்ளதாக காட்டலோனியாவின் முன்…
ஜனாதிபதி கார்லெஸ் தெரிவித்துள்ளார்.

# வெளிநாடு

# ...ம்பியாவில் நிலச்சரிவு

...முன்தினம் ஏற்பட்ட கடும் நிலச்சரிவில் சிக்கி ...னர். மேலும், 18 இற்கும் அதிகமானோர் ...ல்கள் வெளியாகியுள்ளன.

...லம்பியாவிலுள்ள கவ்கா மாகாணத்தில் கடந்த ... கனமழை காரணமாக அப் பகுதியிலுள்ள ...த்து ஓடியது.

...ரில் பொதுமக்கள் வசிப்பிடங்களில் நேற்று ...ட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி சுமார் 4 பொது ... முதல் கட்ட விசாரணையில் தெரிவிக்...

...8 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிக்கியுள்ள ...து அவர்களை பத்திரமாக மீட்கும் பணியில் ...கின்றனர். நிலச்சரிவு ஏற்பட்ட இடத்தை சுற்றி ...ற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க...





...தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...பார்வையிட்ட அந்நாட்டு ஜனாதிபதி ஜுவான் ...வத்தில் பாதிப்படைந்த அனைவருக்கும் அரசு ... செய்யப்படும் என கூறியுள்ளார். கடந்த ஏப்ரல் ... ஏற்பட்ட நிலச்சரிவில் 300 இற்கும் மேற்பட்ட ...ர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கைது செய்யப்பட்ட இளவரசர்களுக்கு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் சிறை!



பட்டத்து இளவரசர் முகம்மது பின் சல்மான்

(ஜெட்டா)

உலக கோடீஸ்வரர் அல்வாலித் பின் தலால் உட்பட அரச குடும்பத்தைச் சேர்ந்த 11 இளவரசர்கள் ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் சிறை வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மன்னராட்சி நடைபெற்று வரும் சவுதி அரேபியாவில் அமைச்சர்கள் உட்பட பல முக்கிய பொறுப்புக்களை அரச குடும்பத்தினரே வகித்து வந்தனர். மன்னர் சல்மானின் மகனான முகம்மது பின் சல்மான் பட்டத்து இளவரசராக பொறுப்பேற்றதும் சில அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

உலக அரங்கில் சவுதி அரேபியாவின் மீது உள்ள பழைமைவாத கருத்துக்களை மாற்றும் வகையில் சில முக்கிய நடவடிக்கைகளை பட்டத்து இளவரசர் எடுத்தார். அரச குடும்பத்தினரே ஊழலில் ஈடுபட்டாலும் கடும் தண்டனை இருக்கிறது என அவர் அறிவித்தார்.

பட்டத்து இளவரசர் முகம்மது பின் சல்மான் தலைமையில் ஊழல் தடுப்பு ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக மன்னர் சல்மான் அறிவித்த சில மணி நேரங்களிலேயே உலக முன்னணி கோடீஸ்வரர்களில் ஒருவரான அல்வாலித் பின் தலால் உள்ளிட்ட 11 இளவரசர்கள் கைது செய்யப்பட்டனர்.

அமைச்சர்கள் சிலரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், கைது செய்யப்பட்ட அனைவரும் றியாத்தில் உள்ள ரிட்ஸ் கார்ல்டன் என்ற பிரம்மாண்ட சொகுசு ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கேற்ப, ஹோட்டல் இணையத்தளத்தில் தற்போதைக்கு அறைகளுக்கு அனுமதி இல்லை என கூறப்பட்டுள்ளது. மேலும், ஹோட்டலின் தரைத்தளத்தில் பாதுகாவலர்கள் தங்கியிருப்பது, ஆயுதங்களை வைத்திருப்பது போன்ற காணொலிகள் வெளியாகியுள்ளன. (இ-7)



# றியாத்தில் ஏவுகணைத் தாக்குதல்; வெள்ளை மாளிகை கடும் கண்டனம்

(றியாத்)

சவுதி அரேபியாவின் றியாத்திலுள்ள விமான நிலையத்தை இலக்குவைத்து நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலுக்கு, வெள்ளை மாளிகை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வெள்ளை மாளிகையால் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 'றியாத்திலுள்ள விமான நிலையத்தை இலக்குவைத்து ஏமனிலிருந்து ஹவுதி அமைப்பினரால் கடந்த சனிக்கிழமை ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் மூலம் அந்நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

அத்துடன், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டமையின் மூலம், மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஐ.நா.வின் முயற்சிகளையும் குறைத்து மதிப்பிடும் வகையில் அமைந்துள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# முன்னாள் ஜனாதிபதி மீது குற்றவியல் குற்றச்சாட்டு



(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பெனிக்கோ அகினோ மீது குற்றவியல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டிருப்பதாக விசாரணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பெனிக்கோ அகினோ 2010 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருந்தார்.

இவர் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், தெற்கு மாகாணத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்த பொலிஸ் படைக்கு உத்தரவிட்டார். அப்போது பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருந்த ஒரு பொலிஸ் அதிகாரி தலைமையில் ஒரு படையை தெற்கு மாகாணத்துக்கு அனுப்பி பயங்கரவாதிகளுடன் சண்டையிட வைத்தார். இந்த மோதலில் பொலிஸார் 44 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். இது நாடு முழுவதிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஜனாதிபதியின் அலட்சியப்போக்கே இதற்கு காரணம் என குற்றச்சாட்டு எழுந்தது. இந்த சம்பவம் தொடர்பாக அந்நாட்டின் ஊழல் எதிர்ப்பு அமைப்பான 'ஆம்புட்ஸ்மேன்' விசாரணைக் குழு, விசாரணை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இந்த விசாரணைக்குழு முன்னாள்ஜனாதிபதி பெனிக்கோ அகினோ மீது குற்றவியல் குற்றச்சாட்டுகளை பதிவு செய்தது. அதிகாரத்தை கைப்பற்றுதல், ஊழல் புரிதல் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக விசாரணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

# ...யைத் தவிர்க்க ...ஜியம் வந்தேன்

## ...ாக்கம்



...பிரகடனா அறி... ...ரசாங்கத்தின் ...துக்கொள்ளும் ...த்துக்கு வந்து ... முன்னாள் ...ள்ளார்.

பெல்ஜியத்தில் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்தபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'காட்டலோனியாவின் சுதந்திரப் பிரகடனத்தை ஏற்றுக் கொள்ள விரும்பாத ஸ்பெய்ன் அரசாங்கம், அப்பிராந்தியத்தில் வன்முறை மற்றும் அடக்குமுறைகளை முன்னெடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுமென்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

இவ்வாறானதொரு சூழ்நிலையைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே, அங்கிருந்து நான் பெல்ஜியத்துக்கு புறப்பட்டு வந்துள்ளேன்' என்றார்.

காட்டலோனியாவின் சுதந்திரப் பிரகடன அறிவிப்பை அதன் முன்னாள் ஜனாதிபதி அறிவித்ததைத் தொடர்ந்து, அதனை ஏற்றுக்கொள்ளாத ஸ்பெய்ன் அரசாங்கம், காட்டலோனியாவை தமது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததுடன், அங்கு டிசெம்பர் மாதம் பொதுத் தேர்தல் நடத்துவதற்கும் அறிவித்தது.

இதனையடுத்து, காட்டலோனியாவின் முன்னாள் ஜனாதிபதி கார்லெஸ் பெல்ஜியத்துக்கு புறப்பட்டுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# துருக்கியில் கொதிகலன் வெடிப்பு

## 5 பேர் பலி! 16 பேர் படுகாயம்



வடமேற்குத் துருக்கியில் அமைந்துள்ள வர்ணப் பூச்சுத் தொழிற்சாலையொன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை கொதிகலன் வெடித்துச் சிதறியதால் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன், 16 பேர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, மேற்படி தொழிற்சாலையின் கூரைக்குச் சேதமேற்பட்டுள்ளதுடன், தொழிற்சாலை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

இடிபாடுகளில் பலர் சிக்கியுள்ள நிலையில், மீட்புப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

# மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். மக்களின் வாழ்க்கை நிலையைக் கருத்திற்கொண்டு இந்த நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டு மக்களின் வாழ்க்கையை நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான வசதிகளை வழங்க தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகத் தெரிவித்தார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கொலன்னாவை சாலமுல்லையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள "லக்சந்த செவன" வீட்டுத் திட்டத்தின் 3 ஆவது கட்டத்தை நேற்று முன்தினம் பிற்பகல் மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் வழங்கும் இந்த நிவாரண உதவியை காலதாமதமின்றி மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வர்த்தக சமூகத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்த ஜனாதிபதி, விலை குறைக்கப்பட்ட உணவுப் பொருட்களை அதே விலைக்கு நுகர்வோருக்கு கிடைக்கச் செய்வது வர்த்தகர்களது கடமையாகும் என்பதுடன், அவ்வாறு இல்லாதபோது அது தொடர்பாக கண்டறிவதற்கு அரசாங்கம் நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுக்கும் என்றும் தெரிவித்தார்.

வரட்சியின் காரணமாக தேசிய உணவு உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையினால் அரிசி மற்றும் தேங்காயின் விலைகள் அதிகரித்துள்ளதுடன், அரிசியை வெளிநாட்டில் இருந்தேனும் கொண்டுவந்து நிவாரண விலையில் மக்களுக்கு வழங்க முடியுமாக இருந்த போதும் தேங்காயை அவ்வாறு கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சிறந்த வெளிநாட்டுக் கொள்கை காரணமாக இன்று சர்வதேச ரீதியாக இலங்கைக்குக் கிடைக்கும் பொருளாதார உதவிகள் அதிகரித்துள்ளன என்றும் கடன் சுமையிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு கடந்த மூன்று வருட காலப் பகுதியில் அரசாங்கம் மேற்கொண்ட கொள்கை சார்ந்த தீர்மானங்கள் மூலம் பல்வேறு வெற்றிகள் கிடைத்துள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நகரங்களை அமைக்க முடியும் என்றபோதும் உயிர் வாழும் நகரங்களை அமைப்பது கடினம் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, கொங்கிறீட் கட்டடங்களுக்குள் வாழும் மக்களின் வாழ்க்கையை அழகுபடுத்துவதற்கு சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

நாளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட மேல் மாகாண அபிவிருத்திக்கு பாரிய தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், நாடளாவிய ரீதியில் சமமான அபிவிருத்தியை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பெருநகர மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபை நகர புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் கொழும்பு நகரில் குறைந்த வசதிகளைக் கொண்ட நகரப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள "லக்சந்த செவன" வீட்டுத்திட்டத்தின் 3 ஆவது கட்டம் 396 வீடுகளைக் கொண்டுள்ளது. மீத்தொட்டமுல்ல குப்பைமேடு சரிந்ததில் வீடுகளை இழந்த 87 குடும்பங்களுக்கும் பேரவாவியை அண்மித்த 87 தோட்டம், 175 தோட்ட குடியிருப்புகளைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்காக இவ் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய வீடுகள் களனிவெளி புகையிரதப் பாதைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காரணத்தினால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இரண்டு படுக்கையறைகளுடன் அனைத்து வசதிகளையும் கொண்ட வீட்டு அலகொன்றின் நிர்மாணப் பணிகளுக்கு நான்கு மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 12 மாடிகளைக் கொண்ட வீட்டுக் கட்டடத் தொகுதிக்கு செலவிடப்பட்டுள்ள மொத்தச் செலவு 15,840 இலட்சம் ரூபாவாகும்.

நினைவுப் பலகையை திரை நீக்கம் செய்து வீட்டுத் திட்டத்தை மக்களிடம் கையளித்த ஜனாதிபதி, வீட்டுத் திட்டத்தைப் பார்வையிட்டார். 11 வீட்டு உரிமையாளர்களுக்கு ஜனாதிபதி வீட்டுத் திறப்புகளை வழங்கி வைத்தார். அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# ஜப்பானிடமிருந்து நன்கொடையாக ரோந்துக்கப்பலை பெற்றது இலங்கை





(டோக்கியோ)

இலங்கைக்கு ஜப்பான் வழங்கியுள்ள 30 எம் வகை ரோந்துப் படகு நேற்று முன்தினம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவினால் இயக்கி வைக்கப்பட்டது. டோக்கியோவில் உள்ள சுமி தகாவ கப்பல் கட்டும் தளத்தில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது. 30 எம் வகை ரோந்துப் படகுகள் இரண்டை, இலங்கைக்கு நன்கொடை அடிப் படையில் வழங்க ஜப்பான் இணங்கியிருந்தது.

இதில் முதலாவது படகே நேற்று முன்தினம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரால் இயக்கி வைக்கப்பட்டது.

இந்தப் படகுக்கு '501' என்று இலக்கமிடப்பட்டுள்ளது. இது இலங்கை கடலோரக் காவல் படையின் பயன்பாட்டுக்காக வழங்கப்படும். இந்தப் படகுகள், 27 கடல் மைல் வேகத்தில் பயணிக்கக் கூடியவையாகும். (இ-7)

# அரசியல் கைதிகள் சிறைகளில் இருப்பதை ஒப்புக்கொண்டார் நீதியமைச்சர் தலதா



(கொழும்பு)

அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் இருக்கின்றார்கள் என்பதை நீதி அமைச்சர் தலதா அத்துகோரள ஏற்றுக் கொண்டார். இருப்பினும் 17 பேரே அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். அரசியல் கைதிகள் என்று எவருமே இல்லை என்று அரச தரப்பு தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்த நிலையில், நீதி அமைச்சர் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்தார்.

"வவுனியா நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகள் அநுராதபுரம் நீதிமன்றுக்கு வழக்கின் சாட்சியாளர்களின் கோரிக்கைக்கு அமைவாகவே மாற்றப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் இருவரே சாட்சியாளர்களாகவுள்ளனர். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்றோ வழக்கு மாற்றப்பட்டுள்ளது. குற்றம் சுமத்தப்பட்டுள்ள வழக்கின் சந்தேகநபர்கள் மேன்முறையீடு செய்தால் வழக்கை இடமாற்ற முடியும்.

நாடு முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகளில் 17 அரசியல் கைதிகளே இருக்கின்றனர். இவர்களில் 10 பேர் தமிழர்களாகவும் 7 பேர் சிங்களவர்களாகவும் உள்ளனர். இவர்களில் 12பேர் புதிய மகசின் சிறைச்சாலையிலும், 3பேர் திருகோணமலை சிறைச்சாலையிலும், ஒருவர் மட்டக்களப்பு சிறைச்சாலையிலும், ஒருவர் மொனராகலை சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நிகழ்ச்சிக்கு அழைப்பது எப்படி?

மற்றவர்களை நாம் ஒரு விழாவுக்கு அழைக்கின்றோம், ஒரு திருமணத்திற்கு அழைக்கின்றோம், நம் நிறுவனத்திற்கு அழைக்கின்றோம், வீட்டுக்கு அழைக்கிறோம்.

இப்படி அழைக்கும் போது அழைப்பவர்கள் பல பேர் அவநம்பிக்கையுடனும், சம்பிரதாயமாகவும் தான் அழைக்கிறார்கள்.

இவர்கள் எங்கே வரப் போகிறார்கள்? என்கிற அவநம்பிக்கை இவர்களிடம் தலை தூக்கி விடுவதால் வருகிற வினை இது.

எங்கும் எதற்கும் வராதவர்கள் கூட நாம் நினைத்தால் வரவழைக்க முடியும்.

நம்மவர்கள் இலேசுப்பட்டவர்கள் அல்லர். அழைக்கப்படும் விதத்தை வைத்தே செல்வதா? இல்லையா? என்பதை முடிவு செய்கிறார்கள்.

ஒரு சாதாரண மனிதரின் வீட்டுக்கு ஓர் ஊர்ப்பெரிய மனிதர் வந்தார். எல்லாருக்கும் ஒரே வியப்பு. நெருக்கமான ஒருவர் மட்டும் துணிந்து விளக்கம் கேட்டார். எப்படிங்க இங்கே?

ரொம்பவும் சொன்னான். வந்துட்டேன் என்றார் அந்தப் பெரிய மனிதர்.

ஆக, வராதவர்கள் வரவேண்டும் என்றால் ரொம்பச் சொல்ல வேண்டும். பிரியத்தையும் மரியாதையையும் சரிசம விகிதத்தில் அழைப்பிதழ் மீது தடவி வழங்கினால் எப்பேர்ப்பட்டவர்களையும் வரவழைக்க முடியும்.

அழைக்கும் போது வற்புறுத்தி அழைக்க வேண்டும். உண்மையாக அழைக்க வேண்டும். அது கண்களில் நன்கு வெளிப்பட வேண்டும். எங்கே வந்து தொலைந்து நமக்குச் செலவு வைத்து விடுவானோ என்று அஞ்சுகிறவர்கள் அழைக்காமலிருப்பதே உத்தமம்.

சிலபேர் வெறும் அழைப்பு மட்டும் அனுப்புவார்கள். இது இன்விடேஷன் அல்ல! வெறும் இன்பர்மேஷன். இதற்கெல்லாம் மனிதர்கள் மசியமாட்டார்கள். நான்தான் அழைப்பு அனுப்பினேன்! ஏன் வரவில்லை? என்று கேட்பதில் பயனில்லை அனுப்பப்பட்டது வெறும் காகிதம். அது இதயத்தில் தோய்த்து எடுக்கப்படவில்லை. எனவே அவர்கள் வரவில்லை.

வெறும் அழைப்பிதழை மட்டும் அனுப்பாமல், கூடவே ஒரு கடிதம் அவசியம் எழுத அவகாசம் இல்லாவிட்டால் அழைப்பிதழின் மூலையில் ஓரிரு வாக்கியம் அவசியம். இது கூட எழுத முடியாதா?

ரொம்பவும் சம்பிரதாயம் பார்ப்பவர்களை நேரில் தான் அழைக்க வேண்டும். நேரில் அழைக்கக் கசக்கிறது என்றால் நிகழ்ச்சிக்கு வரவேண்டியவர்களுக்கு நம் செயல் இனிக்கவா செய்யும்?

மனிதர்களை இழுப்பது ஒரு கலை. அது தெரிந்தவர்களின் அழைப்பிற்கு மரியாதை அதிகம்.

அழைக்கிற விதத்தில் அழைத்தால் எப்பேர்ப்பட்டவர்களும் நேரத்தையும் தூரத்தையும் பொருட்படுத்தாமல் ஓடோடி வருவார்கள்!

**லேனா தமிழ்வாணன்**

## பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறித்து யாழில் விளக்கவுரை-தெளிவுறல்

யாழ்.மாவட்ட அரசசார்பற்றநிறுவனங்களின்இணையம் யுத்தத்தின் பின்னர் வடபகுதி பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எனும் தலைப்பில் நடத்திய தேசிய மாநாட்டின் தொடர் நடவடிக்கையாக கருத்தரங்குகள், செயமர்வுகள், எதிர்கால திட்டமிடல் தற்போது தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. இதன்ஒரு அம்சமாக 5ஆவது கருத்தரங்கு பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவமும், சட்ட ஏற்பாடுகளும் என்ற தலைப்பிலான விளக்கவுரை மற்றும் தெளிவுறல் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு 76,கோவில் வீதியில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியகத்தில் நடைபெறும்.

இதில் யாழ். சட்டத்துறை விரிவுரையாளர் கோசலை மதன் விளக்கவுரையை நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளை சார்ந்தவர்கள் பங்கு பற்றி பயன்பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வடக்கு-கிழக்கிலுள்ள 5 மாவட்டங்களே இலங்கையில் வறுமையில் முன்னிலை!

(ஏறாவூர்)

இலங்கையில் வடக்கு-கிழக்கிலுள்ள 5 மாவட்டங்களே வறுமையில்முதல் 5 இடங்களில் உள்ளதாக மத்திய வங்கி வறுமை ஒழிப்புப் பிரிவின் குழுத் தலைவர் ஆர்.ஸ்ரீபத்மநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு உள்ளிட்ட கிழக்கு மற்றும் வடமாகாணங்களில் இடம்பெறும் வறுமை ஒழிப்பு செயற்பாடுகள் குறித்து கேட்டபோது நேற்று வியாழக்கிழமை இதனைத் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் வடக்கு- கிழக்கிலுள்ள 5 மாவட்டங்கள் முன்னிலை இடங்களைப் பெற்று மிகக் கொடிய வறுமையான மாவட்டங்களாக இனங்காணப்பட்டிருக்கும் விடயம் அனைவரினதும் கரிசனைக்கும் உள்வாங்கப்பட வேண்டும்.

இதுவரை வறுமைக் கோட்டுக்குள் இருந்த மொனராகலை மற்றும் மன்னார் மாவட்டங்கள் முன்னிலை இடங்களிலிருந்து விடுபட்டுள்ள அதேவேளை திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்கள் வறுமைப் பட்டியலுக்குள் உட்புகுந்துள்ளன.

மேலும் மட்டக்களப்பு மாவட்டம்கடந்த ஏழுவருடங்களாக தொடர்ந்தும் வறுமை நிலையில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்ற தர வரிசையில் வறுமை மாவட்டமாக மாறி மாறி அந்த வட்டத்திற்குள்ளேயே சுழல்கிறது.

ஒக்டோபர் மாத இறுதியில் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள விபரங்களின்படி கிளிநொச்சி மாவட்டம் 18.2 வீதம் வறுமையைக் கொண்டிருக்கும் இலங்கையின் முதலாவது மாவட்டமாகவும், முல்லைத்தீவு மாவட்டம் 12.7 வீத வறுமையுடன் இரண்டாவது மாவட்டமாகவும், 11.3 வீத வறுமையுடன் மட்டக்களப்பு மூன்றாவது வறுமை மாவட்டமாகவும், 10.0 வீத வறுமையுடன் திருகோணமலை நான்காவது வறுமை மாவட்டமாகவும், 07.7 வீத வறுமையுடன் யாழ்ப்பாணம் ஐந்தாவது வறுமை மாவட்டமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், சனத்தொகை அடிப்படையில் கிளிநொச்சியில் 21,249 பேரும், முல்லைத்தீவில் 12,003 பேரும், மட்டக்களப்பில் 60,912 பேரும், திருகோணமலையில் 39,718 பேரும், யாழ்ப்பாணத்தில் 46,052 பேரும் வறுமைக்குட்பட்டுள்ளதாகவும் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணங்களிலே தான் வறுமை, நுண்கடன் தொல்லை, பாலியல் துஷ்பிரயோகம், போலி நாணயத் தாள்களின் புழக்கம் என்பன அதிகளவில் உள்ளன என்று மேலும் தெரிவித்தார். (இ-7)

## கறுப்பு தினம் அனுஷ்டிப்பு!

(சென்னை)

பண மதிப்பு நீக்க தினத்தை கறுப்பு தினமாக அனுஷ்டித்து தி.மு.கவினர் 26 மாவட்டங்களில் வெற்றிகரமாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.நேற்று முன்தினம் புதன்கிழமை தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் தலைமையில் குறித்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் அண்ணாநகரில் இடம்பெறவிருந்த ஆர்ப்பாட்டத்திற்கு, பொலிஸார் வழங்கிய அனுமதி மீளப்பெறப்பட்டதை அடுத்து, குறித்த ஆர்ப்பாட்டத்தை கைவிடும் நிலை ஏற்பட்டது.இதேவேளை 'பண மதிப்பு நீக்க கறுப்பு தினம்' ஆர்ப்பாட்டத்தை, வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளதாக, தி.மு.க. வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## பணிநயப்பும் மலர் வெளியீடும்

பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரனின் பணிநயப்பு விழாவும் மலர் வெளியீடும் இணுவில் மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தகைசார் பேராசிரியர் சி.தில்லைநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் இ.விக்னேஸ்வரன் தம்பதியரும், சிறப்பு விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதர் ஆ.நடராஜன் தம்பதியரும் கலந்து கொள்வர்.

இணுவில் சந்திக்கு அருகில் உள்ள பேராசிரியரின் இல்லத்திலிருந்து பேராசிரிய தம்பதிகள் காலை 8.30 மணிக்கு ஊர்வலமாக மத்திய கல்லூரி மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவர். (இ)



உரும்பிராய்சைவத் தமிழ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பரீட்சை அலுவலருமான மு. விக்னேஸ்வரன் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

# ஏமனில் மீண்டும் சவுதி கூட்டுப்படை விமானத் தாக்குதல்
# 30 பொதுமக்கள் பலி!

ஏமனின் ஹாஜ்ஜா மாகாணத்தில் சவுதி அரேபியா மற்றும் அமெரிக்கக் கூட்டு படைகளின் விமானத் தாக்குதலால் ஆண், பெண், சிறுவர்கள் உட்பட 30 பேர் உயிரிழந்ததுடன், 12 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஏமனில் அரசுக்கு எதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுதி புரட்சிப் படையினர் கடந்த 3 ஆண்டுகளாக ஆயுத மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏமனில் அரச படையினருக்கு ஆதரவாக சவுதி அரேபியா மற்றும் அமெரிக்கக் கூட்டுப்படையினர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந் நிலையில்தான் ஏமனின் தென்பகுதியிலுள்ள ஹவுதி படையின் கட்டுப்பாட்டில் உள்ள சஹர் மாவட்டத்தில் பிரபல வர்த்தக பகுதிகளின் வீடுதிகள் மீது சவுதி கூட்டுப்படையினர் நடத்திய விமானத் தாக்குதலில் பொதுமக்கள் உயிரிழந்ததுடன் கட்டடங்களும் தகர்க்கப்பட்டுள்ளன. (இ-7)

## பஜனைப் பிரார்த்தனை நாளை

(யாழ்ப்பாணம்)

உலகம் முழுவதும் அமைதியும் சாந்தியும் நிலவ வேண்டும் என்பதற்காக ஸ்ரீ சத்திய சாயிபாபா சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் அகில உலக அகண்ட பஜனைப் பிரார்த்தனை நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறும். (இ-10)

# இரட்டை இலை சின்னத்தைப்பெற இலஞ்சம்; குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய உத்தரவு

(டில்லி)

இரட்டை இலை சின்னத்தைப் பெற இலஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் டிசெம்பர் 5 ஆம் திகதிக்குள் துணை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய டில்லி பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அ.தி.மு.கவின் இரட்டை இலை சின்னத்தைப் பெற தேர்தல் ஆணையகத்துக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றதாக இடைத் தரகர் சுகேஷ் சந்திரசேகர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக அவரை டில்லி குற்றப்பிரிவு பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அவர் அளித்த வாக்கு மூலத்தின் அடிப்படையில் அ.தி.மு.க. அம்மா அணியின் துணை பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் அவர் பிணையில் வெளியே வந்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு டில்லி நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் ஏற்கனவே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டிருந்தது. இதில் தினகரன் பெயர் இடம்பெறவில்லை.

இந்த நிலையில் இந்த வழக்கு விசாரணை டில்லி நீதிமன்றில் நேற்று நடந்தது. அப்போது டிசெம்பர் 5 ஆம் திகதிக்குள் துணை குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்ய வேண்டும் என்று டில்லி குற்றப்பிரிவு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் சுகேஷ் சந்திரசேகரின் காவலை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நீட்டித்து உத்தரவிட்டது. (இ-7)

# ஸ்ரீ.சுதந்திரக் கட்சியை ஒழுக்கமிக்க அமைப்பாக ஜனாதிபதியே மாற்றினார்

## அமைச்சர் எஸ்.பி.புகழாரம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஒழுக்கம் மிக்க கட்சியாக மாற்றியவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே என்று சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில்நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பி நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல ஜனாதிபதி முன்னின்று செயற்படுகின்றார். இதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சகலரது ஒத்துழைப்பும் கிடைக்க



வேண்டுமென்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கல்விப் பரிசோதனை அறிமுகம்

(கொழும்பு)

இலங்கைகல்விப் பரிசோதனை சேவை டிசெம்பர் முதலாம் திகதி முதல் 42 தேசியப் பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

மாகாண பாடசாலைகளுக்கு இந்தச் சேவையை அடுத்த ஆண்டிலிருந்து அறிமுகம் செய்யவும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆரம்ப ஏற்பாடாக தேசியப்பாடசாலைகளில் சேவையாற்ற 15 பரிசோதகர்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், மேலும் பலரும் இதில் சேர்க்கப்படவுள்ளனர்.

இந்த ஏற்பாட்டின் பிரகாரம் ஒரு பரிசோதகர் மேற்கொண்ட பின்னர் ஒரே நாளில் கல்வி அமைச்சுக்கு அறிக்கையை சமர்ப்பிப்பார்.

இந்த அறிக்கை தொடர்பில் இரு மாதங்களில் கல்வி அமைச்சு சம்பந்தப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காணும்.

பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக அடையாளம் காண்பதற்காக பரிசோதகர் தமது விஜயத்தின் போது ஒரு பத்திரத்தை வழங்குவார்,

அவற்றை மாணவர்களும் ஆசிரியர்களும் நிரப்ப வேண்டுமென இத் திட்டம் பற்றி விளக்கிய கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் எஸ்.பி.விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

மதிப்பீடுகளின் பின்னர் பாடசாலைகளுக்கு விருது கள் வழங்கும் திட்டமொன்றும் உருவாக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பாதாள உலக தலைவர்கள் நாட்டிலிருந்து தப்பியோட்டம்

(கொழும்பு)

**நாடளாவிய ரீதியில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 25 பாதாள உலக செயற்பாட்டாளர்கள் மற்றும் தலைவர்கள் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளமை விசாரணைகள் ஊடாக தெரியவந்துள்ளது.**

பொலிஸாரின் தேடுதல் வேட்டை மற்றும் எதிர் பாதாளக் குழுவினரால் ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த 25 பேரும் இவ்வாறு நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர்களை கைது செய்வதற்கான திட்டம் வகுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மைக் காலமாக பாதாள உலக செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில், முக்கிய பாதாள உலக தலைவர்கள் பலர் நாட்டைவிட்டு தப்பிச் சென்றிருந்த போதும் அவர்களது சகாக்கள் ஊடாக இங்கு குழு மோதல்களை ஏற்படுத்தி வருகின்றமை தெரியவந்துள்ள நிலையிலேயே அடையாளம் காணப்பட்டுள்ள பல பாதாள உலக தலைவர்களுக்கு எதிராக நீதிமன்றங்கள் ஊடாக சிவப்பு அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்ள பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளதாக அந்த அதிகாரி சுட்டிக் காட்டினார். (இ-7)

## ரூ.59 இலட்சம் பெறுமதியான உதவிகளை முதலமைச்சர் விக்னேஸ்வரன் வழங்கினார்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதலமைச்சரின் 2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் கீழ் 59 இலட்சத்து 4 ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியிலான உதவி வழங்கும் நிகழ்வு வடமாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. பயனாளிகளுக்கான உதவிகளை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வழங்கிவைத்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட 2 குடும்பங்களுக்கு தலா 8 இலட்சம் பெறுமதியிலான புதிய வீடமைப்பதற்கான உதவு தொகையும், சுயதொழில் முயற்சிக்காக ஒரு இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் இரு பயனாளிகளுக்கு அவர்களுக்கான உபகரணங்களும், 2 இலட்சத்து 76 ஆயிரம் ரூபா பெறுமதியில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவருக்கு மடிக் கணனியும், 2 இலட்சத்து 48 ஆயிரம் பெறுமதியில் பாடசாலை மாணவர்கள் 18 பேருக்கு துவிச்சக்கர வண்டியும், 8 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியில் 4 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியில் 8 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும், ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் நீர் இறைக்கும் இயந்திரம் 3 பயனாளிகளுக்கும், வறுமைக் கோட்டுக்குட்பட்ட 16 குடும்பங்களுக்கு தலா 95 ஆயிரம் பெறுமதியான மலசலகூடம் அமைப்பதற்கான உதவியும், 10 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் 11 வறிய குடும்பங்களுக்கு தனித்தனியாக குழிநீருக்கான கிணறு, மற்றும் குழாய்க் கிணறு அமைப்பதற்கான உதவியும், 5 இலட்சத்து 70 ஆயிரம் பெறுமதியில் 19 குடும்பங்களுக்கு கால்நடைவளர்ப்பிற்காக உதவியும் வழங்கப்பட்டன. (இ-9)

## 3 யானைத் தந்தங்களோடு பாதுகாப்புப்படை வீரர் கைது

(கொழும்பு)

மிஹிந்தலை - மாத்தளை சந்திக்கு அருகில் யானைத் தந்தம் வைத்திருந்த சிவில் பாதுகாப்பு படை வீரர் ஒருவரை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 3 யானைத் தந்தங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் இராஜங்கனை - பஹலமாரகஹவெவ பகுதியைச் சேர்ந்தவர். மேலும் அவர் கருவலகஸ்வெவ சிவில் பாதுகாப்பு படையின் மாகாண அலுவலகத்தில் கடமையாற்றுபவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சட்டவிரோத சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## பரிசளிப்பு விழா பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

மத்தொனி கிராம அபிவிருத்தி சங்கத்தினால் நாளை மறுதினம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருந்த பரிசளிப்பு விழா நிகழ்வு, நாட்டில் தற்போது நிலவும் கால நிலை மாற்றம் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது எனவும் விரைவில் மாற்றுத் திகதி அறிவிக்கப்படும் எனவும் சங்கத் தலைவர் அ.ஸ்ரீகரன் அறிவித்துள்ளார். (இ-9-60)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வலயக் கல்வி ஆரம்பக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் தே.மைதிலி மற்றும் யாழ்.பல்கலைக்கழக ஓய்வுநிலை உதவிப் பதிவாளர் என்.தவராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

## கொள்ளைகளுடன் தொடர்புபட்டவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

பல கொள்ளைகளுடன் தொடர்புபட்டவர் என தடயங்களை வைத்து மானிப்பாய், வட்டுக்கோட்டை மற்றும் சுன்னாகப் பொலிஸாரால் தேடப்பட்ட கொள்ளைக் கும்பலில் ஒருவரைக் கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதாகியவர் ஏழாலை முனியப்பர் கோயில் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபர். கடந்த வாரம் சங்குவேலி பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே சந்தேக நபரை ஏழாலை பகுதியில் வைத்து பொலிஸார் பிடித்திருந்தனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் வட்டுக்கோட்டை பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளை, அதேபோல் சுன்னாகப் பொலிஸ் பிரதேசத்திற்கு உட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பெண் ஒருவரின் நகைகள் திருட்டு உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் தெரியவந்துள்ளது.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-4)

## தலைகுனிவை ஏற்படுத்திய பெயர் மாற்றம்




(ஹற்றன்)

ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் மாற்றப்பட்டமைக்கு எதிராக மலையகத்தில் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நோர்வூட் எல்படை தோட்ட மக்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

நோர்வூட் பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்களால் குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்கள் ஏகோபித்த தலைவராக ஏற்றுக் கொண்ட சௌமியமூர்த்தி தொண்டமானின் பெயரால் உருவாக்கப்பட்ட ஹற்றன் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயரை புதிய அரசியல்வாதிகள் மாற்றியமை தொடர்பில் எமக்கு ஏனைய சமூகத்திடம் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது என இதன் போது போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதன்போது, மீண்டும் குறித்த தொழிற்பயிற்சி நிலையத்திற்கு தொண்டமானின் பெயரை சூட்ட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

# சர்வதேச ரீதியாக இலங்கைக்கு பெருமை சேர்த்த வைத்தியர்

(கொழும்பு)

இலங்கை வைத்தியர் ஒருவருக்கு மிக உயர்ந்த சர்வதேச விருது கிடைத்துள்ளது.

2017 ஆம் ஆண்டுக்கான சுகாதாரத்துறை சம்பந்தப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையின் முன்னாள் சுகாதார சேவை மருத்துவ இயக்குனர் ஜீ.ஜீ. சமல் சஞ்ஜீவ என்பவருக்கு இந்த கௌரவம் கிடைத்துள்ளது.

Global Award For Academic Championship 2017 என்ற இந்த விருது உலகின் சிறந்த விஞ்ஞான தகவல் தொடர்பு ஆராய்ச்சி நடவடிக்கையில் ஈடுபடும் International Agency For Standards and Rating (IASR) என்ற நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றது.

அத்துடன் வைத்தியர் ஜீ.ஜீ.சமல் சஞ்ஜீவ அந்த நிறுவனத்தில் (Fellow, Directorate of Health Service – IASR) வாழ் நாள் உறுப்பினராக செயற்பட்டுள்ளார்.

இலங்கையின் நீண்ட கால வரலாற்றில் முதல் முறையாக இந்த விருது கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்க முக்கிய விடயமாகும்.

உலகம் முழுவதும் 56 நாடுகளின் 6000 அறிவியல் ஆராய்ச்சியாளர்களில் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கையை சமர்ப்பித்தனர். இவர்களில் இலங்கை வைத்தியர் ஜீ.ஜீ.சமல் சஞ்ஜீவ



பெற்றிருப்பது இலங்கை சுகாதார சேவைக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

அத்துடன் IASR நிறுவனத்தின் கௌரவிப்பிற்கமைய உலகின் மிக சிறந்த சுகாதார சேவையாளர் 500 பேருக்குள் வைத்தியர் ஜீ.ஜீ. சமல் சஞ்ஜீவ தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்ய புதிய திட்டங்கள்

(கொழும்பு)

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் வகையில், அடுத்த கல்வியாண்டில் குறிப்பிட்ட சில மாற்றங்களைச் செய்யவுள்ளதாக இராஜாங்க கல்வியமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். இசுறுபாயவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நாட்டின் அனைத்துப் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளிலும், தேவைக்கேற்ப பல மாற்றங்களைச் செய்வதற்கு கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது.

அதன்படி, வடக்கு, கிழக்கு மாகாண மற்றும் தோட்டப் பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு புதிய கொள்கைகள், வேலைத்திட்டங்கள், செயற்றிட்ட ஆக்கங்கள், பின்னூட்டல்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பன நடத்தப்படவுள்ளன.

"சர்வதேசப் பாடசாலைகளின் நடவடிக்கைகள், தேசியப் பாடசாலைகளின் கல்விக் கொள்கைகளுக்கு அமைவாக இருப்பதையும் கல்வியமைச்சு உறுதி செய்யவுள்ளதுடன், அது குறித்து தொடர் மேற்பார்வை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. "மேலும், விசேட தேவையுடைய மாணவர்களின் வசதி குறித்தும்கவனம்எடுக்கப்படவுள்ளது. நாடெங்கும் கல்விச் செயறபாட்டில் ஈடுபட்டிருக்கும்விசேட தேவையுடைய மாணவர்கள் அவர்களது கல்வியைத்தடையின்றிப் பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்படவுள்ளது.

"நாடெங்கிலும் உள்ள பாடசாலைகளில்தேசிய மற்றும் இணைப்பு மொழிக் கல்வியை மேம்படுத்தும் நடவடிக்கைகளும்எடுக்கப்படவுள்ளன.

"தமிழ் மொழி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் வேலைத்திட்டங்களும்தொடர் மேற்பார்வைக்கு உட்படுத்தப்படவிருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார் (இ-7)

# சுற்று நிருபங்களால் மாகாணசபை அதிகாரங்கள் முடக்கப்பட்டுள்ளன

## ஹிஸ்புல்லா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை அரசியலமைப்பில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், அமைச்சரவையின் சுற்று நிருபங்களால் முடக்கப்பட்டுள்ளன என மீள் குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு நிர்ணய சபையில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண சபையின் அதிகாரங்களை இவ்வாறு முடக்கியுள்ளதால், மக்களின் கல்வி, சுகாதாரம், வீதி போன்ற அடிப்படை தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாத சூழ்நிலை காணப்படுவதாக ஹிஸ்புல்லா சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், இச்செயற்பாடு



நீக்கப்பட்டு மாகாண சபைகள் முற்று முழுதாக அதிகாரங்கள் உடைய, மக்களுடைய தேவைகளை நிறைவு செய்யக்கூடிய சபையாக மாற்றப்பட வேண்டுமென்றும், அரசியல் யாப்பில் அதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (இ-7)

# மோடியை முந்திய டுபாய் 'லேடி'

(கொழும்பு)

டுபாயில் இருந்து "நெவஸ்கா லேடி" என்ற எண்ணெய் தாங்கி கப்பல் 40 ஆயிரம் மெட்றிக் தொன் பெற்றோலுடன் நேற்று முன்தினம் மாலை கொழும்புத்துறை முகத்தை வந்தடைந்தது.



பெற்றோல் தட்டுப்பாடு மோசமடைந்திருக்கும் நிலையில் இந்தக் கப்பல் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் மாலை தொலை பேசியில் தொடர்பு கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, உடனடியாக எண்ணெய்க் கப்பல் ஒன்றில் பெற்றோலை அனுப்புவதாக உறுதியளித்திருந்தார்.

எனினும், இந்தியாவில் இருந்து இந்தக் கப்பல் வந்து சேருவதற்கிடையில் டுபாயில் இருந்து நெவஸ்கா லேடி எண்ணெய் தாங்கி பெற்றோலுடன் கொழும்புக்கு வந்துள்ளது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1245

Search for people, places and things | Nagendram Home

சுதா மகேஸ்





கெங்கா




வாகீசன்




ரஞ்சிதமலர்




விபுலன்




மோகனா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வசீம் தாஜுடீன் கொலை! தொலைபேசி இலக்கங்கள் இனங்காணப்பட்டுள்ளன

## புலனாய்வுத்துறை தகவல்

(கொழும்பு)

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் கொலை தொடர்பில் தொலைபேசி அழைப்புக்கள் பல அடையாளம் காணப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.



இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள இலக்கங்களுக்குரியவர்களையும் அவர்களது நடவடிக்கைகளையும் உறுதிப்படுத்துவதற்கு அரச நிறுவனங்கள் பலவற்றிடம் தகவல் பெறப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் கொழும்பு மேலதிக நீதவான் ஜெயராம் ட்ரொக்ஸியிடம் தெரிவித்துள்ளது. (இ-7)

## சைட்டம் கல்லூரி விவகாரம்

# உண்ணாவிரதம் இடை நிறுத்தம்

(கொழும்பு)

சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக, அரச மருத்துவக் கல்லூரிகளின் மாணவர்களது பெற்றோர் சங்கம் நடத்திய சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சைட்டம் கல்லூரி தொடர்பில் அரசாங்கம் முன்வைத்திருந்த தீர்வுகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்றும், உரிய தீர்வை அரசாங்கம் அறிவிக்கும் வரையிலும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் இருக்கப் போவதாக மருத்துவக் கல்லூரி மாணவர்களின் பெற்றோர் சங்கம் அறிவித்திருந்தது.

அதன்படி, நேற்று முன்தினம் மாலை அச்சங்கத்தைச் சேர்ந்த பெற்றோர் ஐந்து பேர் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

எனினும், பிரதியமைச்சர் டாக்டர் ஹர்ஷ டி சில்வாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர், உண்ணாவிரதத்தைக் கைவிடுவதாக அவர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

# 'அதிகாரப்பகிர்வு புலிகளுக்கு அல்ல'

## அமைச்சர் அமரவீர விளக்கம்

(கொழும்பு)

அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது விடுதலைப் புலிகளுக்கு எனச் சிலர் நினைக்கின்றார்கள். அல்லது தமிழர்களுக்கு மாத்திரம் அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கப்போவதாக நினைக்கின்றார்கள். அனைத்து மாகாணங்களுக்கும் சமமான வகையிலான அதிகாரங்களைவழங்குவதற்கே, நாம் யோசனைகளை முன்வைத்திருக்கிறோம்" என கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று முன்தினம் தெரிவித்தார்.



புதிய அரசமைப்புக்கான அரசமைப்புச் சபையின் வழிப்படுத்தல் குழு இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதம் அரசமைப்புச் சபையில் ஐந்தாவது நாளாகவும் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாம் 30 வருட கால யுத்தத்துக்கு முகங்கொடுத்திருக்கிறோம். இந்த யுத்தத்தில் வடக்கிலும் தெற்கிலும் உயிரிழந்தவர்களில் இலங்கை இளைஞர்களே பலியாகினார்கள். அரசமைப்புத் தொடர்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடல் மாத்திரமே இடம்பெற்று வருகின்றது"

"ஆனால், இது இறுதியான அரசமைப்பு எனவும் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது என்றும் பலர் கருத்துகளைப் பரப்பி வந்தார்கள். ஆனால், என்ன நடந்தது? இந்த விவாதம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இருந்த நிலைமையும் இன்று உள்ள நிலைமையும் மாற்றமடைந்திருக்கின்றது" என்றார்.

"விவாதத்தின் ஆரம்ப நாளில் நாடாளுமன்றத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. முன்னாள் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தவறான கருத்தை முன்வைத்தார்கள். புதிய அரசமைப்பைக் கொண்டு வந்தால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டும்என கமால்குணரத்ன போன்றோர் கூறினார்கள். இது சர்வதேசத்தின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது" என்றார்.

"இவ்வாறானவர்கள், யுத்த காலத்தில் எவ்வாறு நடந்து கொண்டிருப்பார்கள் என்பதையும்சர்வதேசத்தின்பார்வைக்குச் சென்றது.

புதிய அரசமைப்பு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் காலப்பகுதியில் எமக்கு ஜி.எல். பீரிஸ் பாடம் எடுத்தார். புதிய அரசமைப்பு இவ்வாறுதான் வரப்போகின்றது என எங்களுக்குத் தெளிவுபடுத்தினார். ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு எனக் கூறினார். அவருடைய தெளிவுபடுத்தலுடன் அது தொடர்பான செய்தியை நாம் கிராம மட்டத்திலிருந்து மக்களுக்குக் கொண்டு சென்றோம்.

ஆனால், இன்று அவர் வேறொரு கருத்தை முன்வைத்து வருகின்றார்.

"ஆட்சியில் உள்ளபோது ஒரு கருத்தையும் ஆட்சியில் இல்லாதபோது மற்றுமொரு கருத்தையும் கூறுவது வாடிக்கையாகிவிட்டது. அதேபோல், ஆட்சியில் இல்லாதபோது வழங்கப்படும் உறுதிமொழிகள் ஆட்சிக்கு வந்தபோது மறந்துவிடுவதும் இதற்கு முன்னர் இடம்பெற்றுள்ளது.

"ஆனால், தற்போதுள்ள தேசிய அரசாங்கம் அவ்வாறு செயற்படப்போவதில்லை. நாம் மக்கள் நம்பிக்கையை அனைத்துத் தரப்பினரதும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது.

"தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தபோது, எவ்வாறான கருத்துகள் பரப்பப்பட்டன. இன்னொரு நாடு உருவாகப்போகின்றது, இன்னொரு தேசியக் கொடி உருவாகப் போகின்றது என்றார்கள். ஆனால், இன்று என்ன நடந்துவிட்டது? தமிழ் மொழியில் அந்த மக்கள் தேசிய கீதத்தின் அர்த்தம் உணர்ந்து பாடுவதை, நாம் அனைவரும் இலங்கையர்களாக உணரவில்லையா?

"இவையெல்லாம் மக்களைத் திசைதிருப்புவதற்காக குறுகிய நோக்கத்துடன் செய்யப்படுபவை. எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்களின் தலைவராக இருந்து நடுநிலைமையாகச் செயற்படுகின்றார். இவரது காலத்தில் எமக்கு புதிய அரசமைப்புக் கொண்டு வர முடியாமல் போனால் எதிர்காலத்தில் பல்வேறு சவால்களுக்கு நாம் முகங்கொடுக்க வேண்டி வரும்.

"அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது விடுதலைப் புலிகளுக்கு எனச் சிலர் நினைக்கின்றார்கள், பயங்கரவாதிகளுக்கு, நாட்டைப் பிளவுபடுத்திக்கொடுக்கப் போவதாக நினைக்கின்றார்கள். அல்லது தமிழர்களுக்கு மாத்திரம் அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கப்போவதாக நினைக்கின்றார்கள்.


"ஆனால், நாம் அவ்வாறு செய்யப்போவதில்லை. அனைத்து மாகாணங்களுக்கும் சமமான வகையிலான அதிகாரங்களை வழங்குவதற்கே நாம் யோசனைகளை முன்வைத்திருக்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எரிபொருள் நெருக்கடியை தீர்ப்பதாக மைத்திரியிடம் மோடி வாக்குறுதி

## கப்பலை அனுப்பினார்

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சாத்தியமான எல்லா வழிகளிலும் இந்தியா உதவும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.



இலங்கையில் கடந்த சில நாட்களாக பெற்றோலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையடுத்து ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பாக நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பேச்சு நடத்தினார்.

நேற்று முன்தினம் மாலை இந்த தொலைபேசி உரையாடல் இடம்பெற்றதாக இந்திய தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த தொலைபேசி உரையாடலின் போது, பெற்றோலுடன் எண்ணெய் தாங்கி கப்பல் ஒன்றை அனுப்பிவைப்ப தாகவும் இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கொச்சியில் இருந்து புறப்பட்ட இந்தக் கப்பல் கொழும்பு வந்து சேரும். மேலும் தேவைப்படும் பெற்றோலை கொச்சியில் இருந்து அனுப்பிவைப்பதாகவும் இந்தியப் பிரதமர் கூறியுள்ளார்.


அத்துடன், லங்கா இந்தியன் ஓயில் நிறுவனத்தின் கையிருப்பில் உள்ள பெற்றோலை உடனடியாக பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு வழங் குமாறும் இந்தியப்பிரதமர் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# குண்டு வைத்து விடுவார் 'விமலை சோதிக்கவும்'



(கொழும்பு)

"நாடாளுமன்றத்துக்குக் குண்டு வைக்க வேண்டும் எனக் கூறிய விமல் வீரவன்ச, நாடாளுமன்றுக்கு வரும்போது, தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்" என ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் அமரசேன நேற்று முன்தினம் தெரிவித்தார்.




புதிய அரசமைப்புக்கான அரசமைப்புச் சபையின் வழிப்படுத்தல் குழு இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதம், அரசமைப்பு சபையில் ஐந்தாவது நாளாகவும் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"விமல் வீரவன்ச, நாடாளுமன்றத்துக்கு வரும்போது முதலாவது வாயிற் கதவிலிருந்து நாடாளுமன்ற வாசல் வரை ஒவ்வொரு கதவுகளிலும் அவரை நிறுத்தி தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அவருடைய உடல், வாகனம், கோப்புகள் என அனைத்தும் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஆகக் குறைந்தது, ஒரு மணித்தியாலமாவது அவர் மீது சோதனை நடத்த வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாராளுமன்றுக்கு துவிச்சக்கரவண்டியில் வந்த மகிந்த அணி



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் துவிச்சக்கரவண்டியில் நேற்று பாராளுமன்றுக்கு வருகை தந்தனர்.

2018ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் கலந்து கொள்ளவதற்காகவே அவர்கள் இவ்வாறு வருகை தந்துள்ளனர்.

நாட்டில் கடந்த சில தினங்களாக ஏற்பட்டிருக்கும் எரிபொருள் தட்டுப்பாட்டை வெளிப்படுத்தும் வகையிலேயே, கூட்டு எதிர்க்கட்சியினர் துவிச்சக்கரவண்டியில் பாராளுமன்றுக்கு வருகை தந்துள்ளனர். (இ-7)

# மாதுளை



ஈரானை பூர்வீகமாக கொண்டதாக கருதப்படும் மாதுளையானது புனிகேசியே குடும்பத்தைச் சேர்ந்த Punicagranatum L இனத் தாவரமாகும். பொதுவாக தமிழில் மாதுளை என்றழைக்கப்படுகின்றது.

மருத்துவக் குணத்தில் வேறு எந்த பழத்திற்கும் ஈடு இணையற்ற பழமாகவும் அலங்காரத் தாவரமாகவும் விளங்குகின்றது. புளிப்புக் கலந்த இனிப்புச் சுவையான கவரக் கூடிய அதன் மேல் வளரியானது ஒரு பழமாக நுகரப்படுகின்றது.


மாதுளையில் இருந்து உணவுப்பொருட்கள் தவிர அழகு சாதனப்பொருட்கள் மற்றும் நிறமூட்டிகளும் தயாரிக்கப்படுகின்றன.

போசணை நிறைந்த உயர் தரமான மாதுளை மக்களிடையே ஒருமருத்துவப் பொருளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மாதுளையில் உள்ள நீரில் கரையாதநார் அதிகளவு காணப்படுவதால் உணவு இலகுவில் சமிபாடடைவதோடு குடலிலும் இலகுவாக அசையும். மேலும் உடல் நிறையை குறைப்பதற்கும் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்தவதற்கும் உதவுகின்றது.

மாதுளையை தினந்தோறும் உண்பதால் நாளாந்த விற்றமின் "சி " தேவையில் 17 வீதத்தை பூர்த்தி செய்வதுடன் நோய் எதிர்ப்பு சக்தியையும் குருதிச் சுற்றோட்டமும் அதிகரிக்கின்றது.

மாதுளையிலுள்ள நீரில் கரையும் தனினும் (Hydrootysabletanimi) மற்றும் பிளேவனொயிட் (Flavonild) காரணமாக இருதயநோய் ஆபத்துக்களை குறைத்தல், குருதியமுக்கத்ததை கட்டுப்படுத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

புற்று நோய்க்கு மாதுளைச்சாறு உகந்ததோடு புதிய புற்று நோய்க்கலங்கள் உருவாகும்வேகத்தை குறைப்பதுடன் கலங்கள் சிதைவடைவதையும் தூண்டுகின்றது.



மாதுளையின் விசேட இயல்பாக ஆயுள்வேத வைத்தியத்தில் பூக்கள், இலைகள், பட்டை, காய் மற்றும் வேர் என்பன முக்கியத்துவம் பெறுகின்றது.

• வேரையும் பட்டையையும் அவித்து அந் நீரினை காயங்களை சுத்தம் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

• கண் நோய் ஏற்படும் போது இலையை அவித்து இந் நீரால் கண்களை கழுவுதல்.

• அஜீரணம், வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுவலி என்பனவற்றிற்கு மருந்தாக அமைகின்றது.

• அதிகளவு இரத்தப் போக்கு மற்றும் வயிற்றோட்டம் ஏற்படும் போது கட்டுப்படுத்துவதற்கு மரப்பட்டையை அவித்து வழங்கப்படும்.

மாதுளையானது எல்லா வகை மண்களிலும் வளரக் கூடியமற்றும் வரட்சியையும் பனிப் பொழிவையும் தாங்கி வளரக்கூடியதொரு தாவரமாகும்.

விதைகள் மற்றும் பதிய முறை மூலம் இத் தாவரத்தை இனப் பெருக்கம் செய்யலாம். விதைகள் மூலமே அதிகளவு தாவரங்கள் இனப் பெருக்கம் செய்யப்படுகின்றது. எனினும் மாதுளையில் அதிகளவில் தன் மகரந்த சேர்க்கை இடம் பெற்றாலும் அயன் மகரந்த சேர்க்கையும் நடை பெறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

வேர்விட்டத் துண்டங்கள் மற்றும் காற்றுப் பதியம் மூலமும் தாய்த் தரவரத்தை ஒத்த இனங்களை இனப்பெருக்கம் செய்ய முடியும்.

ஆரம்ப காலத்தில் வீட்டுத் தோட்ட பயிராக செய்கை பண்ணப்பட்ட மாதுளையானது தற்போது வர்த்தக ரீதியில் செய்யை பண்ணப்படுகின்றது. ஏக்கரொன்றில் 3மீற்றர் X 3 மீற்றர் இடைவெளியில் 400 மரங்களை நடுகை செய்யலாம். மழைக்கால ஆரம்பத்துடன் நாற்றுக்களை நடுகை செய்வது சிறப்பனதாகும்.

மாதுளையில் இருந்து அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கும் மரத்திற்கு சிறந்த தோற்றத்தை வழங்குவதற்கும் ஆரம்பத்திலிருந்தே மரத்தை முறையாக பயிற்றுவிக்க வேண்டும். மேலும் பிரதான தண்டுகளில் 3-4 தண்டுகள் வளர விடுவது மிகவும் பொருத்தமானதாகும். பிரதான தண்டுகள் 2- 2 ½ அடி உயரம் வளர்ந்ததும் நுனியரும்புகளை அகற்றி கிளை கொள்வதனை ஊக்கிவித்தல் அவசியமானதாகும்.

ஒவ்வொரு அறுவடை முடிந்த பின்னரும் நீர் வாதுக்கள் தேவையில்லாத கிளைகள், கீழ் நோக்கி சரியும் கிளைகள், ஒட்டுண்ணித் தாவரங்கள் என்பனவற்றை அகற்றுதல் முக்கியமானதொரு செயற்பாடாக அமைகின்றது.

வருடம் முழுவதும் பழங்களைபெற்றுக் கொள்ளக் கூடியதாவிருப்பினும் வருடத்தின் மத்தியகாலத்திலிருந்தே அதிகளவு பழங்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக விருக்கும். பூக்கள் உருவாகி 4 மாதங்களில் பழங்களை பெற்றுக் கொள்ளலாம்.

இப்பழத்தினை நேரடியாகவும், வெவ்வேறு பழங்களுடன் பழக்கலவையாகவும் பழச்சாறாகவும் வைன் ஆகவும் சாப்பிடலாம்.

ஆர்.மாலினி, பாடவிடய உத்தியோகத்தர் (பூங்கனியியல்), பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், முல்லைத்தீவு.

# தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண நாமலிடம் ஆதரவு கோருகிறார் சம்பந்தன்



(கொழும்பு)

தமிழ்மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வினை பெறவேண்டுமாயின் நாமல் ராஜபக்ஷ ஆக்கபூர்வமாக முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்பதை காரணம் காட்டி தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைக்கு உரிய தீர்வுகளை பெறாது இருக்க முடியாது என்பதை சம்பந்தன் ஐயா ஏன் உணரவில்லை எனநாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வெளியிட்டிருந்த டுவிட்டர் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அரசியல் தீர்வு மூலமாகவே எமது மக்கள் பூரண சமாதானத்தையும் சமத்துவத்தையும் பெற முடியும். அதனால் அரசியல் தீர்வு விடயத்தில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டியது எமது கடமை என்று கருதுகின்றோம். அதற்காக ஏனைய விடயங்களில் நாம் கவனம் செலுத்தாது இருக்கின்றோம் என்று கூறுவது பொறுப்பற்ற பேச்சாகும்.

கைதிகள் விவகாரம், காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் போன்ற விடயங்களில் அனைத்து வழிகளிலும் முயற்சித்து வருகின்றோம்.

இவை யாவும் முறையான பாதையில் நகர்கின்றன. இவை முழுமை பெறாது இருப்பதற்கு துவேசவாதிகளே காரணமாகின்றனர். பெரும்பான்மை மக்கள் மத்தியிலும், இராணுவத் தினர் மத்தியிலும் இனத்து வேசத்தை கிளறுவதே தீர்வுக்கு தடையாக அமைகின்றது.

எனவே பொறுப்பற்ற பேச்சில் ஈடுபடாமல் நியாயமான அரசியல் தீர்வு தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் தமது நிதானமான ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்குவார்களாயின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு எட்டப்படுவதற்கு வாய்ப்பு உண்டு என்று தெரிவித்துள்ளார். (இ-7)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகத்தில் சொன்ட நிறுவனத்தின் அனுசரணையில் மாணவர்களுக்கான ஆரோக்கிய விழிப் புணர்வு செயலமர்வு அண்மையில் இடம்பெற்றது. (இ-10)

# மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ்கவுன்சிலின் யாழ்ப்பாணக் கிளை இவ்வாண்டு சாதாரண தர ஆங்கில இலக்கிய பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புக்களை நடத்த வுள்ளது.

இம் மீட்டல் வகுப்புகள் நாளை 11ஆம் திகதியும் நாளை மறுதினம் 12ஆம் திகதியும் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியின் டெக்னோலஜி மண்டபத்தில் நடைபெறும்.

பங்குபற்ற விரும்புவோர் பிரிட்டிஷ் கவுன்சிலின் யாழ்ப்பாணக்கிளையின்தொலைபேசி இலக்கத்துடன் (021 752 152) தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



# சிறுவர் அரங்கம்

## கைக்கு எட்டியது...

ஒரு ஊரின் அருகே பெரிய காடு ஒன்று இருந்தது. அந்தக் காட்டில் பலவித மரங்கள் நன்கு செழித்து வளர்ந்திருந்தன. அந்த மரங்களை நாடி பலவிதமான பறவைகளும் வந்து மகிழ்ச்சியோடு தங்கிச் செல்லும். இவற்றை வேட்டையாட வேட்டைக்காரர்களும் வருவார்கள்.

ஒருநாள் இந்தக் காட்டுக்கு ஒரு வேட்டைக்காரன் வந்தான். வெகு நேரமாகியும் அவனுக்கு எந்தப் பறவையோ விலங்கோ அகப்படவே இல்லை. மிகவும் களைத்துப் போனவன் ஒரு மரத்தடியில் சற்றே ஓய்வெடுக்கலாம் என அமர்ந்திருந் தான். திடீரென இனிமையான குரல் கேட்டது. அந்த மனிதன் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். சற்றே தலையைத் தூக்கி மரத்தின்மேல் பார்த்தான். ஆச்சரியப்பட்டுப்போனான்.

மரத்தின்மேல் அவன் கண்டது தங்கமயமான அழகிய பறவை. அதைப்பிடிக்க விரும்பியவன் தன் கையிலிருந்த வில்லில் அம்பு தொடுத்தான். அப்போது அந்தப் பறவை ஒரு தங்கச் சிறகை அவன் மீது உதிர்த்தது. அந்தச்சிறகை எடுத்துச் சென்றவன் அதைவிற்று நல்ல உடை, உணவு பெற்று நிம்மதியாக இருந்தான்.

ஆனால் பேராசை அவனை விடவில்லை. மீண்டும் காட்டுக்குச் சென்றான். அதே மரத்தடியில் வெகுநேரம் காத்திருந்தான். அவன் எதிர்பார்த்தது போலவே அந்தத் தங்கப் பறவை அங்கு பறந்து வந்து ஒரு கிளையில் அமர்ந்தது. வேடன் சட்டென அம்பை எடுத்து அந்தப் பறவையைக் குறி பார்த்து அடித்தான். அடிபட்ட பறவை வேடனின் காலடியில் விழுந்தது. சட்டென அதைப் பிடித்துக் கொண்ட வேடன் அதன் காயத்திற்கு காட்டிலிருந்து ஒரு பச்சிலையைப் பறித்துக் கட்டுப் போட்டான். சற்று நேரத்தில் அந்த வேடன் அந்தப் பறவையுடன் தன் வீடு நோக்கி நடந்தான்.

அவன் வீட்டைச் சென்று அடைந்தவுடன் அந்தத் தங்கப் பறவை ஒரு சிறகை உதிர்த்தது. அந்தச் சிறகை விற்று தங்கப் பறவைக்கு ஒரு கூண்டும் தன்குடும்பத்திற்கு வேண்டிய பொருட்களையும் வாங்கி வந்தான்.

அன்று இரவு படுத்துக் கொண்டிருந்த அந்த வேடனுக்கு திடீரென்று ஒரு சந்தேகம் முளைத்தது. நம் நாட்டு அரசனுக்கு இந்த அரிய பறவையைப் பற்றித் தெரிந்தால் நான் மறைத்து வைத்து குற்றம் என்று என்னைத் தண்டித்து விடுவாரே. இந்த அபூர்வப் பறவை மன்னருக்குத்தான் சொந்தம். நாளையே இதை மன்னரிடம் சேர்த்து விடுவோம் என்று முடிவு செய்தான்.

மறுநாள் காலையில் அந்த அதிசயப் பறவையைக் கூண்டுடன் எடுத்துக் கொண்டு அரச சபைக்குச் சென்றான். வழியெங்கும் மக்கள் அந்த அழகிய தங்கப் பறவையைப் பார்த்து அதிசயப்பட்டு நின்றனர்.



சிலர் அவனுடன் சென்று சபையில் நடப்பதைக் காணவேண்டும் என்னும் ஆவலுடன் சென்றனர்.

மன்னன் முன் சென்று அந்தப் பறவையை வைத்து வணங்கினான் வேடன். அப்போது மன்னனின் முன்பாகவே ஒரு தங்கச் சிறகை உதிர்த்தது அந்தப் பறவை. அதைக் கண்டு மன்னன் மிகவும் ஆச்சரியப்பட்டான். சேவகரிடம் அந்தப் பறவையைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளும்படி ஆணையிட்டான். வேடனுக்கு மிகுந்த பொன்னும் பொருளும் கொடுத்தனுப்பினான். வேடனும் மகிழ்ச்சியுடன் தன் இருப்பிடம் சென்றான்.

மந்திரியார் மெதுவாக மன்னனிடம் பேசினார். "மன்னா, இது ஏதோ மந்திரப் பறவை போலத் தோன்றுகிறது. இது அரசரின் அரண்மனையில் இருந்தால் அதனால் அரசருக்கும் இந்நாட்டுக்கும் ஏதேனும் தீங்கு விளைந்துவிடுமோ என நான் அஞ்சுகிறேன் மன்னா"

அரசனும் சிந்தித்தான். "உண்மைதான் நீங்கள் சொல்வதும் சிந்திக்க வேண்டிய விடயம்தான். நானும் இதுவரை இதுபோன்ற பறவையைப் பார்த்ததில்லை. என்ன செய்யலாம் என்று நீங்களே கூறுங்கள் மந்திரியாரே"

சற்றும் தாமதியாது, "விட்டு விடுங்கள். அது எங்கேயாவது போய்த் தொலையட்டும்" என்றார்.

மன்னனும் சிந்தித்தான் "ஆம் மந்திரியாரே, எனக்கும் அச்சமாகத்தான் உள்ளது. நீங்கள் சொல்வது போல் இதைவெளியே விட்டு விடுவதே நல்லது"

உடனே காவலனை அழைத்து, "அந்தப் பறவையைக் கூண்டைத் திறந்து வானில் பறக்க விட்டு விடுங்கள்." என்று ஆணையிட்டான் மன்னன். கூண்டு திறக்கப்பட்டது. பறவை ஆனந்தமாக விண்ணில் பறந்தது. காட்டை நோக்கி அது பறக்குமுன் அது தனக்குள் கூறிக்கொண்டது. சரியான முட்டாள் மக்கள்.

இவர்களுக்கு கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே. என்னைப் பிடித்த வேடனுக்கு என் சிறப்பை நான் காட்டியும் அவன் அதைப் பயன்படுத்திக் கொள்ளாதது முட்டாள்தனம். என்னைப் பிடித்த வேடன் அதை மன்னனிடம் கொடுத்தது முட்டாள்தனம். அந்த மன்னன் முன் நான் தங்கச் சிறகை உதிர்த்தும் என் சிறப்பைப் புரிந்து கொள்ளாமல் என்னை ஏதோ தீய சக்தி என நினைத்தது பெரிய முட்டாள்தனம்.

அத்துடன் மந்திரியின் அர்த்தமற்ற பேச்சைக் கேட்டு என்னை விரட்டிவிட்டது பெரிய முட்டாள்தனம். இத்தகையவர்களுக்கு எத்தகைய சந்தர்ப்பம் வாய்த்தாலும் அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாது. இவர்கள் தங்களின் கைக்கு எட்டியதை வாய்க்கெட்டவிடாது செய்து கொண்டனர்.

ஆனாலும் என்ன! இவர்கள் முட்டாள்தனம் எனக்கு விடுதலை கிடைத்துவிட்டது என்று சொல்லிக் கொண்டே மகிழ்ச்சியுடன் பறந்து சென்றது அந்தப் பறவை.

எனவே வாழ்க்கையில் நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் அறிவை நாம் பெற்றிருக்கவேண்டும். கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்பவனே வாழ்க்கையில் வெற்றி பெறுவான். மகிழ்ச்சியாகவும் வாழ்வான்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1520 - டென்மார்க் மன்னன் இரண்டாம் கிறிஸ்டியான் சுவீடனை முற்றுகையிட்டபோது ஸ்டொக்ஹோம் நகரில் பலரைக் கொன்றான்.

❖1847 - ஸ்டீவன் விட்னி என்ற பயணிகள் கப்பல் அயர்லாந்தின் தெற்குக் கரையில் மூழ்கியதில் 92 பேர் கொல்லப்பட்டனர்.

❖1918 - யாழ்ப்பாணம், சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய நகரங்களில் இடம்பெற்ற உள்ளூர்க் கலவரங்களில்பல கடைகள் சூறையாடப்பட்டன.

❖1928 - ஹிரொஹிட்டோ ஜப்பானின் 124வது மன்னரானார்.

❖1970 - சோவியத்தின் லூனா 17 விண்கப்பல் சந்திரனுக்கு "லூனாகோட்" எனப்படும் தானியங்கி ஊர்தியைக் கொண்டு சென்றது.

❖1993 - தவளை நடவடிக்கை, 1993: யாழ்ப்பாணத்தில் பூநகரி, நாகதேவந்துறை இராணுவக் கடற்படைக் கூட்டுத்தளம் மீது விடுதலைப் புலிகள் வெற்றிகரமான தாக்குதலை ஆரம்பித்தனர்.

❖1995 - நைஜீரியாவில் சுற்றுச் சூழல் ஆதரவாளர் கென் சிறோ-வீவா என்பவரும் அவரது 8 சகாக்களும் தூக்கிலிடப்பட்டனர்.

❖2006 - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொழும்பில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புகள்

❖1483 - மார்ட்டின் லூதர், கிறித்தவச் சீர்திருத்த இயக்கத் தலைவர், செர்மானிய மதகுரு (இ. 1546)

❖1697 - வில்லியம் ஹோகார்த், ஆங்கிலேய ஓவியர் (இ. 1764)

❖1910 - கொத்தமங்கலம் சுப்பு, தமிழக எழுத்தாளர், நடிகர் (இ. 1974)

❖1910 - சாண்டில்யன், தமிழக எழுத்தாளர் (இ. 1987)

❖1917 - சோ. தம்பிராஜா, இலங்கைத் தமிழ் அரசியல்வாதி

❖1918 - சுந்தர் லால் குரானா, இந்திய அரசியல்வாதி

❖1919 - மிக்கைல் கலாசுனிக்கோவ், ஏகே-47 துப்பாக்கியை வடிவமைத்த ரஷ்யர் (இ. 2013)

❖1934 - அ. துரைராஜா, இலங்கைக் கல்வியாளர், பொறியியலாளர் (இ. 1994)

❖1934 - கேசரிநாத் திரிபாதி, இந்திய அரசியல்வாதி

❖1953 - எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா, இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதிபதி (இ. 2014)

❖1957 - டக்ளஸ் தேவானந்தா, இலங்கை அரசியல்வாதி

❖1960 - நீல் கெய்மன், ஆங்கிலேய எழுத்தாளர்

❖1989 - தரோன் எகேர்டன், ஆங்கிலேய நடிகர்

❖1994 - சோயி டொச், அமெரிக்க நடிகை

### இறப்புகள்

❖1549 - மூன்றாம் பவுல் (திருத்தந்தை) (பி. 1468)

❖1891 - ஆர்தர் ராம்போ, பிரான்சியக் கவிஞர் (பி. 1854)

❖1938 - முஸ்தபா கெமால் அத்தாதுர்க், துருக்கியின் 1வது அரசுத்தலைவர் (பி. 1881)

❖1977 - தமிழ்வாணன் தமிழக எழுத்தாளர், இதழாசிரியர். (பி.1926)

❖1982 - லியோனிட் பிரெஷ்னெவ், சோவியத் ஒன்றியத்தின் 4வது அரசுத்தலைவர் (பி. 1906)

❖1995 - கென் சரோ விவா, நைஜீரிய எழுத்தாளர் (பி. 1941)

❖2006 - நடராஜா ரவிராஜ், இலங்கைத் தமிழ் சட்டத்தரணி, அரசியல்வாதி (பி. 1962)

❖2013 - புஷ்பா தங்கதுரை, தமிழக எழுத்தாளர் (பி. 1931)

❖2014 - எம். எஸ். எஸ். பாண்டியன், சமூக ஆய்வாளர், பேராசிரியர்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 160 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 90 | 100 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 380 | 450 | 600 | 600 |
| தக்காளி | 100 | 200 | 90 | 120 | 140 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 20 | 60 | 60 | 40 |
| கோவா | 150 | 160 | 80 | 120 | 160 | 120 |
| கரட் | 120 | 200 | 80 | 100 | 240 | 120 |
| பூசணி | 80 | 100 | 60 | 50 | 80 | 40 |
| புடோல் | 120 | 100 | 70 | 80 | 100 | 100 |
| வாழைக்காய் | 50 | 100 | 60 | 80 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 250 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 170 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 200 | 200 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 80 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 200 | 150 | 120 | 140 | 200 | 260 |
| லீக்ஸ் | 150 | 220 | 170 | 200 | 120 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 60 | 120 | 120 | 100 |
| கறிமிளகாய் | 300 | 200 | 250 | 280 | 320 | 250 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 110 | 100 | 80 | 400 |
| போஞ்சி | 250 | 200 | 100 | 120 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ளா | 180 | 100 | 100 | — | 160 | 140 |
| கீரை-1பிடி | 50 | 20 | 30 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 60 | 150 | 120 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80 | 75 | 60-100 | 100 |
| இராசவள்ளி | — | — | 200 | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | 250 | — | 200 | — |
| முள்ளங்கி | 80 | — | 30 | 80 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 40 | — | 30 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | — | 15 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 60 | — | — | — | 80 | 80 |

எல்லோரும் நீதியை விரும்புகின்றனர்.
ஆனால் அடுத்தவர் விடயத்தில் மட்டும்.

- யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தெரு நாய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எதுவும் இல்லையா?

சுற்றுச்சூழல் சுகாதாரம் பற்றி அதிகூடிய கவனம் எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

டெங்கு நுளம்புப் பெருக்கம் முதல் தொற்று நோய்களின் அதிகரிப்புவரை எல்லாமும் மக்கள் சமூகத்தை அச்சுறுத்துகின்றது.

கூடவே கழிவகற்றல் முகாமைத்துவம் இன்னமும் விரிவுபடாமல் உள்ளது.

வீட்டுக்கழிவுகளை தெருக்களில் கொட்டிவிட்டு தங்களின் வேலை முடிந்துவிட்டதாக நினைப்பவர்கள் இன்னமும் நம் மத்தியில் பெருவாரியாக இருக்கின்றனர் என்பதை நினைக்கும்போது நெஞ்சு பொறுக்கவில்லை.

இவை ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் தெரு நாய்களின் அட்டகாசம் தாங்க முடியாமல் உள்ளது.

தெரு நாய்க்கடி, தெரு நாய்களால் ஏற்படும் விபத்துக்கள், வீதிகளில் எச்சம் போடும் அசிங்கம், வீதி ஓரங்களில் கிடக்கும் கழிவுகளை இழுத்து வந்து நடுவீதியில் வைத்து நாலாபுறமும் பரப்பி ஒட்டுமொத்த இடத்தையும் அசுத்தமாக்குதல் என ஏகப்பட்ட பிரச்சினைகள் தெரு நாய்களால் ஏற்படுகின்றன.

எனினும் இவை பற்றி எவரும் எந்தக் கவலையும் கொள்ளாமல் அது பற்றிப் பேசாமல் செல்கின்றனர்.

மழை காலத்தில் தெரு நாய்கள் மட்டுமல்ல, வளர்ப்பு நாய்களும் நடுவீதியில் மலம் கழிக்கின்றன.

காலைப்பொழுதில் பள்ளி செல்லும் மாணவர்களும் பாதசாரிகளும் வாகனங்களும் நாய்களின் மலக்கழிவுகளை மிதித்துச் செல்வதைப் பார்க்கும்போது எங்கள் நாடு எப்போது தான் திருந்தப் போகிறது என்று நினைந்து வேதனைப்படுவதைவிட வேறுவழி தெரியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனையில் நாய்களை அழிக்கக்கூடாது, கொல்லக்கூடாது என்று கூறப்பட்டுவிட்டது என்பதற்காக, தெரு நாய்களை அழிப்பதில்; அதனைக் கட்டுப்படுத்துவதில், அதன் பெருக்கத்தை தடுத்தல் என்பதில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தால், நாய்கள் வாழும். மனிதர்கள் தொற்றுநோய்க்கு ஆளாகித் துன்பப்படுவர் என்பது விதியாகிவிடும்.

எனவே மாநகர சபைகள், நகர, பட்டின, பிரதேச சபைகள் விசேட திட்டமொன்றைத் தீட்டி தெரு நாய்களைக் கட்டுப்படுத்துவது, எதிர்காலத்தில் தெருநாய்களை இல்லாமல் செய்வது, அதற்காக நாய்கள் பற்றிய தரவுகளைச் சேகரித்து அவற்றுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவது, பெண் நாய்களுக்குக் கருத்தடை செய்வது என்ற வகையில் தெரு நாய் என்ற பிரச்சினையை இல்லாமல் செய்ய வேண்டும்.

நாய்களை வளர்த்து அவற்றைத் தெருவில் விடுவது, நாய்க்குட்டிகளை சந்தைகள், சன நடமாட்டங்கள் உள்ள இடங்களில் விடுவது, அவைகள் நோய்க்கு ஆளாகித் திரிவது என்ற பெரும்பாவம் நம் மண்ணில் நடக்கிறது.

இவை அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இது விடயத்தில் உள்ளூராட்சி சபைகள் பொருத்தமான வேலைத்திட்டங்களை ஒழுங்குபடுத்தி அமுல்படுத்துவது கட்டாயமானதாகும்.

# டெங்கு நோயின் தாக்கம் வட மாகாணத்தில் அதிகரிப்பு

## சுகாதார அமைச்சர் குணசீலன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடத்தைவிட இவ்வருடம் வட மாகாணத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பாக மன்னாரில் நேற்று வியாழக்கிழமை மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் 2016 ஆம ஆண்டுடன் இவ்வருடத்தை ஒப்பிட்டு பார்க்கின்றபோது டெங்கு நோயின் தாக்கத்திற்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை இவ்வருடம் அதிகரித்துக் காணபபடுகின்றது.

கடந்த வருடம் வட மாகாணத்தில் டெங்கு நோயின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3200ஐ தாண்டியிருந்தது.

ஆனால் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் தற்போது வரை வட மாகாணத்தில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எணணிக்கை 6 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

இவ்வருடம் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் கடந்த வருடத்தைவிட இரு மடங்காக காணப்படுகின்றமை முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாக காணப்படுகின்றது.

கடந்த வருடம் வட மாகாணத்தில் டெங்கு நோயின் காரணமாக இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆனால் இவ்வருடம் இதுவரைக்கும் 7 பேர் டெங்கு நோயினால் வட மாகாணத்தில் உயிரிழந்துள்ளனர்.

வடமாகாணத்தில் மாவட்ட ரீதியாக பார்க்கும்போது யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமானோர் இனம் காணப்பட்டுள்ளனர்.

சுமார் 4700க்கும் மேற்பட்டோர் இவ்வருடம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏனைய மாவட்டங்களில் குறைவானவர்களே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயினால் மரணித்தவர்களில் 4 பேர் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக காணப்படுகின்றனர்.

எனவே யாழ் மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மிகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நிலை உள்ளது.

வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் கவனம செலுத்தப்பட வேண்டியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாடு தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சின் உதவியோடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

வடக்கில் தற்போது மழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

கணிசமான அளவு மழை யாழ் மாவட்டம் உட்பட ஏனைய மாவட்டங்களிலும் பெய்துள்ளது.



எனவே டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மழையின் மத்தியில் கவனமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மாகாணத்தின் வலுவை சகல விதத்திலும் பயன்படுத்தி மத்திய அரசின் உதவியோடு டெங்கு நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டிய தேவை உள்ளது.

குறித்த நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழுங்கினால் மட்டுமே டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்பாடிற்குள் கொண்டுவர முடியும் என வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் மேலும் தெரிவித்தார். (ம-4,281)

# புதிய அரசியலமைப்புக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்

## மெதடிஸ்த தேவாலயம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும் என்று மெதடிஸ்த தேவாலயம் கோரியுள்ளது.

இந்த அரசியலமைப்பை தடுத்து நிறுத்த மேற்கொள்ளபபடும் முயற்சிகளுக்கு அப்பால் இந்த ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டும் என்று தேவாலயம் கேட்டுள்ளது.

மெதடிஸ்த தேவாலய தலைவர் தந்தை ஆசிரி பெரேரா இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து (47%) மைத்திரிபால சிறிசேன (51%) வுக்கு மக்கள் வாக்களித்தமையானது அரசியல் அமைப்பை உருவாக்குவதன நோக்கத்திலேயாகும்.

அத்துடன் அடுத்து வந்த பொதுத்தேர்தலிலும் மக்கள் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்துக்காகவே வாக்களித்தனர் என்று ஆசிரி பெரேரா குறிப்பிட்டுள்ளதோடு, இதனை யாருமமறக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# நடராஜா ரவிராஜின் 11ம் ஆண்டு நினைவு இன்று

## அஞ்சலி நிகழ்வுக்கும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான நடராஜா ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 11 ஆண்டுகளாகின்ற நிலையில் சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது உருவச்சிலையில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இன்று காலை 9 மணியளவில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்பாக இந்த அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

எனினும் அஞ்சலி நினைவுரைகள் இன்றைய தினம் நடைபெறாது எனவும் பிறிதொரு தினத்தில் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

2006 நவம்பர் 10 வெள்ளிக்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு ரவிராஜ் தொலைக்காட்சி ஒன்றில் நடந்த ஒரு நேரடி நேர்காணல் ஒன்றில் பங்குபற்றிவிட்டு வீடு திரும்பி பின்னர் மீண்டும் வீட்டை விட்டு தனது வாகனத்தில் வெளியேறியபோது காலை 8.45 மணியளவில் கொழும்பு நாரகேன்பிட்டிய மனிங்டவுனில் உள்ள அவரது வீட்டுக்கருகில் விசையுந்து ஒன்றில் வந்த இரண்டு இனந்தெரியாதோரால் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ரவிராஜ் சிகிச்சை பலனின்றி காலை 9.20 மணிக்கு உயிரிழந்தார். ரவிராஜின் மெய்ப்பாதுகாவலரும் காவல்துறையினருமான லக்சுமன் லொக்குவெல்ல என்பவரும் இதன்போது கொல்லப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-4)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் இரண்டு கிலோ ஹெரோயினுடன் நாவற்குழி யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவரை நேற்று மாலை 4.00 மணியளவில் வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்பபாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்ற இ.போ.ச பேருந்தில் 2 கிலோ ஹெரோயினை பயணப்பொதியில் மறைத்து வைத்து கடத்தி செல்ல முற்பட்ட சமயத்தில் நாவற்குழி யாழ்ப்பாணத்தை சேர்ந்த 52 வயதுடைய நபர் ஒருவரை வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் வைத்து நேற்று மாலை 4 மணியளவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-281)

# ஆசிய குத்துச் சண்டை சம்பியன்ஷிப் மேரி கோம் தங்கம் வென்று அசத்தல்




வியட்நாமில் நடைபெற்று வரும் ஆசிய குத்துச்சண்டை போட்டிகளில் இந்தியாவின் மேரி கோம், தங்கப் பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

பெண்களுக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டிகளில் வியட்நாமின் ஹோசி மின்ஹ் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையும், ஐந்து முறை உலக சாம்பியன் பட்டம் வென்றவருமான மேரி கோம் 48 கிலோ எடைப்பிரிவில் எதிராளிகளை துவம்சம் செய்து தொடர்ந்து முன்னேறினார்.

அரையிறுதி போட்டியில் ஜப்பானின் டிசுபாசா கோமுராவை வீழ்த்திய மேரி கோம், நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் வடகொரியாவின் கிம் ஹியாங் மியை எதிர்கொண்டார். முதல் ரவுண்டில் இருந்தே இருவரும் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டு முன்னிலை பெறும் முனைப்புடன் களமிறங்கினர்.

முதல் ரவுண்டில் மேரி கோமுக்கு சற்று பின்னடைவு ஏற்பட்டது. ஆனால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, கிம் சுதாரிக்கத் தவறினார். அத்துடன் சில குத்துக்களையும் வாங்கியதால் சரிவு ஏற்பட்டது. இரண்டாவது மற்றும் மூன்றாவது ரவுண்டுகளிலும் ஆக்ரோஷம் குறைந்தது. கிடைத்த வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திய மேரி கோம் அடுத்தடுத்து தாக்க, 5-0 என்ற கணக்கில் அவர் வெற்றி பெற்றார்.

இதன்மூலம் முதல் முறையாக ஆசிய போட்டியின் 48 கிலோ எடைப்பிரிவில் தங்கம் வென்றுள்ளார். ஒட்டுமொத்தமாக ஆசிய போட்டியில் அவர் 5-வது தங்கப் பதக்கத்தை பெற்றுள்ளார். (க)

# இருபது-20 கிரிக்கெட்டில் ரன் ஏதும் கொடுக்காமல் பத்து விக்கெட்டுக்களையும் வீழ்த்திய சிறுவன்



ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூர் கிரிக்கெட்டில் எதிர் அணிக்கு ரன் ஏதும் கொடுக்காமல் 10 விக்கெட்டுகளையும் ஒரு சிறுவன் வீழ்த்தியது அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் பாவர் சிங் டி20 கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. உள்ளூர் மைதானத்தின் உரிமையாளர் தனது தாத்தாவின் நினைவாக இதை நடத்தினார். இந்த போட்டியில் இரண்டு கிரிக்கெட் அக்கடமியைச் சேர்ந்த அணிகள் மோதின.

முதலில் பட்டிங் செய்த திஷா கிரிக்கெட் அக்கடமி அணி 20 ஓவர் முடிவில் 156 ரன்கள் எடுத்தது. இரண்டாவது பட்டிங் செய்த பியர்ல் அக்கடமி அணி 36 ரன்களில் சுருண்டது. திஷா அணியின் வீரரான ஆகாஸ் சவுத்ரி ரன் எதுவும் விட்டுக்கொடுக்காமல் 10 விக்கெட்டுகளையும் வீழ்த்தி சாதனை படைத்தார்.


ஆகாஸ் தனது முதல் மூன்று ஓவரில் தலா இரண்டு விக்கெட்டை வீழ்த்தினார். கடைசி ஓவரில் ஹாட்ரிக் விக்கெட்டுடன் 4 விக்கெட் வீழ்த்தி அசத்தினார். மொத்தமாக தான் வீசிய 4 ஓவரில் எதிர் அணிக்கு எந்த ரன்னும் விட்டுக் கொடுக்காமல் 10 விக்கெட்டுகளையும் மொத்தமாக அள்ளினார்.

ஆகாஸ் ராஜஸ்தான் மாநிலம் பரத்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவர். 15 வயதான இவர் ஜெய்ப்பூரில் ஆரவல்லி கிரிக்கெட் கிளப்பில் யாதவ் என்பவரிடம் பயிற்சி பெற்று வருகிறார்.

ஆகாஷின் அதிரடியான ஆட்டம் அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பும்ரா, சஹாலை டெஸ்ட் அணியில் சேர்க்க வேண்டும்-காவாஸ்கர் கோரிக்கை



சிறப்பாக பந்துவீசி வரும் பும்ரா மற்றும் சஹாலை டெஸ்ட் அணியில் சேர்க்க வேண்டும் என்று முன்னாள் கேப்டனும், டெலிவிசன் வர்ணனையாளருமான கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான 20 ஓவர் தொடரை இந்திய அணி கைப்பற்றுவதற்கு வேகப்பந்து வீரர் பும்ரா, சுழற்பந்து வீச்சாளர் யசுவேந்திர சஹால் ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர்.

திருவனந்தபுரத்தில் நடந்த கடைசி போட்டியில் 8 ஓவரில் 68 ரன் இலக்கை வைத்து இந்த இருவரும் சிறப்பாக பந்துவீசி அணியை வெற்றி பெற வைத்தனர்.

இந்த நிலையில் பும்ராவும், சஹாலும் டெஸ்ட் அணிக்கு தயராகி விட்டதாக முன்னாள் கேப்டனும், டெலிவிசன் வர்ணனையாளருமான கவாஸ்கர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

பும்ராவும், சஹாலும் மிகவும் சிறப்பான நிலையில் உள்ளனர். இருவரது பந்துவீச்சும் மிகவும் அபாரமாக இருக்கிறது. எதிர் அணி பட்மேன்களை அச்சுறுத்தும் வகையில் வீசுகிறார்கள். ஐ.பி.எல். போட்டியில் பெற்ற அனுபவம் முழுவதையும் பயன்படுத்துகிறார்கள். எந்த பட்மேனுக்கு எந்த முறையில் எப்படி நேர்த்தியாக வீச வேண்டும் என்பதை இருவரும் நன்றாக அறிந்து வைத்து இருக்கிறார்கள்.

அனைவரது இதயங்களையும் கவர்ந்த பும்ரா, சஹால் ஆகியோரை டெஸ்ட் அணியில் சேர்க்கலாம் என்று கருதுகிறேன். தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற வலுவான அணிகளுக்கு எதிராக இருவரும் சிறப்பாக செயல்படுவார்கள். இருவரும் டெஸ்ட் அணியில் விளையாட தயார் நிலையில் உள்ளனர். இவ்வாறு கவாஸ்கர் கூறியுள்ளார்.

23 வயதான பும்ரா 28 ஒருநாள் போட்டி மற்றும் முப்பது 20 ஓவரில் விளையாடி மொத்தம் 92 விக்கெட் வீழ்த்தி உள்ளார்.

27 வயதான சஹால் 39 விக்கெட் (14 ஒருநாள் போட்டி, பனிரெண்டு 20 ஓவர்) எடுத்துள்ளார். (க)

# தேசிய சீனியர் பட்மிண்டன் போட்டி சிந்துவை வீழ்த்தி சாய்னா சாம்பியன்

நாக்பூரில் நடைபெற்ற தேசிய சீனியர் பேட்மிண்டன் தொடரின் இறுதி போட்டியில் பி.வி.சிந்துவை வீழ்த்தி சாய்னா நேவால் சாம்பியன் பட்டம் வென்றார்.

மராட்டிய மாநிலம் நாக்பூர் நகரில் 82ஆவது தேசிய சீனியர் பட்மிண்டன் போட்டிகள் நடந்து வருகின்றன. நேற்று நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதி போட்டியில் பி.வி.சிந்துவும் சாய்னா நேவாலும் மோதினர்.

ஆட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே இரண்டு வீராங்கனைகளும் சிறப்பாக விளையாடினர். ஒவ்வொரு பாய்ண்டுக்கும் இருவரும் தீவிரமாக போராடினர். ஆனாலும், முதல் செட்டின் இறுதியில் சாய்னா நேவால் 21 - 17 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தினார்.

இதையடுத்து, இரண்டாவது செட் தொடங்கியது. இதிலும் இரண்டு பேரும் தங்களது போராட்டத்தை தொடர்ந்தனர். சாய்னா நேவால் பாய்ண்ட் எடுத்த அடுத்த நிமிடம் பிவி சிந்துவும் அற்புதமாக விளையாடி பாய்ண்ட் எடுத்து வந்தார். இதனால் இரண்டாவது செட் எளிதில் முடியவில்லை.

இறுதியில், 27-25 என்ற கணக்கில் சாய்னா நேவால் வென்றார். இதைத்தொடர்ந்து 21-17, 27-25 என்ற நேர் செட்களில் சிந்துவை வீழ்த்தி சாய்னா நேவால் சாம்பியன் பட்டம் வென்றார். இது இவரது மூன்றாவது பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது




நாக்பூரில் நடைபெற்ற தேசிய சீனியர் பேட்மிண்டன் தொடரின் இறுதி போட்டியில் பி.வி.சிந்துவை வீழ்த்தி சாய்னா நேவால் சாம்பியன் பட்டம் வென்றார்.

மராட்டிய மாநிலம் நாக்பூர் நகரில் 82-வது தேசிய சீனியர் பேட்மின்டன் போட்டிகள் நடந்து வருகின்றன. இன்று நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதி போட்டியில் பி.வி.சிந்துவும் சாய்னா நேவாலும் மோதினர்.

ஆட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே இரண்டு வீராங்கனைகளும் சிறப்பாக விளையாடினர். ஒவ்வொரு பாய்ண்டுக்கும் இருவரும் தீவிரமாக போராடினர். ஆனாலும், முதல் செட்டின் இறுதியில் சாய்னா நேவால் 21 - 17 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தினார்.

இதையடுத்து, இரண்டாவது செட் தொடங்கியது. இதிலும் இரண்டு பேரும் தங்களது போராட்டத்தை தொடர்ந்தனர். சாய்னா நேவால் பாய்ண்ட் எடுத்த அடுத்த நிமிடம் பிவி சிந்துவும் அற்புதமாக விளையாடி பாய்ண்ட் எடுத்து வந்தார். இதனால் இரண்டாவது செட் எளிதில் முடியவில்லை.

இறுதியில், 27 -25 என்ற கணக்கில் சாய்னா நேவால் வென்றார். இதைத்தொடர்ந்து, 21-17, 27-25 என்ற நேர் செட்களில் சிந்துவை வீழ்த்தி சாய்னா நேவால் சாம்பியன் பட்டம் வென்றார். இது இவரது மூன்றாவது பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## மின்சார வாகனங்களுக்கு...

சாரதிகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது 1.3 மில்லியன் முச்சக்கரவண்டி சாரதிகள் உள்ளனர். அவர்களை மையப்படுத்தி Tourist Board Approved Tuk Tuk எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன்மூலம் முச்சக்கரவண்டி சாரதிகளை தொழில் முயற்சியாளர்களாக மாற்றி, அவர்களின் பொருளாதார நிலையை ஊக்குவிக்க திட்டமிட்டுள்ளதாக நிதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அதிசொகுசு வாகனங்களுக்கு விசேட சொகுசு வரியை அறவிடவும் இலத்திரனியல் வாகனங்களுக்கு 10 இலட்சம் ரூபா இறக்குமதி வரியை நீக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டில் பயன்பாட்டில் உள்ள முச்சக்கரவண்டிகளை பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளுக்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டிகளுக்கான மானி கட்டாயமாக்கப்படும் எனவும் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மின்சாரத்தில் இயங்கும் விளையாட்டு வாகனங்களுக்கான இறக்குமதி வரியைக் குறைக்கவும் நிதியமைச்சால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கரவண்டிகள் மற்றும் பஸ்களுக்கு வரி மானியம் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தில் இயங்கும் 50 பஸ்களை கொள்வனவு செய்வதற்காக இலங்கை போக்குவரத்து சபைக்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களுக்காக நாடளாவிய ரீதியில் 63 மின்னூட்டமேற்றும் நிலையங்களை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நிதியமைச்சர் வரவு செலவுத் திட்ட உரையில் தெரிவித்தார்.

2500CC வலுவிற்கு மேற்பட்ட வாகனங்களுக்கு அதிசொகுசு வரி விதிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் காற்றுப்பை (Air Bag) இல்லாத வாகனங்களை இறக்குமதி செய்ய தடை விதிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2040 ஆம் ஆண்டளவில் நாட்டின் பாவனையில் உள்ள அனைத்து வாகனங்களையும் பெற்றோலிய எரிபொருள் பாவனையற்றவையாக மாற்றும் திட்டம் அரசாங்கத்திற்கு உள்ளதாகவும் நிதியமைச்சர் சுட்டிக்காட்டினார். (ம)

## துண்டு விழும்...

அமைச்சர் மங்கள சமரவீரவினால் நேற்று மாலை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தற்பொழுது உள்ள தொழிலாளர் மற்றும் வர்த்தக சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதன் அவசியங்களையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த சட்டங்கள் தொழிற்துறையை சார்ந்தவர்களுக்கும் ஊழியர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். அத்தோடுநாட்டின் தேசிய வளப்பயன்பாட்டிற்கும் ஊக்குவிப்பதாக அமைய வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சுகாதாரம், பெருந்தோட்டம், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் நலன் பெருந்தோட்ட துறை மக்களின் நலன், பல்கலைக்கழக கல்வி, போக்குவரத்து, சுற்றுலா, கல்வி, கைத்தொழில், பல்கலைக்கழக கல்வி, பொதுக்கல்வி, போக்குவரத்து, கடல்வளத்தை மையமாகக் கொண்ட நீலப்பசுமை எண்ணக் கருவுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையிலான முன்மொழிவுகளை நேற்று நிதியமைச்சர் பாராளுமன்றத்தில் முன்மொழிந்தார்.

நாட்டில் மாணிக்ககல் துறையை மேம்படுத்துவதற்கும் இதில் யோசனைகள் உள்ளடங்கியுள்ளன.

நீலப்பசுமை திட்டத்தின் கீழ் சுற்றாடலுக்கு உகந்த வாகன இறக்குமதி தொடர்பில் பாரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கான முன்மொழிவுகளையும் அமைச்சர் முன்வைத்தார்.

இதற்கமைவாக தற்சமயம் பாவனையில் உள்ள எரிபொருளில் இயங்கும் வாகனங்களுக்க பதிலான சுற்றாடலுக்கு பொருந்தும் மின்சார வாகனங்களை ஊக்குவிப்பதற்கான முன்மொழிவுகளும் இடம்பெற்றன.

இதன்கீழ் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களையும் கைபிறிட் என்ற கலப்பு வாகனங்களுக்கான இறக்குமதி வரிச்சலுகையையும் அமைச்சர் முன்மொழிந்தார்.

2040ம் ஆண்டளவில் மசகு எண்ணெய்க்கு பதிலாக மாற்று வலுசக்திகளை கொண்ட வாகனங்களுக்கான பயன்பாட்டிற்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எமது அயல்நாடான இந்தியா இதற்கான திட்டத்தை 2035ஆம் ஆண்டளவில் பூர்த்திசெய்யதிட்டமிட்டுள்ளதென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

2025ஆம் ஆண்டளவில் மின்சாரத்தில் இயங்கும் அல்லது கலப்பு வாகனங்களாக மாற்றப்படும். மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கரவண்டிகளும் மின்சார பஸ் வண்டிகளும் இறக்குமதி செய்யப்படவுள்ளன. இதற்கான இறக்குமதி வரியும் குறைக்கப்படும்.

பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் தமது முச்சக்கர வண்டிகளை பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஊக்கு விப்புகளும் வழங்கப்படவுள்ளன.

வாகனங்களுக்கான காபன் வரியை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதிசொகுசு வாகனங்களுக்கு 25 இலட்சம் ரூபா வரி விதிக்கப்படவுள்ளது. அடுத்த வருடத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கென மின்சாரத்திலியங்கும் 50 பஸ் வண்டிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இதற்காக 50 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

அரச ஊழியர்களுக்கான பொது சம்பள கொடுப்பனவு முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பில் அமைச்சர் விபரிக்கையில்,

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடு பற்றி முழுமையாக ஆராயப்படவுள்ளது. அரச ஊழியர்களின் பிள்ளைகளுக்காக பாதுகாப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. ஓய்வூதியம் பெறுவோருக்கு வாழ்நாள் முழுவதும் அக்ரஹார காப்புறுதி முறைமையை தவணை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அரச ஊழியர்களுக்கு வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான தீர்வையற்ற நிவாரணமும் வழமையான முறையில் அமுல்படுத்தப்படவுள்ளது.

முச்சக்கரவண்டிகளை ஒழுங்குறுத்துவதற்கான அதிகார சபையொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளதோடு முச்சக்கரவண்டி சாரதிகள் சுற்றுலா பயண வழிகாட்டிகளாக பயிற்றுவிக்கப்படுவார்கள்.

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையில் இணைந்து கொள்ளும் இலங்கை இராணுவ வீரர்களுக்கு விசேட பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

நிதி மோசடி, ஊழல் கூட்டாக இணைந்து குற்றச்செயல்கள் என்பன பற்றி வழக்குகள் தாமதமடைவதை தடுப்பதற்கான விசேட நீதிமன்றம் ஒன்றும் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

நீதிமன்றங்களில் வழக்குகள் தாமதமடைவதை தடுப்பதற்காக நீதிமன்ற நிர்வாக முறைமை, உட்கட்டமைப்பு வசதிகள் என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (ம)

## புனர்வாழ்வளிக்கப்பட...

நலன்புரிமுகாம்களில் தங்கியிருப்போரை மீளக்குடியமர்த்த 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு, காணாமல் போனோரின் அலுவலகத்தை செயற்படுத்த 1.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

வடக்கு கிழக்கு மக்களின் மீள்குடியேற்ற வீடமைப்பு நடவடிக்கைகளுக்காக 3000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ம)

## பட்ஜெட்டின் போது...

'யானது சபையில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த வரவு-செலவுத்திட்டம் தொடர்பில் மக்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பு காணப்பட்ட நிலையில், இவ்வாறு இருள் சூழ்ந்தமையானது அபசகுனம் என அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டுள்ளனர். (ம)

# ஜெயா டி.வி அலுவலகம்-சசிகலா உறவினர் வீடுகளில் வருமான வரித்துறை சோதனை

(சென்னை)

சசிகலா உறவினர்கள் இல்லத்தில் நேற்று நடத்தப்பட்ட ரெய்டில் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக வருமான வரித்துறை அதிகாரிகள் தகவல் அளித்துள்ளனர்.

சசிகலா குடும்பத்தினர் வசம் இருக்கும் ஜெயா டி.வி, நமது எம்.ஜி.ஆர் நாளிதழ் உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட இடங்களில் நேற்று காலை சுமார் 7 மணி முதல் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி சசிகலாவின் உறவினர் இளவரசியின் மகள் கிருஷ்ணபிரியாவின் இல்லம், ஜெயா டி.வி இயக்குநர் விவேக் இல்லம் மற்றும் மன்னார் குடியில் உள்ள சசிகலாவின் உறவினர்கள் இல்லத்திலும் சோதனை நடைபெற்றது.

ஜாஸ் சினிமாஸ் அலுவலகம், சசிகலா ஆதரவாளர் புகழேந்தி இல்லம், டி.வி தினகரன் இல்லம் ஆகியவற்றிலும் சோதனை நடந்தது. சசிகலா குடும்பத்தினர் மட்டுமல்லாது அவரது ஆதரவாளர்களின் இல்லத்திலும் சோதனை நடைபெற்றது. சுமார் 1800 அதிகாரிகள் மொத்தமாக இந்த சோதனைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஜெயலலிதாவின் உதவியாளர் பூங்குன்றன் இல்லம், கோடநாடு எஸ்டேட் பங்களா என தொடரும் இந்த சோதனைகள் அரசியல் உலகில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. பல இடங்களில் நடத்தப்பட்ட இந்த சோதனையின் போது முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர். (ம)

# பல்கலை பாடத்திட்டங்களில் கற்பிக்கும் முறையில் மாற்றம்

(கொழும்பு)

விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல மற்றும் மருத்துவ (STEM Subjects) பாடங்களை கற்பிப்பதற்கான முறைமை மாற்றியமைக்கப்படும் என்று வரவு செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவைக் கேற்றவாறு பாடத்திட்டத்தை மறுசீரமைப்பு செய்யும் நோக்கத்துடன் மாணவர்களுக்கு கணித உபகரணங்கள் வழங்கப்படுவதுடன் கணித ஆய்வு கூடங்களும் தரமுயர்த்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

அதேவேளை அனைத்து பல்கலைக்கழக மாணவர்களுக்கும் சுகாதார காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

மகாபொல புலமைப் பரிசில் திட்டத்திற்கான தகைமைபெறும் குடும்ப வருமான எல்லையினை ஆண்டொன்றுக்கு ரூபாய் 3 இலட்சத்திலிருந்து ரூபா 5 இலட்சமாக அதிகரிப்பதுடன், இதன்மூலம் மேலதிகமாக 3 ஆயிரம் மாணவர்கள் நன்மையடைவர் என்றும் நிதியமைச்சர் மங்கள சமரவீர கூறினார். (ம)

# நெடுந்தீவு, கிளிநொச்சியில் பனைவளத்தை மேம்படுத்த 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு, கிளிநொச்சி பிரதேசங்களில் பனை வளத்தை மேம்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழிவகை செய்யும் வகையில் வரவு செலவுத்திட்டத்தில் 40 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மயிலிட்டி துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. மீனைக் களஞ்சியப்படுத்துவதற்கான குளிர்சாதன வசதிகளுக்காக 150 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலி தொழிற்பேட்டையில் மின்சார வசதிகளை மேற்கொள்வதற்கான செலவில் 50 சதவீதத்தை அரசு பொறுப்பேற்கின்றது.

வடக்கு கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதுமான வீடுவசதி இல்லை. 2018ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இந்த வீட்டுத் தேவையை நிறைவு செய்வதற்காக மூவாயிரம் மில்லியன் ரூபா நிதி உதவி. காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவலக பணிகளுக்கு 1.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் நல்லிணக்க திட்டத்தின் கீழ் பெண்களுக்கான உதவிகளை மேற்கொள்வதற்காக வடக்கில் சிறப்புத் தேவையை மேம்படுத்த நடவடிக்கை.

கடலட்டைகளுக்கு சிறந்த கேள்விகள் உண்டு. இத்தொழிற்துறையை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் கடல் அட்டைகள் மத்திய நிலையம் கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ளது. (ம)

# சம்பந்தன் துணையோடுதான் சுமந்திரன் கூட்டமைப்புக்குள் நுழைந்தார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

(கொழும்பு)

சம்பந்தனின் துணையோடுதான் சுமந்திரன் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் அரசியலுக்குள் 2010ஆம் ஆண்டில் வந்தார். பின்னர் அவர் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தராக -அதன் பேச்சாளரானார்,

இவ்வாறு ஈபிஆர்எல்எப் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், இருபாலையிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்த செய்தியாளர்களிடமே சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனைத் தெரிவித்தார். (ம)

# இந்த வரவு செலவுத் திட்டமும் அழகான கதை – மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

இந்த வரவு செலவுத் திட்டத்தில் அழகான கதைகள் உள்ளதாகவும் கடந்த வரவு செலவுத் திட்டத்திலும் இதேபோன்றுதான் காணப்பட்டதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்வைக்கப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் 3 வீதமாவது நிறைவேற்றப்பட வில்லை. சில அமைச்சுக்களுக்கு ஒரு சதம் கூட செல்லவில்லை. இந்த வரவு செலவுத் திட்டத்தையும் செயற்பாட்டின் போதுதான் பார்க்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (பு)

## பட்ஜெட்- 20...

இதற்கமைய, இதில் முன்மொழியப்பட்டுள்ள விடயங்களாவன,

பெற்றோல் உள்ளிட்ட எரிபொருள் பயன்படுத்தும் வாகனங்களுக்கு பதிலாக ஹைபிரீட் வாகனங்களை அறிமுகப்படுத்த முன்மொழிவு,

இதற்கமைய, ஹைபிரீட் வாகனங்களுக்கு வரிச் சலுகைகள் வழங்க யோசனை,

மின்னியல் முச்சக்கரவண்டிகளை கொள்வனவு செய்வதற்கு ஊக்குவிக்கும் பொருட்டு, டீசல் முச்சக்கரவண்டிகளுக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்படும்,

ஆடம்பர கார்கள் மீது ஒரு சிறப்பு வரி விதிக்கப்படும்,

இயந்திரத் திறனைப் பொறுத்து, வாகன இறக்குமதிகளுக்கான வரிகள், மீள்திருத்தம் செய்யப்படும்,

மின்சார கார்களின் இறக்குமதி வரி குறைந்தபட்சம், ஒரு மில்லியன் ரூபாய் குறைக்கப்படும்,

2018 ஆண்டளவில் புத்தளம், யாழ், மட்டக்களப்பு, யாழ், நந்திக்கடல், போன்ற 10 களப்புகளை புனரமைக்க 10 மில்லியன் ஒதுக்கீடு,

பொலன்நறுவை, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் விவசாய களஞ்சியசாலைகளை நிர்மாணிக்க யோசனை,

கடல்அட்டைகள் பிடிக்க, பாதுகாக்க கிளிநொச்சியில் - பூநகரியில் விஷேட நிலையம் அமைக்க ஏற்பாடு,

ஆழ்கடல்மீன்பிடிப்புக்காக 55 அடி நீளமான இழுவைப் படகுகளின் செலவு வீதத்தில், 50 வீதத்தை அரசு பொறுப்பேற்க உத்தேசம்,

மட்டக்களப்பில் நீர்வாழ் உயிரியல் பூங்காவுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க முன்மொழிவு,

பயிர் காப்பீட்டுத் திட்டத்துக்கு, 3 பில்லியன் ரூபாய் ஒதுக்கிட யோசனை,

சில கடன் தொடர்பான சலுகைகளை வழங்கவும் முன்மொழிவுகள் வழங்கப்பட்டுள்ளன,

பெண்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வெற்றியடைய 100க்கு 10 வீதத்தை விட வட்டி சலுகை கடன்,

சுயதொழில் புரிவோருக்கான கடன் திட்டத்துக்கு, 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு,

விசேட தேவையுடைய நபர்களால்முன்னெடுக்கப்படும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வரி நிவாரணம் வழங்கவும் முன்மொழிவு,

கறுவா போன்ற வாசனை திரவியங்களின் தரத்தை பாதுகாக்க நடவடிக்கை,

சிறுதோட்ட தேயிலை உரிமையாளர்களை பாதுகாக்க 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்,

2025ஆம் ஆண்டளவில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை மூன்று மடங்காக அதிகரிக்க திட்டம்,

மதுருஓய, கல்லோயா தேசிய சரணாலயங்களை புனரமைக்க உத்தேசம்,

கோட்டை, நானு-ஓயா மற்றும் எல்ல ஆகிய புகையிரத நிலையங்கள், தொல்பொருள் இடங்களாக பிரகடனம் செய்ய யோசனை,

அனைத்து சுற்றுலாத்துறை சேவை வழங்குநர்களையும் இலங்கை சுற்றுலாத்துறை சபையின் கீழ் பதிவு செய்யுமாறு வலியுறுத்தல்,

அன்னாசி, வாழைப்பழத்தின் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக, கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு, விசேட ஆராய்ச்சி நிலையம்,

தேசிய தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரியை ஒரு வருடத்திற்கு நீக்க யோசனை,

பொலநறுவை, கிளிநொச்சி, இரத்தினபுரி ஆகிய பகுதிகளில் நெற்களஞ்சியசாலைகளின் நிர்மாணப் பணிகளை விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை,

மோட்டார் சைக்களில், கார் மற்றும் பஸ் தொடர்பில் காபன் வரியை அறிமுகப்படுத்த யோசனை,

எதிர்கால தொழிற்சந்தைக்கு ஏற்றவாறு பாடசாலை மாணவர்களைத் தயார்படுத்த பாடவிதானத்தில் ரோபோ மற்றும் நானோ தொழில்நுட்பம் உள்ளிட்ட பாடநெறிகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்,

சுதேச வைத்திய பட்டப்பின் படிப்பிற்காக விசேட கற்கை நிறுவனம் அமைக்கப்படும்,

மகாபொல பெறும் பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்,

சப்ரகமுவ, மொரட்டுவ, வயம்ப பல்கலைகழகங்களில் மருத்துவ பீடங்களை அமைக்க ஆயிரத்து 250 மில்லியன் ஒதுக்கீடு,

சுவிஸ்லாந்து, ஜேர்டன் ஒத்துழைப்புடன் புதிய ஐந்து தொழிற்பயிற்சி நிலையங்கள் பதுளை, கண்டி, திருகோணமலை, அநுராதபுரம் போன்ற பகுதிகளில் நிறுவ யோசனை,

யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை அபிவிருத்தி செய்ய, தகவல் மத்திய நிலையம், பொது நூலகம் போன்றவற்றை நிறுவ 200 மில்லியன் ஒதுக்கிட யோசனை,

வடக்கு, கிழக்கு மக்களை மீள்குடியேற்ற வீடமைப்பு நடவடிக்கைகளுக்காக 3ஆயிரம் மில்லியன் ஒதுக்கிட யோசனை,

சிவனொளிபாத மலை, முன்னேஸ்வரம், கோணேஸ்வரம், மடு உள்ளிட்ட புனிதத் தலங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை,

மண்சரிவு அபாயம் காரணமாக இரத்தினபுரி, வெலிமடை பகுதிகளில் உள்ள நீதிமன்ற கட்டடங்களை வேறு இடங்களுக்கு மாற்ற நடவடிக்கை,

காணாமல் போனோர் அலுவலகத்தை செயற்படுத்துவதற்கு 1.4 பில்லியன் ரூபாய் ஒதுக்க யோசனை,

கலைஞர்களுக்கான மருத்துவ காப்பீடு வழங்க உத்தேசம்,

பழமை வாய்ந்த பொருளாதாரத்துடன் தொடர்புடைய சட்டங்களை மறுசீரமைக்க நடவடிக்கை,

வரி இன்றி விளையாட்டு வீரர்களுக்கு தேவையான சப்பாத்துக்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை,

விளையாட்டு அகடமி, விளையாட்டு பயிற்சி நிலையங்களை நிறுவ ஆயிரத்து 500 ஒதுக்கீடு,

திகன, பொலநறுவை, கல்முனை ஆகிய பகுதிகளிலுள்ள மைதானங்களை இரு வருடங்களில் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது,

வடக்கில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்காக வீடமைக்க 2.5 மில்லியன்,

2018 ஏப்ரல் முதலாம் திகதி முதல் அனைத்து வங்கியூடான கொடுக்கல் வாங்கல்களின் போதும் ஆயிரம் ரூபாயற்கு 20 சதம்விசேட வரிஅறவிட நடவடிக்கை

2018 ஏப்ரல் முதலாம் திகதி முதல் மதுபான இறக்குமதிக்கு தேசத்தைக்கட்டியெழுப்பும் வரி. (ம)


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 12.10.2017 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்



(C-340)

### அமரர் பழனி நாகேந்திரம்

அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை (11.11.2017) சனிக்கிழமை பகல் 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.18, முருகன் கோவில் வீதி, குமரபுரம் பரந்தன்.

தகவல் : குடும்பத்தினர் 0773927328, 0777476753



## மரண அறிவித்தல்



### சங்கரப்பிள்ளை அரியராசா

(ப.நோ.கூ. சங்கம் சுன்னாகம் ஓய்வுநிலை வர்த்தக முகாமையாளர்)

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை அரியராசா நேற்று (09.11.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற புவனேஸ்வரி (ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், ஜயந்தன் (லண்டன்) அவர்களின் அன்புத் தந்தையும், சுகன்யா அவர்களின் மாமனாரும், அஜனி, அரன், ஆரூரன், அரிசன் ஆகியோரின் பேரனும், இராசமணி, காலஞ்சென்ற கணேசரட்ணம் மற்றும் புஸ்பலீலாவதி, செல்வராசா, மகேஸ்வரன், சிவயோகமணி ஆகியோரின் சகோதரரும், பொன்மணி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற தர்மலிங்கம், சண்முகநாதன், கௌசலாதேவி, தெட்சணாமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

"குமரஸ்தான்" இணுவில் மேற்கு, இணுவில். (1284)

தகவல்: த.சிவகுமாரன் (மருமகன்) 021 224 1379


## இரா...

போதே ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா. அமைதி காப்புப் பிரிவுக்கு உறுதுணையாக இருக்கும் எந்தவொரு துருப்புக்களும் எந்த மனித உரிமை மீறல்களையும் கொண்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன.

தற்போது எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐ.நாவின் அமைதிகாப்பு நடவடிக்கைகள் திணைக்களம் மற்றும் புலம் பெயர் ஆதரவுத் திணைக்களம் ஆகிய இந்தக் குற்றச்சாட்டுக்களை ஆராயும் என்றும் அவர் குறிப்பிட்டார்.(ம)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532



### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- [illegible]
- [illegible]
- [illegible]

(C-303)

UK-550/=Kg மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில் DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

அமெரிக்க லொத்தர் விசா (Green Card) முடிவடைய இன்னும் சில நாட்களே உள்ளன. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு இல் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் 021 221 5656 070 330 5500 (C-288)

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | மீசாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா



### விற்பனைக்கு

பருத்தித்துறை மாதனைப் பகுதியில் குடியிருப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 493 9285 (C-339)



### வீடு விற்பனைக்கு

கந்தர்மடம், மணல்தறை ஒழுங்கையில் 17/2B, இலக்கத்தைக் கொண்ட மேல்மாடி வீடு சகல வசதிகளுடனும் (ஆலடிச் சந்தியிலிருந்து 75 யார் தூரத்தில்) விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை.

தொடர்புகளுக்கு: 077 969 8942 (1259)



### போட்டிப்பரீட்சைக்கான வகுப்புக்கள்

வடமராட்சி மாணவர்களின் நன்மை கருதி

திட்டமிடல் சேவை (open/ limited) ஞாயிறு காலை 9.30 am - 2.00 pm

நிர்வாக (suppra) உத்தியோகத்தர் சேவை. ஞாயிறு 9.00 am - 2.00 pm

ஆசிரியர் சேவை/ கூட்டுறவு பரிசோதகர் சேவை சனி 9.00 am - 2.00 pm

EB வகுப்புக்கள் ஞாயிறு 9.00 am - 2.00 pm

இடம்: புதிய உயர் கல்லூரி பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

தொடர்பு: 077 876 0992 (C-342)



### அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

இன்னும் ஒரு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

0768226243


பெரும்பாலும் அடுத்த வருடம் இந்த இலவச விசா வாய்ப்புக்கள் இருக்காது. ஆகவே இப்போதே முந்துங்கள்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

கொட்டும் மழையிலும் குழந்தைகளுடனான சிரமத்தினையும் பாராது நானும் எனது மனைவியும் V2 TRAVELS இல் அமெரிக்கா லொத்தர் விசாவிற்கு பதிவு செய்தோம். கைமேல் பலனாக இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் இருக்கிறோம். திறமையாக பதிவுசெய்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



வே.கமலேந்திரன் -குடும்பம் அமெரிக்கா விசா வெற்றியாளர் (C-303)

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள் V2 TRAVELS

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி | 10, பேருந்து நிலையம் | மூடக்காட்டு சந்தி | 324, யாழ் பிரதான வீதி | யாழ் வீதி, வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.